Registered as a News paper in Ceylon ★ ★ விலை சதம் 20

# ஈழநாடு

வாரமலர்

மலர் 12 | ஐப்பசி 20 | றம்ழான் 6 | (6—11—70) | வெள்ளிக்கிழமை | இதழ் 267

10 மில்க் வைற் நீலசோப்
மேலுறைகளை அனுப்பி சுவாமி சிவானந்தரின் "சீரிய போதனைகள்" (SADHANA TATTWA & GOOD ADVICE) என்னும் புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளவும்.
மில்க் வைற் சோப் தொழிற்சாலை
த. பெ. இல. 77
யாழ்ப்பாணம்,

## பழைய 50, 100 ரூபா நோட்டுக்கள்

# ரூ. 40 கோடி வங்கியில் வைப்பு 10 கோடி மாற்றப்பட்டது

## மத்திய வங்கி புள்ளி விபரம்

கோட்டை, வியாழன்

**50, 100 ரூபா நோட்டுக்கள் செல்லுபடியாகாதென அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து இதுவரை சுமார் 50 கோடி ரூபாய் வங்கியில் மாற்றியும், வைப்புப் பணமாகச் செலுத்தப்பட்டும் இருக்கிறது. மத்திய வங்கி சேகரித்த தற்காலிக புள்ளிவிபரத்திலிருந்து இது கணக்கிடப்பட்டது.**

நாடு பூராவுமுள்ள வங்கிகளிலிருந்து இதுவரை முழு விபரமும் கிடைக்கப்பெறவில்லை. கிடைத்த விபரங்களின்படி 39 கோடியே 79 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் வைப்புக் கணக்கில் போடப்பட்டுள்ளது. 10 கோடியே 2 இலட்சத்து 57 ஆயிரம் ரூபா மாற்றப்பட்டு புதிய நோட்டுக்கள் பெறப்பட்டுள்ளன

பெருந்தொகையான பணத்தைப் பதுக்கி வைத்திருப்பவர்கள் என்று கருதப்படும் 'பணப் பதுக்கல்காரர் இனிமேல்தான் வெளிப்படுவர் என்றும், இவர்கள் இம்மாதம் 15-ந் திகதிக்குமுன்னர் தங்கள் கைவசமுள்ள பழையநோட்டுக்களை வங்கிகளில் செலுத்துவார்களென்றும் அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

79 கோடியே 60 லட்சம் ரூபா பெறுமதியான பழைய 50, 100 ரூபா நோட்டுக்கள் புழக்கத்திலிருந்ததாக அண்மையில் அரசாங்கம் வெளியிட்ட புள்ளிவிபரம் ஒன்று தெரிவித்தது. இதில் 100 ரூபா நோட்டுக்களில் 43 கோடியே 60 லட்சம் ரூபாவும், 50 ரூபா நோட்டுக்களில் 36 கோடி ரூபாவும் புழக்கத்திலிருந்தன மத்தியவங்கி வெளியிட்ட தற்காலிக புள்ளி விபரப்படி சுமார் 30 கோடிரூபாய்இன்னும் வெளிப்படுத்தப்படவிருக்கிறது.

## பெற்ற பரிசை எம். ஜி. ஆரும் சௌகாரும் தானம் வழங்கினர்

சென்னை, நவ. 5

1970-ம் ஆண்டு சிறந்த படம் என தமிழக அரசின் பரிசைப் பெற்ற 'அடிமைப் பெண்'. தயாரிப்பாளரான திரு. எம். ஜி. ராமச்சந்திரனுக்கு நேற்று வழங்கப்பட்ட பரிசுத் தொகையை அவர் கல்விப்பணி நிவாரண நிதிக்கு வழங்கினர்.

சிறந்த நடிகைக்கான பரிசைத் தட்டிக்கொண்ட சௌகார் ஜானகி அவரது பரிசை பிச்சைக்கார நிவாரண நிதிக்கும். சிறந்த தயாரிப்பாளர் பரிசைப்பெற்ற 'தெய்வ மகன்' தயாரிப்பாளர் திரு. பெரியண்ணன் தமது பரிசை முதலமைச்சர் நிவாரணநிதிக்கும் வழங்கினார்கள்.

தமிழக அரசாங்கம் பரிசுகளை நேற்று வழங்கியது. இதில் கலந்துகொண்டு பேசிய பரிசுக்குழு தலைவர் திரு மு வரதராஜன் கலைக்கண்ணோட்டத்திலேயே பரிசு பெறுபவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும், இதில் அரசியற்கண்ணோட்டமோ, செல்வாக்குகளோ இருக்கவில்லை என்று குறிப்பிட்டார் தங்கள் முடிவில் அரசாங்கம் தலையிடவில்லை என்றும் சொன்னார்

சிறந்த நடிகரெனத் தெரிவு செய்யப்பட்ட திரு சிவாஜிகணேசன் தமது பரிசைப் பெற்றுக்கொள்ளவில்லை (இந்தப் பரிசை ஏற்கப்போவதில்லை என இவர் ஏற்கனவே அறிவித்திருந்தார்)

இரண்டாவது சிறந்த படமாகத் தெரிவு செய்யப்பட்ட 'அக்கா தங்கை' தயாரிப்பாளரும் பரிசைப் பெற் [illegible] வோருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. சிறந்த இசை அமைப்பாளர் கே வி மகாதேவன். சிறந்த துணை நடிகர் மேஜர் சுந்தரராஜன். துணை நடிகை பண்டரிபாய். சிறந்த பின்னணிப் பாடகி சுந்தராம்பாள்.

### மரண அறிவித்தல்

**தில்லையம்பலம் முருகேசு**

கந்தரோடையைச் சேர்ந்த மலாயன் பென்சனர் திரு. தில்லையம்பலம் முருகேசு காலமாகிவிட்டார். இவர் சின்னம்மாவின் அருமைக் கணவரும், வேலுப்பிள்ளை கண்மணி, கிருஷ்ணர் சரஸ்வதி ஆகியோரின் தந்தையும், மலாயாவிலிருக்கும் ஓய்வுபெற்ற அப்போதிக்கரி திரு த. வேலுப்பிள்ளை. மட்டக்களப்பு கூட்டுறவுப் பரிசோதகர் திரு. சு. கிருஷ்ணர் ஆகியோரின் மாமனும், திருவாளர்கள் செல்லையா, கணபதிப்பிள்ளை, (மலாயன் பென்சனர்கள்), திருமதி தம்பிஐயா செல்லம்மா, காலஞ்சென்ற கந்தையா சரவணமுத்து, மாணிக்கம் பசுர்வதிப்பிள்ளை, முருகேசு வள்ளியம்மை ஆகியோரின் சகோதரருமாவர். அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து ஈமக்கிரியைகளுக்காக சங்கம்புலோ மயானத்துக்கு இன்று (6-11-70) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

2542

## "தொண்டமானாறு—கிளிநொச்சி பஸ்சேவை வேண்டும்"

கிளிநொச்சி, வியாழன்

இங்குள்ள அரசாங்க இலாகா உத்தியோகத்தர்கள் தனியார்துறை ஊழியர்கள் ஆகியோர் தமக்குத்தினமும் தொண்டமானாற்றில் இருந்து - கிளிநொச்சிவரை பஸ்சேவை ஒன்றை ஆரம்பிக்குமாறு இ. போ. ச. தலைவரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவர்கள் தமது வேண்டுகோளில், தனியார்வாகனங்கள் தினமும் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிவரை சேவை செய்யும்போது இ. போ. ச. வினர் வடமராட்சியில் இருந்து கிளிநொச்சிக்கு பஸ்சேவையை நடாத்தாமலிருப்பது வேதனைக்குரியதாகும் என்று தெரிவித்துள்ளனர். தினமும் காலையிலும் மாலையிலும் இருபஸ்சேவைகளை நடத்தும்படி இவர்கள் கேட்டுள்ளனர்.

### இடமாற்றம் செய்ய முயற்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

மன்னார் தாழ்வுப்பாட்டுக் கிராமத்தில் கடந்த சில தினங்களுக்குமுன்னர் நடைபெற்ற இராணுவத் தாக்குதல் சம்பவத்தின் பின்னரும் தள்ளாடி இராணுவ முகாமில் நியமிக்கப்பட்டுள்ள இராணுவ வீரர்களை இடமாற்றம் செய்யும்முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

இவர்கள் வருகிற ஆண்டிலிருந்துஇடமாற்றம் செய்யப்படலாமெனத் தெரிகிறது.

கும்பகோணம்

### ராஜமாணிக்கம்பிள்ளை காலமானார்

சென்னை, நவ. 5

பிரபல வயலின் வித்துவான் கும்பகோணம் ராஜமாணிக்கம்பிள்ளை இன்று அதிகாலை கும்பகோணத்திலுள்ள தமது இல்லத்தில் காலமானார். இறக்கும்போது இவருக்கு வயது 73.

## கந்தரோடையில் திருடர் கைவரிசை; ஐவர் கைது

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்தபலநாட்களாக சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் தங்கள் கைவரிசையைக் காட்டிவந்ததிருடர்கோஷ்டி ஒன்றைஇப்பகுதிப் பொதுமக்கள் கடந்த நள்ளிரவு ஆலயமொன்றின் முன் வைத்துக் கையும்மெய்யுமாகப் பிடித்து பொலிசில் ஒப்படைத்தனர்.

இப்பகுதியிலுள்ள வீடுகளில் சருவக்குடம், துணிமணி போன்ற பொருட்கள் அடிக்கடி களவுபோவதாகப் பொலிஸில் புகார் செய்யப்பட்டிருந்தபோதிலும், கள்வரைப் பிடித்துக்கொள்ள முடியவில்லை. இக்கோஷ்டியைப் பிடிப்பதற்காக இரவிரவாக வீதிவழியே சென்ற பொதுமக்கள்கோஷ்டி கந்தரோடையில் உள்ள ஆலயமொன்றில் திருட முயற்சித்துக்கொண்டிருந்த 5பேர் கொண்ட கோஷ்டியைக் கலைத்துப்பிடித்தது

இவர்கள் வெவ்வேறு ஊர்களைச் சேர்ந்தவர்களென்று விசாரணையில் தெரியவந்தது. 5 பேரும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

### பொன்விழா

புதுடில்லி, நவ. 5

இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் பொன்விழா தலைவர் திரு. கே. கே. ஷா தலைமையில் டில்லியில் நேற்று கொண்டாடப்பட்டது. இவ்விழாவையொட்டி இந்திய ஜனாதிபதி திரு, வி. வி. கிரி விசேஷ முத்திரை ஒன்றை வெளியிட்டு வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத் தேசிய தினம் அக்டோபர்

## அக்டோபர் புரட்சியும் - கீழைத்தேச நாடுகளும்



விவசாயிகளுடன் மேதை லெனின்

இன்று 53-வது ஆண்டு நிறைவு கொண்டாடப்படும் அக்டோபர்மகாபுரட்சியைப் போலஇந்த 20-வது நூற்றூண்டில் கீழைத்தேச மக்களின்தேசிய விடுதலை இயக்கங்களுககும்ஏகாதிபத்தியத்தின் அழிவுக்கும் காரணமானசம்பவம் வேறு எதுவுமில்லை.

'சோவியத் குடியரசு இனி மேல் விழித்தெழுந்த கீழைத்தேய மக்களைத் தன்னோடு ஒன்றுசேர்த்து சர்வதேச ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் பெரும்போர் நிகழ்த்த வேண்டும்' என்று அக்டோபர் புரட்சிக்குப் பின்னர், 2-வது அகில ரஷ்ய காங்கிரஸை விழித்துப் பேசுகையில் மாவீரர் லெனின் கூறினார்.

1920 ம்ஆண்டில் 'கீழைத்தேயமக்கள்'என்ற சஞ்சிகை மாஸ்கோவில் முதல் முதல் வெளியாகியபோது அதன் முதல் பக்கத்தில், சகல தேசத்துத் தொழிலாளிகளும் அநீதிக்குட்பட்ட நாடுகளும், ஒன்றுபடுக' என்ற சுலோகம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இதைச் சில தோழர்கள் எதிர்த்தபோதிலும், லெனின் அதை ஆதரித்து சோவியத்மக்கள் உலகத்துப் பாட்டாளி மக்களின் பிரதிநிதிகள் மட்டுமல்ல, கொடுமைக்குட்படுத்தப்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் என்று சொன்னூர்.

ரஷ்ய சாம்ராஜ்யத்தின் எல்லைக்குள் வசித்த சுமார் 3 கோடி 30 லட்சம் மக்களை அக்டோபர் புரட்சி விடுவித்தது

சோவியத்அரசு பின்லாந்தின் சுதந்திரத்தை அங்கீகரித்து ஜார் அரசாங்கம் செய்துகொண்ட அநீதியான ஒப்பந்தங்களை ரத்துச் செய்தது.

1920-ம் ஆண்டுகளில் சோவியத்யூனியன் தனது கிழக்கத்திய அயல் நாடுகளாகிய பாரசீகம், ஆப்கானிஸ்தான், துருக்கி, சீனு முதலிய நாடுகளுடன் சமத்துவ அடிப்படையில் உடன்படிக்கைகளைச் செய்துகொண்டது. இச்செயல் அப்பிரதேசங்களில் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பைத் தடுத்ததோடல்லாமல், ஆசிய மக்களின் விடுதலைப் போருக்கும் உத்வேகத்தை அளித்தது.

எகிப்திலும், மொரோக்கோவிலும் சிரியாவிலும்,

பேஷில் பெரேரா

லெபனுனிலும் பாரசீகத்திலும், துனீஷியாவிலும் ஏகாதிபத்திய எதிர்ப்புஇயக்கங்கள் தோன்றின.

அக்டோபர் புரட்சியைப் பின்பற்றி இந்திய மக்கள் நடாத்திய சுதந்திரப் போராட்டம் இலங்கையையும் பாதித்தது என்று கூறலாம்.

சில இந்தியப் புரட்சிவீரர்கள் காபூல் நகரத்தில் கூடி ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக சோவியத் ரஷ்யா நடாத்தியபெரும்புரட்சியை யிட்டு நன்றியும் பெருமிதமும் தெரிவித்தார்கள்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்களை உறுதிப்படுத்த உலகப்புரட்சி இயக்கங்களையாவும் ஒற்றுமைப்பட வேண்டுமென லெனின் கூறினார்.

கிழக்கத்திய நாட்டில் பாட்டாளி மக்களுடன் சோவியத் ரஷ்யா நெருங்கிய தொடர்புகள் வைத்துக் கொள்வது அவசியமென்று அவர் வற்புறுத்தினூர்.

சோவியத் யூனியன் இக்கொள்கைகளை செவ்வனே நிறைவேற்றி வந்ததன் விளைவாக லெனின் கனவுபலித்து 2-வது உலக யுத்தத்துக்குப் பின் உலக சோஷலிச ஏற்பாடும், சர்வதேச தொழிலாளர் முன்னேற்ற இயக்கமும் தோன்றி முதலாளித்துவத்தையும், ஏகாதிபத்தியத்தையும் நிலைகுலையச் செய்தன.

குடியேற்ற நாட்டுமுறை இத்தாக்குதலின் வேகத்தைத் தாங்கமுடியாது தளதளர்த்தது. 1919-ல் உலகப்பரப்பில் 72 வீதமும், ஜனத்தொகையில் 69வீதமும்குடியேற்றநாடுகளாக இருந்தன. ஆனல் 1967ம் ஆண்டில் இத்தொகைகள் முறையே 4 வீதமாகவும், 1.1 விதமாகவும் குறைந்துவிட்டன.

குடியேற்ற நாட்டுத் தளையை 150 கோடி மக்கள் உடைத்தெறிந்தனர். ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் 70க்கு மேற்பட்ட சுதந்திர அரசுகள் தோன்றின.

புதிதாக விடுதலை பெற்ற மக்களையும் இன்னும் அடிமைத் தளையில் அமிழ்ந்திருக்கும் மக்களையும் சகோதர பாவத்துடன் ஒன்றுசேர்த்து ஏகாதிபத்தியங்களிருக்கும் இடமெங்கும் அதை நசுக்குவது சோவியத் ரஷ்யாவின் கொள்கையாக இருந்துவருகிறது. இந்த நோக்கோ சோவியத் யூனியனும் இதர சோஷலிச நாடுகளும் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் ஆசிய ஆபிரிக்க நாடுகளுக்கு ராணுவ உதவியும் பொருளாதார உதவியும் அளித்து வருகின்றன. வியட்னும் ஐ. அ. குடியரசு, சிரியா முதலிய நாடுகளை உதாரணமாகச் சொல்லலாம். தமது பிறவிச் சுதந்திரங்களுக்கு ஊறுவிளைக்கும் எந்த ஏகாதிபத்தியத்தலையீட்டையும் எதிர்ப்பதற்கு சோவியத் யூனியன் உதவி செய்யும் என்று ஆசிய மக்கள் நம்பியிருக்கலாம்.

சமீபத்தில் விடுதலையான ஆசியநாடுகள் தங்கள் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி ஏகாதிபத்தியம் மீண்டும் தலைதூக்காதபடி பார்த்துக் கொள்வதற்கு

(15 - ம் பக்கம் பார்க்க)

## அனைத்தும் மனிதனின் நன்மைக்கே..

லெனின் வகுத்த சோஷலிச நிர்மாணப் பாணியை நிறைவேற்றி சோவியத் மக்கள் வளம் நிறைந்த தொழில் விவசாய அபிவிருத்தியுற்ற நாடாகத் தம் தாயகத்தை மாற்றியுள்ளனர்.

இன்று தொழிற்துறையில் சோவியத்யூனியன் ஐரோப்பாவில் முதலாவது ஸ்தானத்தையும் உலகில் இரண்டாவது ஸ்தானத்தையும் சுவீகரித்துத் திகழ்கிறது.

உலகின் தொழில் உற்பத்திப் பொருள்களில் ஏறத்தாள ஐந்திலொன்று சோவியத் நாட்டில் உற்பத்தியாகிறது.

சோவியத் வளநாட்டில் பிரதிநிமிஷமும் 210 தொன் எஃகு உருக்கப்படுகிறது. இது 100 கார்களை உற்பத்தி செய்ய போதுமானது. பிரதி நிமிஷமும் 1,313,000 கிலோ வாட் மின்சாரம் உற்பத்தியாகிறது, இது 1000 பேர் ஜீவிக்கும் பிரதேசத்திற்கு வருஷமொன்றுக்கு போதுமானது. பிரதி நிமிஷமும் 1.157 தொன் நிலக்கரி தோண்டியெடுக்கப்படுகிறது. 624 தொன் எண்ணெய் தோண்டியெடுக்கப்படுகிறது 17000 சதுர மீட்டர் ஜவுளி உற்பத்தியாகிறது, 1200 ஜோடி காலணிகள் உற்பத்தியாகின்றன.

இன்று சோவியத் யூனியனில் 300க்கு அதிகமான தொழிற்துறைகள் இயங்குகின்றன.

பொருளாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி சோவியத் மக்களின் சேம வாழ்வில் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

சோவியத் புத்தாட்சியின் கீழ் தேசிய தனிநபர் வருவாய் 27 மடங்கு பெருகியுள்ளது. தேசிய வருவாய் வளர்ச்சி விகிதம் முதலாளித்துவ நாடுகளை பார்க்கவும் கணிசமாக உயர்ந்தது இது சோவியத் யூனியனில் கடந்த 18 வருஷகாலத்தில் 4,0 மடங்கு பெருகியிருக்கிறது. இதே காலகட்டத்தில் அமெரிக்காவில் இரண்டு மடங்கும் பிரிட்டனில் 1.6 மடங்கும் மாத்திரமே பெருகியது.

முதலாளித்துவ நாடுகளில் தேசிய வருவாயில் பெரும் பகுதி ஒரு சிறிய தனிநபர்கள் கைகளுக்கு செல்கிறது. மாருக சோவியத் யூனியனில் தேசிய வருவாய் மக்களுக்குச் சொந்தம்; மக்கள் நலனுக்குச் செலவிடப்படுகிறது.

சோவியத் புத்தாட்சியின் கீழ் தொழிலாளர்களின் அசல் வருமானம் 7 மடங்கும் விவசாயிகளின் அசல் வருமானம் 11 மடங்கும் உயர்ந்துள்ளது. கடந்த சில வருஷ காலத்தில் 25,000,000 ஆலை அலுவலக தொழிலாளர்களின் ஊதியம் அதிகரிக்கப்பட்டுள்ளது. 1965-ல் 96.5 ரூபிலாக இருந்த சராசரி மாதாந்த சம்பளம் 1970-ல் 120 ரூபிலாக உயர்ந்துள்ளது.

பொதுஜன பாவனை நிதி மக்கள் வாழ்க்கைத்தரத்தை சீராக்க உதவியாய் உள்ளது. 1969-ல் இது 59,000 மில்லியன் ரூபிளாக இருந்தது. இன்று பிரதி நபருக்கும் வருஷத்துக்கு 246 ரூபிள் செலவிடப்படுகிறது இந் நிதி மூலம் மக்கள் இலவசக்கல்வி இலவசவைத்தியம் முதலியவற்றைப் பெறுகின்றனர். இந்நிதியிலிருந்து சம்பளத்துடனன விடுமுறை, பென்ஷன், மானியம், மாணவர் சகாயபணம், குடியிருப்பு நிர்மாணம் முதலியவற்றுக்கு பணம் செலவிடப்படுகிறது. இத்துறையில் சோவியத்நாடு உலகிலேயே சுக்கிர ஸ்தானம் வகிக்கிறது. [illegible] பிரவேசம் செய்கின்றனர்.

## சோவியத் சோஷலிச ஜனநாயகம்

மக்களின் ஆட்சி அதிகார ஸ்தாபனமான சோவியத்துக்களிலிருந்து எம் நாட்டின் சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் யூனியன் பெயர் தோன்றியது.

சோவியத் நாட்டில் 48,000 சோவியத்துக்கள் இயங்குகின்றன.

2,000,000 சோவியத் சனப் பிரதிநிதிகளும், 25,000,000 சோவியத் ஊழியர்களும், மக்கள் அதிகார ஸ்தாபனங்களில் 7,000,000 பேர்களும், நிரந்தர உற்பத்தி மகாநாடுகளில் 5,000,000 பேர்களும், கட்சி தொழிற் சங்க வாலிபர் கூட்டுறவு மற்றும் பொதுஜன ஸ்தாபனங்களில் 10,000,000 பேர்களும் பங்குபற்றுகின்றனர். இவர்கள் சோவியத் சோஷலிஸ ஜனநாயகத்தின் சவ்வும் சதையுமான ஜீவ அங்கங்கள்.

லெனின் கூறினுர்; 'நாமே ராஜ்யம்' என்று லெனினுடைய வாசகத்தை சோவியத் மக்கள் பெருமையுடன் திருப்பிக் கூறுகின்றனர்: 'நாமே ராஜ்யம்!'

பூரண அதிகாரம் பெற்ற ராஜ்ய ஸ்தாபனம் சுப்ரீம் சோவியத் சபையாகும். அதன் பல்வேறு பகுதிகளிலும் சோவியத் மக்களின் பிரதிநிதிகள் உள்ளனர். தொழிலாளி வர்க்கத்தின் மிகச் சிறந்த பிரதிநிதிகளும் கூட்டுப்பண்ணை விவசாயிகள், புத்தி ஜீவிகள் பிரதிநிதிகளும் சுப்ரீம் சோவியத் பிரதிநிதிகளாகப் பணிபுரிகின்றனர்.

சுப்ரீம் சோவியத் இரண்டு சபைகளைக் கொண்டது. யூனியன் சோவியத் ஒன்று. தேசிய இனங்கள் சோவியத் மற்றது. இரண்டு சபைகளுக்கும் பரிபூரண சமத்துவம் உண்டு.

யூனியன் சோவியத்துக்கு பிரதிநிதி 300,000 பேருக்கும் ஒரு பிரதிநிதி தெரிவு செய்யப்படுகிறார். தேசிய இனங்களின் சோவியத்துக்கு பிரதி குடியரசுக்கு 32 பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் 15 குடியரசுகளும் தெரிவு செய்கின்றன. 20 சுயாட்சிக் குடியரசுகள் ஒவ்வொன்றும் 11 பிரதிநிதியை தெரிவு செய்கின்றன: 8 சுயாட்சிப் பிரதேசங்கள் ஒவ்வொன்றும் 5 பிரதிநிதியைத் தெரிவு செய்கின்றன. 10 தேசிய பகுதிகள் ஒவ்வொன்றும் ஒரு பிரதிநிதியை தெரிவு செய்கின்றன.

சோவியத் யூனியனில் வாழும் 35 தேசிய இனங்களுக்கும் யூனியன் சோவியத்தில் பிரதிநிதித்துவம் உள்ளது.

தேசிய இனங்களின் சோவியத்சபையில் சோவியத்நாட்டில் வாழும் 59 தேசிய இனங்கள் பிரதிநிதித்துவம்வகிக்கின்றன.

இது லெனினுடைய தேசியக் கொள்கையின் வெற்றிக்கு அத்தாட்சியாகும். சோவியத் தேசிய இனங்களின் சமத்துவத்துக்கு சான்றுகும்.

15 சமத்துவக் குடியரசுகள் இஷ்டபூர்வமாக இணைந்ததன் விளைவே சோவியத் சோஷலிஸக் குடியரசுகள் யூனியன்.

அவைகள் ருஷ்யா, உக்ரேய்ன், பியலோ ருஷ்யா, உஸ்பெகிஸ்தான், கஜாகிஸ்தான், ஜியார்ஜியா, அஸர்பைஜான், லிதுவேனியா, மொல்டேபியா, லத்வியா, கிர்கீஸியா, தாஜிகிஸ்தான், ஆர்மீனியா, துருக்மேனியா, எஸ்தோனியா ஆகும்.

ஒவ்வொரு குடியரசுக்கும் தனி அரசியல் சட்டம் உண்டு.

சோவியத்அரசியல்சட்டம் பிரதி யூனியன் குடியரசுக்கும் அந்நிய ராஜ்யங்களுடன் நேரடியான உறவுகளை ஸ்தாபித்துக்கொள்ளவும், ராஜதந்திர பிரதிநிதித்துவத்தை வைத்துக்கொள்ளவும், உடன்படிக்கைகளைக் கைச்சாத்திட்டுக் கொள்ளவும் அதிகாரம் வழங்குகிறது. பிரதி குடியரசுக்கும் சொந்தத் துருப்புக்கள் உள்ளன. ஒவ்வொரு குடியரசின் பிரஜையும் சோவியத் நாட்டின் பிரஜையாகும்.

பிரதி யூனியன் குடியரசுக்கும் சுயாட்சிக்குடியரசுக்கும் தனி சுப்ரீம் சோவியத் சபையும், அமைச்சர் சபையும்உண்டு.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புரட்சியின் 53-வது ஆண்டு பூர்த்தி

## சோவியத் யூனியன் வளர்ச்சியும் மேதை லெனின் காட்டிய வழியும்



ரா·:பிக் நிஷாஞேவ்
இலங்கையிலுள்ள சோவியத் தூதர்

இன்றைய தினம் சோவியத் மக்கள் வாழ்க்கையில் மிகச் சிறப்பானதொரு தினமாகும். உலக வரலாற்றில் ஒரு சிறப்பிடத்தைப் பிடித்துக்கொண்டதும், மனிதசமுதாய முன்னேற்றத்தில் ஒரு திருப்பத்தை யேற்படுத்தியதும், சமுதாய பிரச்னைகளுக்குத் தீர்வுகாண உலகுக்கு முன்னோடியாகவிருந்தது மான அக்டோபர் புரட்சியின் 53-வது ஆண்டு பூர்த்தி தினம் இன்று சோவியத் மக்களால் வெகுகோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது.

### சோவியத் மக்களுக்கு சிறப்பான ஆண்டு

இவ்வாண்டு அக்டோபர் புரட்சிதினம் வழமையிலும் பார்க்கச் சிறப்பாகக்கொண்டாடப்படுகிறது ஏனெனில் 1970-ம் ஆண்டு லெனின் நூற்றுண்டாகும். இதுமட்டுமன்றி யப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகளை வெற்றி கொண்டு இன்று 25 ஆண்டுகள் ஆகின்றன. மேலும்இவ்வாண்டில் சோவியத்மக்கள் தங்கள் 5 வருடத் திட்டத்தையும் வெற்றிகரமாகச் செயற்படுத்தி கம்யூனிஸ்ட் கட்சியின் 24-வது மகாநாட்டுக்கும் விசேஷ ஏற்பாடுகளைச் செய்கிருர்கள். இவ்வாருகச் சோவியத்நாட்டின் பல்வேறு முக்கிய சிறப்பம்சங்கள் எல்லாம் ஒன்று கூடிய இவ்வாண்டில் கொண்டாடப்படும் 53-வது அக்டோபர் புரட்சி தினவிழா சோவியத்மக்கள் வாழ்வில் என்றென்றும் நினைவுகூரக் கூடியதொரு தினமாகும் என்பது குறிப்பிடவேண்டியதில்லை.

### சோஷலிசத்தின் வளர்ச்சி

மேற்குறிப்பிட்ட வரலாற்று நிகழ்ச்சிகளின் அடிப்படையிலேயே அதாவது அவற்றைத் துணைக்கொண்டே சோஷலிசத்தை நாங்கள் வளர்த்தோம். ஐக்கிய அமெரிக்காவிலே மின்சக்தி உபயோகம் எங்கும் சர்வ சாதாரணமாகவிருந்த வேளையில் எங்கள் நாட்டில் வெளிச்சத்துக்கும் சூட்டுக்கும் நாங்கள் மரத்துண்டுகளையே நம்பியிருந்தோம். இத்தகையதொரு சூழலிலிருந்துதான் நாம் சோஷலிசத்தைவளர்த்தோம். இன்று எமது பிறட்ஸ்க் மின்சக்தி நிலையம்மாத்திரமே இரண்டு கோடி மக்களின் மின்சார தேவையைப் பூர்த்திசெய்கிறது. ஐரோப்பாவிலேயே மின்சக்தி உற்பத்தியில் முன்னணியில் நிற்கிறது. 1969ம் ஆண்டு சோவியத்யூனியன் 11 கோடி தொன் உருக்கையும் 32 1/2 கோடி தொன்னுக்கும் அதிகமான எண்ணெயையும் உற்பத்திசெய்துள்ளது.

சோவியத் மக்கள் சோஷலிசத்தை கம்யூனிஸ்ட்கட்சியின் தலைமையில் மிகத்துரிதமாக வளர்க்கையில் விவசாயத்தில் கூட்டுறவு முறையைக் கொண்டு வரவேண்டும் என்ற லெனினின் கட்டளையை நிறைவேற்றினர். விவசாயத்தில் கூட்டுறவு முறை கொண்டுவரப்பட்டதும் அதுசமுதாயக்கொடுமைகளில் இருந்து லட்சக்கணக்கான மக்களைப் பாதுகாத்தது. இவர்கள் ஆண்டுக்கணக்காக அனுபவித்துவந்த வறுமையையும் அறியாமையையும் அகற்றியது. இன்றைய வளர்ச்சியை அடைவதற்கு அவர்களுக்கு கைகொடுத்துதவியது.

லெனின் அன்றுவிவசாயத்தில் கூட்டுறவு முறையைக் கொண்டுவர 100,000 டிராக்டர்கள் வேண்டும் எனக்கனவுகண்டார். ஆனல் இன்று 20 லட்சத்துக்கும் மேலான டிராக்டர்களும், 600,000 கூட்டுறவுபண்ணைகளும், 10 லட்சத்துக்கும் மேலான லொறிகளும் சோவியத்நாட்டின் விவசாயத்துறையில் உள்ளன.

### லெனினின் திட்டம் செயலானது

புதிய சமுதாயத்தை உருவாக்கும்போது எமதுமக்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில்சோஷலிசகலாச்சாரப்புரட்சியில் மாவீரன் லெனினது திட்டத்தைப் பூர்த்திசெய்தனர். உலகில் முதல்தடவையாகதொழிலாளர்களது நலனுக்காக கலாச்சாரம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், கலை ஆகியவை பயன்படுத்தப்பட்டன. இன்று இவை யாவும் இத்தொழிலாளர்களது உடைமைகளாகவுள்ளன.

கல்வித்துறையிலும்சோவியத் நாடு இன்று முன்னணியில் நிற்கும் நாடுகளில் ஒன்ருகவுள்ளது. சோவியத் ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் உயர்கல்வியைப் பெற்றுள்ளனர். எங்களிடையே விஞ்ஞானத்துறையில் தேர்ச்சிபெற்ற 820,000க்கும் மேலான தொழிலாளர்கள்உள்ளனர்.

சோவிய நாடு அதிகாரத்திலிருந்த காலத்தில் 15யூனியன்குடியரசுகளிலும் பொருளாதார. கலாச்சார முன்னேற்றத்தில் பெரும்புகழைப் பெற்றிருந்தது. மாவீரன் லெனினது தேசிய கொள்கை ய எமது கட்சி தீவிரமாகச் செயல்படுத்தியமையேயாகும்.

53-வது அக்டோபர் மாபுரட்சியின் ஆண்டுநினைவு

(14- பக்கம் பார்க்க)

## சோவியத் நாட்டில் கல்வி

சோவியத் யூனியனில் 800 உயர் தரக் கல்வி ஸ்தாபனங்கள் உள்ளன. இவற்றில் 45 லட்சம் மாணவர்கள் கல்வி பயிலுகிருர்கள். 5,50,000 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கிருர்கள். மொத்த மாணவர்களில் சுமார் 45 சதவிகிதம் பகல் நேர வகுப்புக்களிலும், 15 முதல் 16 சதவிகிதம் மாலை வகுப்புக்களிலும், சுமார் 40 சதவிகித மாணவர்கள் இதர கலைப்பிரிவு வகுப்புக்களிலும் பயிலுகின்றனர்.

0

தேசியப் பொருளாதாரத் தேவைகளுக்கேற்ப பல்வேறு துறைகளிலும் நிபுணர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. சோவியத் பகல் நேர உயர்தர கல்வி ஸ்தாபனங்கள் 350 தொழில் துறைகளில் நிபுணர்களுக்குப் பயிற்சி அளிக்கின்றன; இதர மாலை நேர உயர்தரக் கல்வி ஸ்தாபனங்கள் மக்களுக்கு 250 விசேஷ துறைகளில் பயிற்சி அளிக்கின்றன. பட்டம் பெற்றபின் அவரவர் கல்வித்துறைக்கு ஏற்ப அவர்களுக்கு வேலைகள் கொடுக்கப்படுகின்றன.

0

5,000 உயர்தரக்கல்வி ஸ்தாபனங்கள், மாணவர்களுக்குப் பகல்; மாலை நேரங்களில் வகுப்புக்களையும், இதர கலைப்பிரிவு வகுப்புக்களையும் நடத்துகின்றன. செகண்டரி தொழில் நுணுக்கப் பயிற்சிபள்ளிகள் 80 லட்சத்துக்கும் அதிகமாக உள்ளன.

0

50 ஆண்டுகால சோவியத் ஆட்சியில், பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை 3.5 மடங்காக உயர்ந்துள்ளது; அவற்றில் கல்வி [illegible]லும் மாணவர்களின் எண்ணிக்கை 10 மடங்கு உயர்ந்துள்ளது. இப்போது நாட்டில் 47 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன.

0

மாஸ்கோ பல்கலைக்கழகத்தில் 223 பிரிவுகளும், 250 பரிசோதனைக் கூடங்களும் இருக்கின்றன. பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் பேராசிரியர்கள், ஆசிரியர்கள், ஆராய்ச்சி உதவியாளர்கள் ஆகியோரது எண்ணிக்கை 3,700 ஆகும்.

0

சோவியத் கல்வி ஸ்தாபனங்கள் ஏறக்குறைய 7,000,000 உயர்தரக் கல்வி பெற்ற நிபுணர்களையும் 1 கோடி 10 லட்சத்துக்கும் மேற்பட்ட [illegible] கல்வி பெற்ற நிபுணர்களையும் பயிற்றுவிக்கின்றன.

0

சோவியத் மாணவர்களின் வாழ்வில் 'மாணவர் கவுன்சில்கள்' முக்கிய இடத்தை வகிக்கின்றன. சேவை மனப்பான்மையுடைய இந்த நிறுவனம் மாணவர்களின் சுய நிர்வாகத் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டு. அவர்களின் வாழ்க்கை நிலைமைகள். கல்வி ஆகியவற்றிற்கு இதுவே பொறுப்புடையதாகும். விரிந்த அளவில் உரிமைகளைக் கொண்டது இக்கவுன்சில். இதன் அங்கத்தினர்கள் பாடத்திட்டத்தைத் தொகுத்தலிலும், நிதியுதவி, ஹாஸ்டல் வசதிகள் அளித்தல் போன்றவற்றிலும் பங்கு கொள்ளுகிருர்கள். இக்கவுன்சிலின் பிரதிநிதி, நிறுவன நிர்வாகக் குழுவில் சகல உரிமைகளையும் பெற்றுள்ள ஓர் அங்கத்தினர்; மாணவர்களின் நலன்களை அவர் அக்குழுவில் பிரதிநிதித்துவப்படுத்துகிருர்.

கல்விக்கூட 'கடைசிச் செய்திகள்' வரை வெளியிடும் பத்திரிகைகளை மாணவர் கவுன்சில்கள் வெளியிடுகின்றன. மாணவர்களது விமரிசனங்கள், ஆலோசனைகள், விஞ்ஞானக் கட்டுரைகள் ஆகியவற்றையும் இப்பத்திரிகைகள் வெளியிடுகின்றன. இந்த வெளியீடுகளின் செலவில் 90 சதவிகிதத்தை நிர்வாகமும், 10 சதவிகிதத்தைத் தொழிற்சங்கங்களும் ஏற்றுக்கொள்ளுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருப்பனி; கள்ளு மட்டுமல்ல பலபொருட்களை தருவது பனை


பனைமரம் Borassos Flabellifer Linn) அயனஆபிரிக்காவின் சொந்ததாவரமாகும். வடஇலங்கையில் அதிகமாக வளரும் இத்தாவரம் யாழ்ப்பாண மாவட்டத்தில் 40,000 ஏக்கர் பரப்பை உள்ளடக்கியது. அதாவது இம் மாவட்டத்தின் மொத்தப் பரப்பில் 30 வீதத்துக்கு மேல் பனைத்தாவரம் வளருகின்றது. ஏனைய பொருளாதாரப் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் தேவைப்படும் வரண்ட பகுதியில் உள்ள

யல் ரீதியாக பொருளாதாரரீதியான விருத்தியடைந்த அறிவைக்கொண்டு மிக விரைவாக நவீனமயமாக்கப்படவேண்டும், இது விசேடமாக தீவில் பெருகும் குடித்தொகைக்கும் வெளிநாட்டுச் செலாவணிக்கும், இறக்குமதி பிரதியீடாகவும் பயன்படும்.

ஒரு குறிப்பிட்ட இடத்தில் இயற்கைத் தாவரத்தில் உச்சநிலை (Climax Natural Vegetation) இயற்கைத் தாவரத்தில் செய்கின்ற பரிசோ

பாடு எதற்கும் சமமானதல்ல என்று கூறலாம். இருந்தும் இயற்கையின் விலையுயர்ந்த கொடையான இது மனிதர்களின் அக்கறையின்மையால் திரும்பவும் பயிரிடுதல்இன்றி அதிக அளவாக பயன்படுத்துதலாலும், அழித்தலாலும் மதிப்பில் குறைகின்றது சிந்தச்செயல் இந்த வளத்தில் நஷ்டத்தை ஏற்படுத்துவதுடன் வளிமண்டல நடவடிக்கைகளையும் பாதிக்கிறது

ஆனல் அதன் வயதடையும் நிலை 15 வருடங்களில் இருந்து 20 வருடங்கள் ஆகும். நவம்பர், டிசம்பர் மாதங்களில் பாளைகள்வளர ஆரம்பிக்கின்றன. ஆண், பெண் பூக்கள் வெவ்வேறு மரங்களில் பூக்கின்றன. இரண்டுவித மரங்களிலும் பாளை வெட்டப்பட்டால் இனிப்பான திரவம் பெறலாம். இந்த இனிப்பான திரவம் பெறும் நடவடிக்கை இன்னும் பழைய வழிமுறைகளிலேயே கையாளப்படுகிறது. இவ்வாறு திரவம் சேகரிக்கப்படும்கலசங்களில் சுண்ணம்பு பூசுவது மூலம் புளிக்க வைக்கப்படுகிறது. இது இனிமையான கள்ளாக மாற்றமடையும்.



பாளை வெட்டப்படாவிட்டால் பெண்மரம் நாரடங்கிய பழத்தை உற்பத்திசெய்யும். ஒவ்வொரு பழமும் மூன்றுவிதைகளைக் கொண்டிருக்கும். முதற்கட்டத்தில் தண்டின் நிலத்தின்கீழ் இருக்கும் பகுதி மட்டுமே அதன் தடிப்பில் அதிகரிக்கிறது. அடிமரத்தின் நிலத்

**[பனம் பொருள் ஆராய்ச்சிக்கு ஒரு நிலையம அமைப்பது சம்பந்தமாக ஆலோசனை கூறுவதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. இக் குழுவில் அங்கம் வகிக்கும பேராசிரியர் க. குலரத்தினம் இங்கு பனையைப் பற்றி கூறுகிறர்.**

மணல், கடற்கரைச் சூழல் மட்டுமல்வாமல் சுண்ணம்புக் கற்பாறைகளும் இத்தாவரத்திற்கு ஏற்றதாகும். இதனல், புத்தளம், மன்னர் யாழ்ப்பாணம், வவுனியா (முல்லைத்தீவுக்கரை) அம்பாந்தோட்டை மாவட்டங்களில் 1000 சதுர மைலிற்கு மேற்பட்ட பகுதி பனையினத்தின் பரந்த பயிரிடுதலுக்கு ஏற்றதாக இருக்கிறது.

இத்தாவரத்தில் உற்பத்திகள் பலவழிவகைகளில்பயன்பட்டாலும்கூட பனைகளின் பயிரிடும் நடவடிக்கையும் உற்பத்திகளின் பயன்பாடும் பழைய சம்பிரதாய முறையிலேயே இப்போதும் அமைந்திருக்கின்றன, இதனல் இவையிரண்டும் அறிவி

தனைகளின் பெறுபேருகும். இது இயற்கைத் தேர்வு கொள்கையையும், தகுதியானது நிலைக்கும் என்பதையும் பிரதிபலிக்கிறது. ஒரு இடத்தில் இயற்கைச்சூழல், உயிர்சூழல் நிலைகளை முக்கியமாக இடவிளக்கவியல், மண், தாவர நிலைகளை ஏற்படுத்தும் நிலையென இயற்கைத் தாவர உச்சநிலையைக் கூறலாம். ஆகவே இயற்கை வரண்ட வலயப் பொருளாதாரத்தில் பனைத் தாவரத்தை உயர்கொடையாக அளித்திருக்கிறது. மனிதர்களின் அதிகூடிய பாவனைக்கு ஏற்றதாக அமைந்துள்ளது. வரலாற்று ரீதியிலும், இலக்கிய கவிதையிலும் இதை அவதானிக்கலாம்: இதன் பொருளாதார பயன்

பனைத்தாவரத்தின் எதிர்காலப் பொருளாதார முக்கியத்துவம் அதைப் பராமரிப்பதில்தான் தங்கியுள்ளது. ஆகவே இதற்கொரு இயக்கம் தொடங்கவேண்டியது அவசியமாகின்றது. பனை இனத்தை திரும்பவும் பயிரிடுவதால் மட்டுமல்லாமல் மற்றைய பொருளாதார பயிர்களுக்கு ஏற்றதற்ற. நெல், தென்னை, காய்கறிப் பயிர்களுக்கு ஏற்றதற்ற; நிலகளையும் இத்தாவரத்தின்கீழ்க் கொண்டுவரவேண்டும். வரண்ட வலயப்பகுதிகளில் இவ்வாறு செய்தல் நீருக்கு அடுத்தபடியான 'உயிர்நிலை' என்றுகூறலாம்.

பனைமரம் வளர்வதற்கு சிறு அளவானதொழிலாளர் போதும். சிறுவிதையிலிருந்து தானகவே வளரக்கூடிய பயிராகும். ஆரம்ப காலத்தில் சிறுமரமாக இருக்கும்போது மட்டும் மிருகங்களில்இருந்து பாதுகாக்க ஓரளவு அக்கறை எடுத்தல் அவசியமாகும். இன்றைய பெரும்பாலான இந்தச் சிறு மரங்கள் தாமாகவே வளர்ந்தவையாகக் காணப்படுகின்றன. ஆனல் சில இடங்களில் நில எல்லைகளிலும், வயல்களிலும், வரம்புகளிலும் மனிதர்களால் நாட்டப்பட்டுள்ளன. இது சிறு மனித அக்கறை அளிக்கப்பட்டால் திருப்தியானபயனை அளிக்கும்என்பதை எடுத்துக் காட்டுகிறது.

இம்மரம் சாதாரணமாக 40அடி தொடக்கம் 60 அடி வரைவளருகிறது. 100' மரம் காணப்பட்டாலும் பொதுவானதல்ல இதன் வளர்ச்சி மிக ஆறுதலானது. வருடத்துக்கு 1/2 அடிதான் வளரும். சுற்றளவு 3' தொடக்கம் 7' வரை அமைந்திருக்கும் 30' தொடக்கம் 40' வரை தொகையான விசிறி அமைப்புடைய இலைகளை இந்த மரங்கள் கொண்டிருக்கும். இலைகள் அகலம் 3' — 4'. இலைகளின் மட்டை 3' தொடக்கம் 4' நீளமுடன் கெட்டியான நாரைக் கொண்டது. கருமை நிறமுடன் கெட்டியான நீள்முகமான நார்களை இம் மரங்களின் வெளிப்பாகம் கொண்டிருக்கும். உள்பாகம் மென்மையானது. வெளிப் பாகம் கடினமானது.

இம்மரங்கள் 10 வருட[illegible] இலைகளை வெட்டலாம்.

தின் கீழ்உள்ள பகுதியானது தனது உருளைவடிவான கரிய தண்டாக நீண்டு வளர 15—20 வருடங்கள் எடுக்கின்றது.

பனையானது பெரியவண்டுகள், பூச்சிகள் போன்ற பிறவற்றினலும் பாதிக்கப்படுகிறது. காளான் என்று சொல்லப்படுகின்ற மரங்களைக் கொல்லுகின்ற நோயும் இவற்றைத் தாக்கும்.

## கருப்பனியும் கள்ளும்

கருப்பனி 10 வீதம் சர்க்கரையை அடக்கியுள்ளது. இது சேகரித்தபிறகுஉடனடியாக கள்ளாக மாற ஆரம்பிக்கின்றது. கருப்பனி தெளிவும் இனிமையும்உடையது. கள்ளு நுரையும், அமிலத்தன்மை காரமும் உடையது. கள்ளில் உள்ள நுரையானது வைட்டமின் சத்தாகும். கருப்பனியின்இயற்கை

### பனைமரத்திலிருந்து பெற்று உண்ணக்கூடிய பொருட்களின் கூட்டுப்பொருட்கள்

| | [illegible] | புரதம் | கொழுப்பு | தாதுப் பொருள் | காபோவைதரேற்று | சர்க்கரை |
|---|---|---|---|---|---|---|
| கருப்பனி | 5.7 | 0.23 | 0.2 | 0.3 | 13. | 13 |
| சர்க்கரை | — | 1.7 | 0.8 | 1.8 | 88.4 | 84 |
| நொங்கு | 13 | 0.6 | 0.1 | 0.3 | 6 | |
| பூரான் | 71 | 0.7 | 0.1 | 0.8 | 17·2 | |
| பழச்சாறு | 24 | 0.7 | 0.1 | 0.7 | 21 | |
| மா | — | 4.8 | 0.3 | 2 | 81 | |



பேராசிரியர். க. குலரத்தினம்

யான மாற்றும் தன்மையானது 3 வீதம் மதுசாரத்தையும் 0·1 வீதம் அமிலத்தையும் 6 — 8 மணித்தியாலங்களில் உற்பத்தி செய்கிறது. இதன்பிறகு மதுசாரம் 5வீதமாக அதிகரித்து பிற்பாடு குறைய அமிலம் அதிகரிக்கிறது. இது இத்திரவத்தை மனிதர் நுகரமுடியாதவிதத்தில் மாற்றியிருக்கின்றது. இப்புளிப்புள்ள மாற்றம் மட்டமான வினகிரியைத் தருகிறது. கருப்பனி மருந்துக்குரிய பண்புகளை உடையது. இதை நீண்ட நேரம் வைத்திருக்கமுடியாது இது சர்க்கரையை வேறுபடுத்துகிறது.

சீவுபவர்களுக்கு வயல்களில் அதிகவேலை இல்லாத காலமாகிய பெப்ரவரி தொடக்கம் மேவரை உள்ள காலப்பகுதியே சீவும் காலமாகும். இதனல் கூலிப் பிரச்னை இல்லை. பொதுவாக 25—30 வயதுடைய மரங்கள் சீவப்படுகின்றன, இவை சுமார் 30 வருடங்கள் பயன் தருவன. துவாரங்களை உடைய மணற்பாங்கான மணலில் 15 வருடங்களிலேயே சீவுதல் ஆரம்பிக்கலாம். மரங்களுக்கு மூன்று வருடங்களுக்கொருமுறை ஓய்வு கொடுக்கலாம். மரத்தில் ஒரு நாளைக்கு சராசரியாக 1/2 கலனும் ஒரு பருவத்தில் மொத்தமாக சுமார்

(13-ம் பக்கம் பார்க்க)

## சூரபன்மன்

—இராஜ இராஜேஸ்வரன் தங்கராஜா—

சூரனை வீரனை தீரனை ஞானனைச்
சோரன் என்பவன் யாரெடா சொல்லடா
ஆரமுதென்பவன் அழியாத நித்தியன்
ஆனந்தத் தாண்டவன் அன்புவரத்தவன்
(சூரனை)

தேவர் கணங்களும் மானிட நரகரும்
தேவனை மறந்தனர் தக்கனைச் சார்ந்தனர்
பாவங்களெத்தனை துரோகங்களெத்தனை
பரனையிகந்தனர் நெறியில் வழுவினர்
வடுவினை தீர்க்கவும் வஞ்சனை நீக்கவும்
வாலறிவானவன் திருவுளமாதலால்
செருவுடை சூரனும் சிற்றியும் பெற்றனன்
தின்னெறி தேவரைச் சிறையிலடைத்தனன்

மறையினை மறந்தோரின் மானங்குறைத்தனன்
மாந்தரை நரகரை மடக்கி மகிழ்ந்தனன்
கறையுடை பாங்கினர் பெற்றதம் தண்டனை
காணும் ஆயிதை அரனும் அறிந்ததும்
தேவர்கள் சாரர்கள் தீவினை தீரவும்
தோத்திரம் துஞ்சலும் பரமனைச் சாரவும்
காவலின் அம்சமாம் முருகனய் வந்தனன்
காத்திடும் சக்தியை வேலெனத் தந்தனன்

தேவாதி தேவரை திருந்திய தகையரை
தண்ணளிர் கருணையால் காத்தருள் புரியவும்
மூவரும் முனிவரும் பெற்றிலா பேற்றினை
மேன்மையைச் சூரனும் ஏற்று நிலைக்கவும்
சேர்த்துத்தன்

முருகனும் அருளெனும் வேலினல் செதுக்கியே
மாட்சிமை முனிவனும் சூரனை அணைத்துத்தன்
மெருகுடை மஞ்ஞையாம் வாகனமாக்கினன்
மறையொலி சேவலாம் கொடியெனக்
கொண்டனன்
(சூரனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# கொடுப்பிற்குள் ஒரு பாக்குத்துண்டு

— ஐ. சாந்தன் —

ஒரு சிறுகதையெழுத நினைத்து உட்கார்ந்தேனா? உட்கார்ந்தேன். காலையில் அதற்காகக் கடதாசிகள் எல்லாம் ஞாபகமாக வாங்கியிருந்தேன். எழுதவேண்டியதுதான்.

வாய்க்குள் ஏதாவது நிரம்பப் போட்டு சப்பியபடியே எழுதினால்வேகமாக விறுவிறுப்பாக எழுதமுடியும். எனக்கு -அது - சப்புவதும் சப்பிக்கொண்டே எழுதுவதும் ஓர் இன்பமாயும் இருக்கும். இங்கே இப்போது வெற்றிலைதான் கிடைத்தது. போட்டுக் கொண்டேன். அதுவும் பிடிக்கும் எனக்கு.

எத்தனையோ நியூக்கிளியஸ்கள் மண்டைக்குள்ளே. எல்லாமே சுவையான சம்பவக் கருக்கள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு கதைக்கு ஏன் குறுநாவலுக்குக் கூட ஏற்றவை மறந்து விடுமோ என்று குறிப்பெடுத்துவைத்திருந்தேன். எல்லாமாக ஒரு பத்துப் பதினைந்துக்கு மேலிருக்கும். ஒன்றும் இப்போது கையிலில்லை. என் அறையிலே (என் அறை!— அருமையான கூண்டு. சிறைப்பறவையாய் இருக்க விரும்பாத காரணத்தால், காலையில் 8 மணிக்குப் புறப்பட்டால் மீண்டும் இரவு 10 மணிக்குத்தான் அதற்குள் நுழைவேன்) என் அறையிலே எல்லாம் இருக்கின்றன. இது எனது அலுவலகம், இப்போ மத்தியான சாப்பாட்டு வேளை. எல்லாக் கந்தோர்களிலேயும் சாப்பாட்டுவேளை அநேகமாகப் பன்னிரண்டு - பன்னிரண்டேமுக்கால்இருக்கும் இங்கோ பதினொன்றரை — ஒன்றரை அல்லது இரண்டு வரை போகும். பொழுதைப் பேசியே கொல்லும் சகபாடிகள்.

எனக்கு எத்தனையோ வேலைகள் அநேகமாகப் படிப்பேன். அல்லது எதையாவது வாசிப்பேன் இன்னும் சில, வேளைகளில் எழுதுகிற பனி ஏறினால் எழுதி லாச்சிக்குள்...(லாச்சி—சிங்களத்திலும் லாச்சிதான் - லாச்சுவ. இன்னும் இப்படி எத்தனையோ பொதுவான சொற்கள், தமிழிலும் சிங்களத்திலும். சிங்களம் 5-ம் வகுப்பு முடிந்தபின் 8-ம் வகுப்பிற்கு ஒழுங்குபண்ணவில்லையே. எங்கள் கந்தோரில்) ...ஆ! லாச்சிக்குள் அடைவது! பொழுது போகும்.

இன்றைக்கு நினைத்தேன் புதிதாக எழுதவேண்டுமென்று. (இவ்வளவு நாளும் எழுதியதையே எழுதியதாக அர்த்தமல்ல)- புதுமையாக! நண்பன் ஜெயா அடிக்கடி சொல்வது நினைவிற்கு வந்தது; 'எது பழமை? எது புதுமை?எது சரி, எதுபிழை? அளவுகோல் எது? உலகத்தில் திடமாக ஒன்றுமேயில்லையடா. எனக்கும் அது ஒப்புதலே. என்றாலும் புதுமையாக— புதிதாக— சில நேரம் அது 'பிசுத்தன'மாய் மாறினாலும் எழுத நினைத்தேன்.

எப்படியெழுதினாலும் சிலர் 'நல்லாயிருக்கு' என்பார்கள். சிலர் 'பைத்தியக்காரக்கதை' என்பார்கள். எதற்கு செவி சாய்ப்பது? எதுவும் இன்னொரு பக்கத்திற்கு. எதிராய்த்தான் இருக்கும். (ஒரு பக்கமேயுள்ள பொருளை நான்காணவில்லை. இதுபோலக் கருத்து மாறுபாடுகள் அவைதாமே உலகை இயக்கி வளரவும் வைக்கின்றன. —எல்லா விஷயங்களிலும் உண்டே!

எனக்கும் பல விஷயங்களில் மயக்கம்! எனக்கு மட்டுமல்ல, என்னுடைய நண்பர்களுக்கும் அப்படித்தான். மயக்கமென்றால் கருத்து மயக்கம், எது சரி எதுபிழை என்கிற மயக்கம். (ஜெயா சொன்னது) ஏனென்றால் எதிலும் - எந்தத்துறையிலும் அரசியல், இலக்கியம், சமயம், வாழ்வுமுறை, படிப்பு எல்லாவற்றிலுமே மாறுபாடான கருத்துக்களைச் சந்திக்கிறோம் அல்லது மாறுபாடான கருத்துக்கள் எங்களைச் சந்திக்கின்றன. எனவேதான் எங்களுக்கு இப்படி மயக்கம். அதிலே இன்னுமொரு பொயின்ட் என்னவென்றால், நாங்களும் சிந்திக்கத் தெண்டிக்கிறோம் (மிகப் பெரும்பான்மையினரைப்போலக் கண்மூடிக் கேட்டுவிட்டிருந்தோமானால் ஏதோ ஒரு வழியை அது சரியோ பிழையோ சரியென்று விட்டு இருந்திருப்போம்)

ஆகவேதான் எங்களுக்கு மயக்கம்!

'பழைய ஆட்சியா புதிய ஆட்சியா சிறந்தது? தமிழ்க் கட்சிகளின் பின்னாலே போவோமா பெரும்பான்மையினரின் கட்சிகளிலே சேர்வோமா? இனி வேறு வழி பார்ப்போமா? என்ற பிரச்சினை தென்னிந்தியப் பத்திரிகைகளைத் தடுப்போமா, கட்டுப்படுத்துவோமா அல்லது இப்படியே விடுவோமா என்பது அந்த எழுத்தாளக் கொம்பன் சொல்வது சரியா எழுதுவது புதுமையா அல்லது இந்தாள் சொல்வதா? இன்னும் இப்படி எத்தனையோ!

...அதுதான் சொன்னேன், எல்லாம் மயக்கமாகவேயிருக்கிறதென்று. ஒருவர் சொல்வதைக் கேட்டால் அதுவே சரிபோல பிறகு மற்றவர் சொல்வதைக் கேட்டால் அதுவும் சரி போல. அதன் பிறகு நாமே சிந்தித்தால் இரண்டுமே சரிபோல, அல்லது இரண்டுமே பிழை போல...

ஓ! ஒரே மயக்கந்தான். குழப்பம்.

என்னை சிந்திக்கும் திறமையில்லாதவன். ஒரு முடிவுக்கு வரமுடியாதவன்' என்பவர்களை நான் 'சிந்திக்காதவர்கள் அவசர முடிவுக்காரர்கள், என்பேனே!

என்ன சொல்வார்கள்?

என் நண்பர்களும் என்னுடன் இருக்கிறார்களே!

ஏன், சமூகமேகூட ... போகிறது.

'புதுமை'யாய் எழுதத் தெண்டித்துக்கொண்டு...

கதிரையின் கீழே காலுக்கருகில் ஏதோ சத்தம். திரும்பிக் குனிந்தால் பெர்ஞண்டோ சப்பாத்தை மெல்லக் கிளப்புகிறான். பொல்லாத குறும்பன் அவன். இதுதான் வேலை. நான் கவனியாவிட்டால், என் சப்பாத்து எப்படியோ போய், கடதாசிக்குள் சுற்றிக் கொண்டு மிஸ். தஸநாயக்காவின் 'கான்ட் பாக்'கிற்குள் புகுந்திருக்கும்! பளீஸ் மச்சான் குழப்பாதே' என்று திரும்பினேன்.

'எதை எழுதுவது?'

வாய்க்குள் சப்பிக்கொண்டிருந்த பாக்கும் குறைந்து விட்டது. இனி முடிந்துவிடும், சப்புவதற்குப் பிறகு ஒன்றுமிராது. என்றாலும், மெல்லுவதை நான் நிறுத்தவில்லை. (வலு 'ரீப்ரொப்'பாகக் கந்தோருக்கு வரும் இந்த 'சுழட்டல்காரன்' வெற்றிலை சாப்பிடுவது, பலருக்கும் அதிசயமே) வெற்றிலைதின்றால் 'கான்சர்' வருமா? நெடுநேரம் அதக்கிவைத்திருந்தாற்றான் வருமென்றானே நித்தி! (அவன் ஒரு 'மெடிக்கோ' — வைத்திய மாணவன்.

அலுத்த பெருமூச்சு. ஒன்றும் பிடிபடவில்லை.

'எதை எழுத?'

பேனை இருக்கிறது. கடதாசிகளும் ...

'எழுதலமே]'

... ... ...

'...ம் ம் (நெட்டுயிர்ப்பு)

'எதை எழுதலாம்?'

எங்கள் அலுவலகம், சுறுசுறுப்பாக அரட்டையடித்துக்கொம்மாளமிட்டுக் கொண்டிருக்கிறது! மணி பன்னிரண்டரை.

எதிரே சாளரத்தினூடே கனகம்பீரமாகத் தெரியும் சுதந்திர மண்டபம்.

மப்பு வெய்யில்.

என்முன்னேமேசையிலிருக்கிற வரைபடங்கள், பென்சில்கள், இத்தியாதி...

'ஸ்லேட்ருல் எங்கே?'

'லாச்சி'யை இழுத்தால்— ஆ! இருக்கிறது. சரி.

'எதை எழுத?'

வாய்க்குள் பாக்கு முடிந்துவிட்டது.

பல்லிடுக்குகளில் நாவால் துளாவிக் கொறிப்பதுஞ் சந்தோஷம்.

ஒரு அந்தரமாயிருக்கிறது. தவிப்பு. எதையெழுதலா

(12-பக்கம் பார்க்க)

# காமன்வெல்த்திலிருந்து பிரிட்டனை வெளியேற்ற வேண்டும்

பிரிட்டிஷ் கன்சர்வேட்டிவ் அரசாங்கம் தென்னாபிரிக்காவுக்கு ஆயுதஉதவி வழங்கும் விஷயத்தில் பிடிவாதமாக இருப்பது, பல காமன்வெல்த் நாடுகளுக்கு, குறிப்பாக ஆபிரிக்கநாடுகளுக்கு ஆத்திரத்தை மூட்டியிருக்கிறதெனலாம்.

பிறநாட்டில் குடியேறி, அந்த நாட்டுக் கறுப்பு இனமக்களை நிறத்துவேஷத்தின் பேரால் அடக்கி, ஒடுக்கி, ஒதுக்கி. உரிமைகளைப் பறித்து, அந்த மக்களை அடிமைகளைப்போல் நடத்தி வரும் தென்னாபிரிக்க வெள்ளையர் ஆட்சிக்கு ஆயுத சப்ளையை பிரிட்டன் மீண்டும் தொடர இருப்பது வருந்தத்தக்கதாகும்.

ஆபிரிக்காவிலுள்ள ஸாம்பியா நாட்டின் ஜனாதிபதியான டாக்டர் கென்னத் கவுண்டா ஆயுதசப்ளைகளை நிறுத்துமாறு கோரி பிரிட்டன், பிரான்ஸ் உள்ளிட்டு பல நாடுகளுக்கு சமீபத்தில் தூது சென்றுவந்தார்.

பிரான்ஸ். தென்னாபிரிக்காவுக்கு ஆயுதசப்ளையை நிறுத்துவதாகஒப்புக்கொண்டது உண்மையே: ஆனால் ஹெலிகொப்டர்கள், சிறிய ஆயுதங்கள் போன்றவற்றின் எதிர்கால சப்ளையை மட்டுமே அது நிறுத்தும். ஏற்கனவே அனுப்புவதாக ஒப்புக்கொண்ட ஹெலிகொப்டர்களை, வாக்குறுதி கட்டுப்படுத்தாது. (தென்னாபிரிக்கா கடந்த ஆறு ஆண்டுகளில் சிறிய ஆயுதங்களின் உற்பத்தியில் சுயதேவைப் பூர்த்தியை அடைந்துவிட்டது என்பதையும் இங்கு குறிப்பிடவேண்டும்.) அதேசமயம் பெரிய விமானங்கள், நீர்மூழ்கிகள் ஆகியவற்றை பிரான்ஸ் கையளிப்பதும் இந்தவாக்குறுதியினால் பாதிக்கப்படமாட்டாது எனக் கூறப்படுகிறது.

எதுவாயினும், பிரான்ஸின் இந்தச்சிறிய உதவி கூட ஆபிரிக்காவில் வரவேற்கப்படும் என்பதில் சந்தேகம் இல்லை. தென்னாபிரிக்காவுக்கு ஆயுத சப்ளையையும், அந்த நாட்டுடனான வர்த்தக உறவையும் நிறுத்துமாறு ஐ. நா. தன் அங்கத்துவநாடுகளைக் கேட்டுக்கொண்டும் பல நாடுகள் அதை உதாசீனம் செய்து வருகின்றன. பிரிட்டிஷ் முடியை காண்டர்பரி அதிமேற்றிராணியாரான டாக்டர் ராம்ஸே போன்றவர்கள் கூட ஆட்சேபித்திருக்கிறார்கள்.

1955-ம் ஆண்டு பிரிட்டனுக்கும் தென்னாபிரிக்காவுக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட சைமன்ஸ்டவுன் உடன்படிக்கையின்படி, 'நன்னம்பிக்கைமுனை'யைச்சுற்றியுள்ள கடல் பாதுகாப்புக்கு பிரிட்டன் ஆயுதங்களை வழங்கவேண்டும். இந்தக் கடல்பாதுகாப்புக்கு இரு நாடுகளும் கூட்டுப் பொறுப்பு வகிக்கவேண்டும் என்பது விதியாகும். தென்னாபிரிக்கா காமன்வெல்த்தில் அங்கநாடாக இருந்த போது இந்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. ஆனால் அதன்விதிகளை தென்னாபிரிக்கா மீறிவிட்டது என்பதும், காமன்வெல்த்தில் அது இப்போது ஒரு அங்க நாடு அல்ல என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்

எனினும் சைமன்ஸ்டவுன் ஒப்பந்தத்தின்படி கூட்டுக் கடல் பொறுப்புக்[illegible]டன் ஆயுதங்களை அனுப்பும் என இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது வெளிப்பாதுகாப்புக்காகவே இந்த ஆயுதங்கள் உபயோகிக்கப்படும் என்றும் தென்னாபிரிக்காவில் சுதேசிகளின் விடுதலைக் கிளர்ச்சிகளுக்கு எதிராக அவைபாவிக்கப்படமாட்டா என்றும் பிரிட்டன் கூறுகிறது. எனினும் தென்னாபிரிக்காவை உலகம் நம்பும் நிலையில் இல்லை.

தென்னாபிரிக்காவுக்கு ஐ. நா. விதித்த தடையை மீறி பிரான்ஸ் மட்டுமின்றி இத்தாலி, மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளும் ஆயுதங்களை வழங்குகின்றன. இந்த ஆயுத விற்பனை மூலம் பிரான்ஸ்மட்டும் 50 கோடி டாலர் லாபம் பெற்றிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இப்போதுபிரான்ஸ், இத்தாலி, மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளின் மூலம்தான் தென்னாபிரிக்காவில் இழந்த ஆயுத மார்க்கெட்டை மீண்டும் கைப்பற்ற நினைக்கிறது, பிரிட்டன். எனவேதான் 20 கோடி டாலர் ஆயுதங்களை அனுப்புமாறு தென்னாபிரிக்கா விடுத்துள்ள கோரிக்கையைக் கவனிப்பதில் ஹீத்தின் கன்சர்வேடிவ் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது எனலாம். பிரிட்டனில் தொழிற்கட்சி பதவியில் இருந்தபோதுகூட சில ஆயுதங்கள் தென்னாபிரிக்காவுக்கு அனுப்பப்பட்டன.

பல நாடுகள் ஐ. நா. தடையையும்மீறி தென்னாபிரிக்காவுக்கு ஆயுதங்களையும், இதர பொருட்களையும் அனுப்புவதற்கு வர்த்தக நலனே முக்கிய காரணமாகும், தார்மீக ரீதியில் எவ்வித நியாயமும் இல்லை என்றாலும்கூட பல நாடுகள் தென்னாபிரிக்கா விஷயத்தில் பொருளாதார நலனையே முக்கியமாகக் கருதுகின்றன என்பதற்குப் பல உதாரணங்கள் உண்டு.

லுஸாகா மண்டல சார்பற்ற மகாநாட்டின் முடிவுக்கு மாறாக இலங்கை தொடர்ந்தும் தென்னாபிரிக்காவுக்குத் தேயிலை அனுப்பி வருகிறது. குறைந்த விலையில் இந்தியாவிலிருந்து நிலக்கரியைப் பெற வாய்ப்பிருந்தும், சமீபகாலம்வரை தென்னாபிரிக்காவிலிருந்தே நிலக்கரியை இறக்குமதி செய்தது பாகிஸ்தான்.


பிரிட்டனின் நடவடிக்கை ஐ. நா. விலும், காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டிலும், ஆபிரிக்காக் கண்டத்திலும் எதிர்ப்பைக் கிளப்புமானாலும் அதனால் உடனடியாக ஆக்கபூர்வமான விளைவுகள் எதுவும் ஏற்படும் என தெரியவில்லை.

பிரிட்டிஷ் நடவடிக்கை காரணமாக காமன்வெல்த்திலிருந்து வெளியேறப் போவதாக பல நாடுகள் பயமுறுத்தின. ஆனால் தென்னாபிரிக்காவை வெளியேற்றியதுபோல காமன்வெல்த்திலிருந்து பிரிட்டனை ஏன் வெளியேற்றக் கூடாது எனக் கேட்கவேண்டும். காமன்வெல்த், பிரிட்டனின் சொந்தச் சொத்து அல்ல. பொருளாதார, அல்லது அரசியல்ரீதியில் எந்த விளைவுகள் ஏற்பட்டபோதிலும் காமன்வெல்த்திலிருந்து பிரிட்டனை வெளியேற்றுவது குறித்து அந்தநாடுகள் ஆலோசிக்கவேண்டிய தருணம் வந்துவிட்டது. இன்றேல் அந்தஅமைப்பிலிருந்துவெளியேறி பிரிட்டன் இல்லாமலேயே ஒரு காமன்வெல்த்தை அமைக்க அவைகள் முயலவேண்டும்.

—மணியம்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துக்கோர் இலக்கண நடிகர்
# ஆர். பேரம்பலம்



இலங்கையிலே இலங்கையரால் தயாரிக்கப்பட்டு வரும் 'குத்துவிளக்கு' என்ற தமிழ்ப்படத்துக்கு சிலதினங்களுக்குமுன் பருத்தித்துறை கடலோரமாக படப்பிடிப்பு நடந்துகொண்டிருந்தது. வெய்யில்வரும்வரை நடிக நடிகையர்களும் மற்றும்கலைஞர்களும் ஒய்வெடுத்துக் கொண்டிருந்தார்கள். வெளிப்புற ஷூட்டிங் அல்லவா? வழக்கம்போல வேடிக்கை பார்க்கும் மகாஜனங்கள் கூடிவிட்டார்கள்.

ஓரிடத்தில் ஒரு சிறு கும்பல் நின்றது. அதற்கு மத்தியில் நடிகர் ஒருவர் நின்று மகாஜனங்களுக்கு பிரசங்கம் செய்தார்.

'முற்றிலும் இலங்கையிலேயே தயாரிக்கப்படும் இந்தத் தமிழ்ப்படத்துக்குச் சில காட்சிகளைப் படம் பிடிப்பதற்காக உங்களுடைய ஊருக்கு வந்திருக்கிறோம். சில தினங்கள் இங்கேயே தங்கியிருப்போம். நாங்கள் தங்கியிருக்கும் விடுதியின் வாடகைப்பணமும் எங்கள் சாப்பாட்டுச் செலவுப் பணமும் உங்களுக்குத்தான்சேருகிறது. படப் பிடிப்புக்குத் தேவையான தளபாடங்களையும் சில்லறைத் தட்டுமுட்டுச் சாமான்களையும் உங்களிமிருந்தே வாடகைக்குப் பெற்றுக்கொள்கிறோம். சோடா, சிகரெட், வெற்றிலைமுதலியவற்றை உங்கள் கடைகளில்தான் வாங்குகிறோம். 'எக்ஸ்ரா'வாக ஒருவர் தேவையானால் உங்களில் ஒருவரைத்தான் கூலிக்கு அமர்த்துகிறோம், இப்படி எத்தனையோபேருக்கு வேலைவாய்ப்பும் பிழைப்பும் தருகிறோம். இலங்கையரின் பணம் இலங்கையருக்கே போய்ச் சேருகிறது. எங்கள் படத்தைப் பார்ப்பதோடல்லாமல் அந்தச்சாட்டில் உங்களைப்போன்ற இன்னும் பலர் பணமும் பெறுகிறார்கள்.

இப்படிப்பேசிக்கொண்டிருந்தார் அந்த நடிகர். இலங்கையில் தயாராகும் தமிழ்ப் படங்களுக்கு ஆதரவளியுங்கள் என்று மொட்டையாகக் கூறாமல் இப்படி நைஸாக அவர் போட்டபோடு ஆயிரம் சுவரொட்டி விளம்பரங்களுக்கு நிகரானதென்று நான் எண்ணிக் கொண்டேன்.

நடிக்க வந்தவர் தம்முடைய வேலையைப் பார்த்துக்கொண்டு பேசாமலிருக்காமல் பிரசாரத்தில் இறங்கும்படி அவரைத் தூண்டியது நாடகக்கலையிலும் நடிப்பிலும் அவர் உள்ளூரக் கொண்டிருக்கும் விஸ்வாசமான அத்தியந்த பற்றுதலாகும், 'கலை கலைக்காகவே' என்று நம்புபவர்களில் அவரும் ஒருவர். காசு, பணம், புகழ், பட்டம், இதுகளைப் பற்றி அவருக்கு அதிகம் அக்கறையில்லை. தம்மைப் பிரபல்யப்படுத்த வேண்டும் என்று அவர் சுயபேரிகை கொட்டுவதில்லை. இக்காரணத்தினால் பலருக்கு அவரைப்பற்றி அதிகம்தெரியாது.

'குத்துவிளக்கு' படம் வெளிவந்தால் இன்னும் பலருக்கு அவர் அறிமுகமாவார். இப்படத்தில் அவர் ஒரு யாழ்ப்பாணத்து ஏழை விவசாயியாக நடிக்கிறார்.

கொழும்பு சென்ட் ஜோசேப் கல்லூரியில் கல்வி பயிலும்போதே திரு. ஆர் பேரம்பலம்பேச்சுப்போட்டிகளில் பல பரிசுகள் பெற்றார். இதைத் தொடர்ந்து அவர் 'தெஸ்பியன்ஸ்' என்ற ஆங்கில நாடகக் குழுவில் சேர்ந்து பல ஆங்கிலநாடகங்களில் நடிக்கத் தலைப்பட்டார். 'ஜூலிய சீசர்' என்ற ஷேக்ஸ்பியர் நாடகத்தில் அவர் ஏற்றுக்கொண்ட (காஸ்கா) என்னும் வில்லன் பாத்திரம்அவருக்குகொழும்பிலேயே நல்ல புகழ் வாங்கித் தந்தது.

முப்பது வருடங்களுக்கு முன்பு கொழும்பில் பிரபலமாயிருந்த வெள்ளவத்தை நாடகக் கிளப்பின் சந்திரஹரி நாடகத்தில் இவர் கலையரசு சொர்ணலிங்கம் முதலியவர்களுடன் சேர்ந்து நடித்தார். இதில் அவருடைய பாகம் கண்டகாலனாகும். காலஞ்சென்ற திரு. க. கனகரத்தினம் திரு. எம். என். திருவிளங்கம் திரு. ரி. ருத்ரா முதலிய பெரியோர்களின் ஆதரவு இந்த நாடகசபைக்கு இருந்தது.

திரு.பேரம்பலம் தொடர்ந்து சாணக்கியன், பக்ததுருவன், நரகாசுரன் முதலிய நாடகங்களில் நடித்தும் சிலவற்றைத்தாமேதயாரித்தும் அரங்கேற்றியும் வந்தார்.

கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டப நிதிக்காக மேற்படி சபையினர் ஸ்ரீமுருகன் நாடகத்தை கொழும்பில் மேடையேற்றினார்கள். இதில் கலையரசு முதலிய பிரபல நடிகர்களுடன் திரு பேரம்பலம் விருத்தன் வேடம் தாங்கி நடித்தார். இது நடந்தது 1951-ம்ஆண்டில்.

இக்காலத்தில்தான் அவர் பல வருடங்களாகரேடியோ சிலோனில் ரேடியோ மாமாவாக சிறுவர் மலர் நிகழ்ச்சியை நடத்தி வந்தார். அவர்பங்குபற்றிய ரேடியோ நாடகங்கள் கணக்கற்றவை.

கொழும்பு திறைசேரியில் வேலைபார்த்து வந்த திரு பேரம்பலத்துக்கு மண்டபம் காம்புக்கு மாறுதல் வந்தது அங்கேயும் அவர் சும்மா இருக்கவில்லை. மதுரை நடிகர்களாகிய பி. எஸ். கோவிந்தன், பி. எஸ். சிவபாக்கியம் கோஷ்டியினருடன் எட்டு நாடகங்களில் மண்டபத்தில் நடித்தார்.

இலங்கை திரும்பி வந்து மட்டக்களப்பில் சிலகாலம் சேவையாற்றியபோது அங்கும் சில நாடகங்களை தயாரித்தார்.

திரு. பேரம்பலம் தற்சமயம் யாழ்ப்பாணத்தில் மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளராகக் கடமையாற்றுகிறார். இங்கே சில வருடங்களுக்கு முன்பு அவர் 'அப்பர்' நாடகத்தை பிரமாதமாகத் தயாரித்து நடித்தது பல ரஸிகர்களுக்கு நினைவிருக்காலாம். முந்திய அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தயாரித்த 'பெண்பாவை' நாடகத்தில் இவர் பிரதான பங்கெடுத்துக் கொண்டார். தற்சமயம் அவர் அழகவல்லி' என்னும் நாடகத்தில் அந்திராசியாக நடிப்பதாகத் தெரியவருகிறது.

உத்தம நடிகர் ஒருவருக்கு வேண்டிய ஒழுக்கம் யாவும் அமையப்பெற்றவர் திரு. பேரம்பலம். அவர் வெற்றிலை போடுவதில்லை. புகை பிடிப்பதில்லை. மது அருந்துவதில்லை தென்னகத்தில் திரு டி.கே, சண்முகம் எப்படி நடிகர்களுக்கெல்லாம் ஓர் உதாரண புருஷராக விளங்குகிறாரோ அது போல ஈழத்துக்கோர் இலக்கண நடிகராக திரு. பேரம்பலம் விளங்குகிறார்.

'கடமையைச்செய் பலனை எதிர்பாராதே' என்ற கீதோபதேசம் அவருக்கு வழிகாட்டியாக இருக்கிறது.

— வி. என். பி. —

# நிமோனியா என்னும் சுவாச சன்னி!

## இலேசாக மாற்றக் கூடிய இந் நோய் நிதானம் தவறினால் ஆபத்து

## வைத்திய ஒளி

சுவாச சன்னி அல்லது நிமோனியா ஆதிகாலத்தில் ஆட்கொல்லியாகவே இருந்தது. அதாவது தற்காலத்தில் புற்றுநோய் போன்று. 1943-ம் ஆண்டின் பின்புதான் இந்நோயை நாம் கொல்லக்கூடியதாயிருந்தது. சேர் அலெக்சாண்டர் பிளெமிங் என்பவரே இந்நோயின் முதலாவது எதிரியாகத் திகழ்ந்தார். இந்நோய்க்கிருமியை அழிக்க அவர் கண்டுபிடித்துப் பாவித்த ஆயுதமே இன்று சர்வசாதாரணமாகப் புழக்கத்திலிருக்கும் பென்சிலின் மருந்தாகும். இம்மருந்தைக் கண்டறிந்தபின் இந்நோயின் அபாயமே இல்லாமல்போய் விட்டது. இந்நோய்க்குக் காரணமான கிருமிகள் இல்லாத இடமே இல்லை எனலாம். ஒவ்வொரு மனிதரிலும் தங்கியிருக்கிறது. ஆனால் அவையெல்லாமே மூர்க்கத்தனம் படைத்தவையல்ல. ஒரு சில மூர்க்கமான கிருமிகள் மட்டுமே சுகதேகிகளைத் தாக்கும். மற்றவையெல்லாம் பலவீனப்பட்டவர்களையே தாக்கும். பொதுவாக பிரசவத்தால் இளைத்திருக்கும் தாய்மார், சிறு குழந்தைகள், மற்றும் வேறுவகைப்பட்ட சுவாசரோகங்களால் பீடித்து இளைத்திருக்கும் எவ்வயதினரையும், எப்பாலாரையும் இக்கிருமிகள் தாக்கும்.

இக்கிருமிகள் [illegible] தன்மையுடையதால் சுற்றுடலில் உள்ள ஏனையோருக்கும் பரவும். ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டுமென்றோ அல்லது ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டுமன்றோ இந்நோய் இருக்காது. பொதுவாக எல்லா இடத்திலும் எக்காலத்திலும் ஏற்படும். ஆனால் குளிர்காலம் கூடிய அனுசரணையாயிருப்பதாக அறியப்படுகிறது. இந்நோய் பொதுவாக நாசி, மூக்கு, தொண்டை ஆகிய மேல் சுவாச உறுப்புகளில் குடிகொண்டிருக்கும் பல்வேறுபட்ட நுண்மை, நுண்ணுளங்களால் ஏற்பட்டாலும் அதற்கென உள்ள நிமோகோக்கஸ் என்ற நுண்ணமே நேரடியாக இந்நோயை உண்டாக்குகிறது.

நிமோனியாவைப் பல வகைகளாகப் பிரித்திருந்தாலும் அதன் சுருக்கமான வரைவிலக்கணம் சுவாசப்பைத் தாபிதம் என்றே கூற வேண்டும்

இந்நோயின் காரணங்களுக்கேற்ப இதனை இரு பெரும் பிரிவாகப் பிரிக்கலாம். (1) தனித்துவமான நிமோனியா - [illegible] மட்டுமே இந்நோய் ஏற்படும் (2) தாவல் நிமோனியா - இதில் பல்வேறுபட்ட கிருமிகளும் நோயாளியின் சுவாச உறுப்புகளின் வன்மை மென்மையை அறிந்து சுவாசப்பையை நோக்கித்தாவித் தாவிச் சென்று படிப்படியாக நிமோனியாவை உண்டாக்கும்

### தனித்துவமான நிமோனியா

இந்நோய் ஆரம்பத்தில் சுவாசப்பையின் ஒரு பகுதியைத் தாக்கிப் பின் அதே சுவாசப்பையின் மற்றும் பிரதேசங்களை அல்லது மற்றச் சுவாசப்பையின் எப்பகுதியையாவது நோக்கி அதன் தொற்றுத்தன்மை பரவும். சிலசமயம் சுவாச உறையையும் தாக்குவதுண்டு. தாக்கப்பட்டபகுதி திண்மமடைந்து அதிலிருந்து குருதி அணுக்கள், மீழ் திரவங்கள் ஆகியவை காற்றுப்பைகளுக்குள் வடியும் வடிந்த திரவமே ஈற்றில் பல மாறுதல்களைப் பெற்றுச் சளியாக உருப்பெறுகிறது. குருதிக்கலன்களின் உடைவைப்பொறுத்தே சளியுடன் இரத்தம் கலந்து வெளியாகும்

### குணங்குறிகள்


இப்நோயின் குணங்குறிகளை மற்றும் சுவாச ரோகங்களிலிருந்து நுணுக்கமாகப் பிரித்தறிந்துகொள்வதில் தான் இந் நோயின் போக்குத் தங்கியிருக்கிறது. இந்நோய் சடுதியாக ஆரம்பிக்கும் அப்போது பாலர்களில்வலிப்புக் காணும் பெரியவர்களில் பிதற்றல், நடுக்கம், குலைப்பன் அல்லது வாந்தி சிலரில் அருமையாகக் கழிச்சல் ஆகியவையும் சேர்ந்து காணும். சில மணிநேரத்துக்குள் சுரவேகம் மிக வேகமாக 105 டிகிரிவரை ஏறிச் செல்லும். அச்சமயம் நாடி சுவாச விகிதம் 3:1 என்றவாறு மாற்றமடையும் நாடி நடை வேகப்பட்டு மென்மையாக இருக்கும் சுவாசம் ஒரு நிமிடத்துக்கு 35 தடவை நடைபெறும். நோயாளியின் மூக்கு அலகுகளின் தீவிர அசைவைக் கொண்டு நோயாளிபடும் அவஸ்தையை அனுமானிக்கலாம் சுவாசத்தின்போது நோவேற்படுமாகையால் நோயாளியால் ஆழமான சுவாசத்தைஎடுக்கமுடியாது இதன்காரணமாக நோயாளி நீலநிறமடையக்கூடும். சிலரில் இரத்தஅமுக்கம் குறைந்தும் காணப்படலாம். சுரவேகத்தால்தலையிடி, உடம்பு குத்து-ழுவு, பசியின்மை,

— டாக்டர் க. மருது
டி. ஐ. எம். [ விசேஷம் ]

(14- பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையுலகில் வெள்ளி விழா கண்ட திருமதி சரஸ்வதி பாக்கியராசா!



சிங்கப்பூரில் பிறந்து வளர்ந்தவர் திருமதி சரஸ்வதிபாக்கியராசா! தனது இளம் வயதிலேயே நேதாஜி சந்திர போஸ் அவர்களால் இரண்டாம் உலக யுத்தத்தின்போது அமைக்கப்பட்ட இந்திய தேசியப்படையில் சேர்ந்து வீரப்போர் நடாத்தினர். அங்குவிருந்து பெற்ற வீராங்கனை என யுத்தம் முடிவடைந்த பின் இலங்கைக்கு வந்தார்.

அக்காலத்திலிருந்தே ஆசிரிய சங்கங்கள், காந்திய சேவா சங்கம் போன்று மற்றைய பெயர்பெற்ற ரசிகர் சபாக்கள் அமைக்கும் கலை அரங்குகளில் பங்கு பற்றினர்.

தாமே மீட்கும் வயலின் இசையுடன் உற்சாகமூட்டும்தேசியகீதங்கள் தமிழிலும் ஹிந்தியிலும்பாடுவதில் நாளுக்கு நாள் புகழேணியில் ஏற்றம் கண்டார்.

தன்மகளின் திறமையில் பெருமைகண்ட தந்தையார் திரு. சரவணமுத்து அவர்களே தாயினும் சாலப் பரிவுடன் தன் மகளுக்குப் பக்கத்துணையாக இருந்தார். தம் பணத்தையே செலவு செய்து கேட்குமிடமெல்லாம் சென்று இலவசக் கச்சேரிகள் வழங்கினர்கள்.

செல்வி சரஸ்வதியின் காலத்தில் இவருடன் சரி நிகராகவோ அல்லது ஏற்றமாகவோ சங்கீத உலகில் பிரகாசித்தவர்கள் செல்விகள் அன்னலெட்சுமி பரஞ்சோதி, சத்தியபாமா ஆகியோர். அவர்கள் திருமதிகள் ஆனதும் கலத்துள் வைத்த விளக்கானர்கள்.

இவரோ கலைப் பிரியரான திரு பாக்கியராஜா அவர்கள் உறுதுணையாய் வாய்த்தபாக்கியத்தால் குன்றிலிட்ட தீபமாய் பாக்கியராஜா சரஸ்வதியாக கலையுலகில் பிரகாசிக்கிருர்.

## அகந்தை இல்லாதவர்

சொக்குவில் இந்துக் கல்லூரி சங்கீத ஆசிரியராகக் கடமைபுரிந்தாலென்ன, வளர்ந்தார்க்கும், வளராதார்க்கும் வானொலியில் இசை வளர்த்தாலென்ன, அகந்தையெதுவுமின்றி தன் அறிவில் நிறைவுகாண -முன்னணி வித்துவான்கள் பலரையும் அணுகி, ஐயந்திரிபற வாழ்நாள் முழுவதும் மாணவ நிலையில் தொடர்ந்து இசைபயிலும்பண்புடன் வாழ்பவர்.

## மதுரகீதம்

கேட்போரை மயக்கும் மதுரமான சாரீர வளத்தினல் அபூர்வமான உருப்படிகளை இராகம் பாடுதல், சாகித்திய சுத்தமாய் பாடுதல், கற்பனைசுரம்பாடுதல் ஆதியாம் அணிகளால் அழகுபடுத்தி இசைமரபு தவருமல் புதுமெருகுடன் அநாயாசமாய்ப் பாடுகிருர்.

ரம்மியமானகச்சேரி, ஜனரஞ்சகமான மெல்லிசை, வெற்றிமுழக்கும் தமிழிசை, இன்பம் குலவும்இந்திஇசை, திவ்வியமான பஜனை, தெய்வீகத் தேவாரம் தேசியப் பாடல், பக்தி பரவசப் பாக்கள், பாரதியார் பாடல் என ரசிகர்கள் தங்கள் தங்கள் ஞானத்தால் வகுக்கும் எந்தத் தலையங்கமானுலும்சரி, முழுநேரச் சேவை செய்யத் தயார். பிறர் இன்பத்தில் திருப்திகாணும் பெரும் ஆற்றலுடைமையால் இவர் 25 வருடங்கள் கலையுலகிற்கு குறைவிலாச் சேவை செய்திருக்கிருர்.

இவரின் இசைத் தொண்டைப்போற்றி வெள்ளிவிழா எடுக்கும் வண்ணுர்பண்ணை கலாசேவை மன்றத்தை நாம் பாராட்டாமலிருக்க முடியாது. இவரின் இசைமென்மேலும் பரவி கர்நாடக இசையுலகிற்கோர் கலங்கரைவிளக்கமாய் திருமதி பாக்கியராஜாசரஸ்வதி விளங்க இறையருள்வேண்டி கலைஞருலகம் பேருவகையடைகிறது. இச்சமயத்தில் அன்னுரை எமது வாசகர்கள் சார்பில் [illegible] இல் 'ஈழநாடு' பெருமை யடைகிறது.

—'மணி'



பானை சட்டி சழுவுவதை மறந்த இந்தப்பாவை யாருக்காக ஏங்குகிறதோ? ஈழத்தில் தயாராகும் வி. எஸ். ரி. பிலிம்ஸாரின் 'குத்துவிளக்கு' படத்தில் கதாநாயகியாக நடிக்கும் நாட்டிய கலாபமயில் செல்வி லீலா நாராயணன்தான் இப்படிக் கவர்ச்சியாகத் தோன்றி ரசிகர்களை ஏங்க வைக்கிருர். இப் படத்திற்கான படப்பிடிப்புகள் இப்போது பருத்தித் துறையில் வேகமாக நடக்கிறது. கட்டடக்கலை நிபுணர் திரு. வி. எஸ். துரைராசா தயாரிக்கும் இப் படத்தின் திரைக்கதையை அவரே எழுதியுள்ளார். வசனத்தை 'ஈழத்துரத்தினம்' சிறப்பாக எழுதியிருக்கிருர்! இந்தப்படத்தை இயக்குவதோடு, படப்பிடிப்பையும் டபிள்யு. எஸ். மகேந்திரன் கவனிக்கிருர்.

—தகவல்: இ. சபானந்தன்

# 'பரதமும் இசையும் உலகெலாம் பரவிட வேண்டும்!'

— அடையாறு இலட்சுமணன்

'கடற்கரையை அடுத்துள்ள ஏதேனும் ஓர் அமைதியான சூழ்நிலையில் கர்நாடக இசை, பரதக்கலை ஆகியவற்றை எல்லாநாட்டினரும் பயில வாய்ப்பளிக்க வேண்டும். பல்வேறு துறையிலுள்ள கலை விற்பன்னர்களிடம் கலைபயில அவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். மாணவர்களும் அவர்களுடைய ஆசிரியர்களும் ஒன்றுகூடி ஆச்சிரமம் போன்ற குடில்கள் அமைத்து கலைப்பயிற்சியில் ஈடுபட வேண்டும். பரதநாட்டியம், கதக்களி, வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், வாய்ப்பாட்டு எல்லாம் அங்கே சொல்லிக்கொடுக்க வேண்டும். நமது புராதனமான இசைக்கலையும், பரதக்கலையும் அவற்றின் புனிதம் கெடாமல் பாதுகாக்கப்படவேண்டும்' என்று திருமதி ருக்மணிதேவியாரின் கனவை நனவாக்கத் துடிக்கும் அடையாறு பரத சூடாமணி இயக்குநர் கே. லட்சுமணன் அவர்களை அண்மையில் கொழும்பு பல்கலைக்கழக புதிய கலைமண்டபத்தில் காணும் வாய்ப்புக் கிடைத்தது.

ஏறக்குறைய 40 வயதுடைய மெலிந்த தோற்றமும், வசீகரத் தன்மையும் கொண்ட திரு. லட்சுமணன் தெய்வீகத் தன்மை பொருந்திய பரதக்கலையை மிகவும் பக்தி சிரத்தையுடன் கற்று மற்றவர்களுக்கும் உதவக்கூடிய முறையில் கலைத்தொண்டு புரிய ஆண்களும் பரதக்கலையைப் பயில முன்வரவேண்டும் என்ற ஆர்வமுடைய இவர் 1944-ம் ஆண்டு கலாக்ஷேத்திரத்தில் சேர்ந்து மிருதங்கம், பரதம் ஆகியவற்றில் டிப்புளோமாப் பட்டம் பெற்றபின் 1956-ல் ரஷ்யா, கிழக்கு ஐரோப்பா ஆகிய நாடுகளுக்குச் சென்று அங்கு இக்கலையை வளர்த்தார். யு. என். ஈ. எஸ். சீ. ஒவின் விருதைப் பெற்ற இவர் வைஜந்திமாலாவின் நடனப் பள்ளியின் முதல் ஆசிரியராக இருந்து 'சண்டாளிகா' அழகர் குறவஞ்சி சங்கத் தமிழ் மாலை ஆகிய நாட்டிய நாடகங்களை நடாத்தியும் பிரதம பாகத்தில் நடித்தும் பல பாராட்டுக்கள் பெற்றுள்ளார். தற்பொழுது அடையாறு பரத சூடா மணி, கலாக்ஷேத்திராவின் இயக்குநர் ஆக இருந்து வரும் அவரிடம் நான் கேட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்கள்.

கேள்வி- இசைக் கலையில் உங்களுடைய குருயார்?

பதில்- இசைக்கலையில் ஒவ்வொன்றையும் ஒவ்வொருவரிடம் கற்றிருக்கிறேன். பரதநாட்டிய கலைக்கு அடையாறு சாரதா கலாக்ஷேத்திர அதிபர் ருக்குமணிதேவியாரும், மிருதங்கத்தில் விட்டல ஐயரும், சங்கீதத்தில் பூசலூர் கிருஷ்ணமூர்த்தி



சாஸ்திரிகளும [illegible] தேவாச்ச[illegible]ரும், டைகர் வரதராச்சாரியாரும் என்னுடைய குருநாதர்களாவர்.

கே- தமிழகத்திலும் ஈழத்திலும் உங்களின் மாணவிக

(14-ம் பக்கம்பார்க்க)




நாடக விமர்சனம்

## வெள்ளிக் கிண்ணம்

அண்மையில் யாழ். ஈச்சமோட்டை விளையாட்டு மைதானத்தில் 'கலைக்கதிர்' நாடகமன்றத்தினர் நடாத்திய கலைவிழாவில் இடம் பெற்ற மூன்று சிறந்த நாடகங்களில் மிகச் சிறந்ததென அனைவராலும் போற்றப் பெற்ற "வெள்ளிக்கிண்ணம்" நாடகம் ஒரு புரட்சிச் சித்திரமே!

சங்கராக நடித்த ஏ.எஸ். ஜெயராஜ் நட்பு என்றுல் இப்படித்தான் என்று தந்தையுடன் வாதாடும் கட்டத்திலும் நண்பன் மோகனிடம் பணம்கேட்டு கிடைக்காது மனமுடைந்து பாட்டுப் பாடுவதிலும் அவர் நடிப்பு உச்சக்கட்டத்தில் நிற்கிறது.

தந்தையாக நடித்த ராஜசிங்கம் நட்பு வெறும்போலியடா என்று மகனைத் திருத்தும் கட்டத்தில் இயற்கையோடு ஒட்டிவிட்டார். ஆனாலும் சில இடத்தில் வில்லன் வாடை வீசுவதை திருத்தினல் நன்று.

வில்லனாக நடித்த புஷ்பலிங்கம் 'நட்பு வெறும் உப்பு' என்று கூறி அண்டிவைக்கும் கட்டத்தில் தன் நடிப்பில் தனி இடம் பிடித்துள்ளார்.

அனுதை மோகனாக நடித்த சண்முகசுந்தரம் அமைதியாகபாத்திரத்தைஉணர்ந்து நடித்துள்ளார். முயற்சி எடுத்தால் முன்னேற்றம் அடையலாம்.

ஸ்ரனிமனேவின் கதைவசனம் கருத்தில் நிலைத்திருக்கும் வண்ணம் அமைந்துள்ளது. ஏனே அவர் பெண்ணை மறந்தார்.

சண் ஜெயராஜின் டைரக்ட் நாடகத்தை கண் இமைக்காது பெண் பாத்திரம் அற்ற கவலையை மறக்க வைத்துள்ளது!

மொத்தத்தில் "வெள்ளிக் கிண்ணம்" நாடகம் மிகச் சிறப்புடையதாக இருந்தது. ஒரு சிறு குறைபாடுகள் இருந்தாலும் கலைக்கதிர் நாடக மன்றத்தினர் திறமை பாராட்டத்தக்கது.

—க. கந்தசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு பரிசு பெற்ற காவியம்

# தித்திக்கும் தேன் நிலவோ!

— கவிஞர் சா. வே. பஞ்சாட்சரம் —

## 6. தீந்த நெஞ்சில் தேன்மாரி

உங்களை இருத்தியோர் நாளேனும்
    உணவிடும் இன்பம் இறையின்பம்
இங்குமை வாட்டி வாங்கிட்ட
    எண்ணில் பொருள்கள் விற்றிட்டால்
சங்கட மின்றிப் பணம் வருமே
    தாயே ஐயாயி ரயரூபா!
எங்கள் ஊரில் பரப்பைந்தை
    எடுப்போம் விலைக்கு! பயிர்செய்வோம்!

கடனை அடைப்போம் வரும்படியில்
    கழிப்போம் நேர்த்திக் கடனெல்லாம்
தடையில் லாமம் இனி யேனும்
    சாற்றுக அம்மா கடன்தொகை! அத்
துடனே சொல்க நேர்ந்துள்ள
    உயர்ந்த கோயிற் பணியாவும்!
கடவுளே என்ன அதிசயமோ
    காதே பொய்யோ கனவாமோ?

கருதி வியந்தாள் தாய் கடனோ
    கடக்கும் பத்தா யிரம்என்றான்
இரு சொல் கின்றேன் ஒழுங்காக
    எல்லா நேர்த்திக் கடன்களையும்
மருதடிப் பிள்ளை யாருக்கு
    வழங்கல் எலிவா கனமொன்று
தெருவடி அய்ய னுருக்கு
    செய்தல் கம்ப விளக்கொன்று!

மட்டுவி லம்மன் கோயிலிலே
    வழங்கல் அன்னக் கொடை! ஆம்! மா
விட்டபு ரத்தா யிரத்தெட்டு
    வில்வம் சார்த்திப் பூசையிடல்
கட்டடங் கட்ட வைரவர்க்குங்
    காசைந் நூறு கொடுத்திடுதல்
மொட்டை அடித்துப் பழனியிலே
    முருகன் முன்கா வடியெடுத்தல்.

மடங்கள் ஐந்து பூசைப்பூ
    வனங்கள் மூன்று! திருக்கேணித்
தடங்கள்! தண்ணீர்ப் பந்தல்கள்
    தக்க படியாய் அமைத்திடுதல்
தொடங்கி வைத்தல் பூசையினை
    சும்மா கிடக்குங் கோயில்களில்
இடங்கள் பார்த்துச் சில கோயில்
    எழுப்பு விக்க முயன்றிடுதல்!

படிப்பித் தல்நற் புராணங்கள்
    பலவூர்க் கோயில் தமில்!எழுதி
நடிப்பித் தல்நா யன்மாரின்
    நலங்கொள் சரிதை நாடகங்கள்!
மடிப்பிச் சைகொண் டுள்ளூரில்
    வயிர வர்க்கோர் மனைசெய்தல்
நடப்பித் தல்நல் யாகங்கள்
    நாட்டுக் கோயில் பலவற்றில்!

ஈரு ரளவு கோயிற்சிறீ
    ரங்கர் தமக்கு மாவிளக்கு!
பேரூர் மதுரை மீனாட்சிப்
    பெரு மாட்டிக்கும் அருச்சினைகள்!
ஆரூர்த் தேரைத் தரிசித்தல்!
    அறிதல் சிதம்பர ரகசியமும்!
நீரார் குமரி நீராடல்!
    நினைக்கமு நெகச்சில் உண்பித்தல்!

பதிகம் பத்தந் தாதிகள்!
    பாமாலை பிள் ளைத்தமிழ்கள்!
துதிப்பா கோயிற் புராணங்கள்!
    துறவி யர்நற் சரிதைகள்!
அதிகம் அதிகம் வெளியிட்டே
    ஆன்ம ந்தை பரப்பிடுதல்!
இதுபோல் இன்னும் பலஉண்டாம்!
    எல்லாம் சொல்வார் அப்பாகேள்!

கோடை அற்றின் ஓட்டம்போற்
    குரலில் பேசி ஓய்ந்தாள்தாய்!
ஓடி ஓடித் தீர்த்தாலும்
    உங்கள் வாழ்நாள் போதாது!
ஈடில் இன்பம் எனக்கிவைகள்
    எண்ணி எண்ணிச் செய்திடுதல்!
கூடிப் பாடு பட்டுழைத்துக்
    கோயிற் பணியில் மூழ்கிடுவேன்!

(தொடரும்)

# சிந்தைகவர் கந்

# சரித்திரம் அ

(சென்றவாரத் தொடர்ச்சி)

மேலை நாடுகளில் வரலாறுகள் தொகுப்புப்போல் கீழைத்தேய வரலாறுகள் அமைவதில்லை. அமைப்பதும் வல்லை; காரணம் நிரந்தரமான வரலாற்றுக் குறிப்புக்களை உடனுக்குடன் எழுதிவைத்தவர்களும் இல்லை; அப்படி எழுதிவைக்கும் பழக்கமும் வழக்கத்திலில்லை. ஆனதால் சரித்திரக் கருவூலங்களான பழைய நாணயங்கள், செய்புப் பட்டயங்கள், செப்பேடுகள், கல்வெட்டுக்கள், புதைபொருள்கள், ஆபரணங்கள், அணிமணிகள், ஜாடி ஓடுகள், பானை ஓடுகள் ஆதியனவற்றைக் கொண்டு வரலாறு தயாரிக்கும் வழக்கமாயிற்று. இந்த வழக்கத்தோடு நின்றாலும் ஒருநாட்டின் சரித்திரம் ஓரளவு பூர்த்தியாகும். ஆனால் மொழி, மத, கலாச்சார அபிமானங்களால் தூண்டப்பட்டு வரலாற்றைத் திரித்து கற்பனைக் காவியமாக்குவாரும் பலர் சரித்திரப் பிரியர்களாக வாழ்கிறார்கள். இவை நாட்டின சரித்திரமாக.

கந்தரோடையைப்பற்றி முதலில் கூறப்பட்ட நூல் மகாவம்சம் என்ற சிங்கள இதிகாச நூல். அதனையடுத்து கி. பி. 1917-ம் ஆண்டில் ஆய்வுகள் நிகழ்த்திய போல் பீரிஸ்துரை (சிங்கள வரலாற்று ஆய்வாளர்) தாம் எழுதிய கந்தரோடையில் புதைபொருள் ஆய்வு என்ற முதலாம் இரண்டாம் பாக வெளியீடுகளில் கந்தரோடையின் சரித்திரத்தைத் தமது தொல்பொருள் ஆய்வுகளுடன் எழுதியுள்ளார். அதற்குப்பின் இலங்கையின் வரலாற்றுடன் கந்தரோடையைப்பற்றிக் குறிப்பிடுகிறார். வரலாற்று ஆசிரியர் இராசநாயக முதலியாரவர்கள். இவைகளை அடுத்து 1944-ம் 45 ம் ஆண்டுகளில் வெளிவந்த வித்தியாபோதினி என்னும் அரசாங்க வெளியீட்டில் தொடர் கட்டுரையாக, "புகழ் புதைந்த புராதன நகரம்" என்ற தலையங்கத்திலும். 1946-ம் ஆண்டில் அதே வெளியீட்டில் "யாழ் நாட்டு இறந்த நகர்ச் செல்வங்கள்" என்ற தலையங்கத்தில் தொடர் கட்டுரையாகவும் கந்தரோடையைப்பற்றி நான் எழுதியிருந்தேன். 1960-ம் ஆண்டில் கலைச் செல்வி என்ற மாதசஞ்சிகையில் "யாழ் நாட்டு இறந்தநகர்செல்வங்கள்" என்ற அதே தலைப்பில் புதிதாகக் கண்டெடுத்த நாணயங்கள் தொல்பொருள்கள் பற்றிய விரிவான கட்டுரைகள் தொடர்ச்சியாக வெளிவந்தன. அதற்குப்பின் 1962 ம் ஆண்டில் உணவட்டுனே குணரத்தினதேரோ என்ற பௌத்த துறவியொருவர் "மறைந்த யாழ்ப்பாணம்" என்ற சிங்கள நூலிலும் கந்தரோடைக் கிராமத்தைப்பற்றி எழுதியிருந்தார். வரலாற்று ஆர்வலர் திரு குலசபாநாதன், முத்துக்குமாரசாமி போன்ற இன்னும் பல வரலாற்று ஆசிரியர்கள் கவனத்தை இக்கிராமங் ஈர்த்திருக்கிறதென்றால். புராதனமாக இங்கு வாழ்ந்த நாகரிக மக்கள், பிற்காலத்தவர் தங்களை நினைவுகொள்வதற்கு வரலாற்றை அறிவதற்கு- ஏதோ அடையாளங்களை விட்டுச் சென்றிருக்கிறார்கள் என்பதுதான் கருத்து. அவர்கள் யார் எவ்வினத்தைச் சேர்ந்தவர்கள் எம்மொழியைப் பயின்றவர்கள் அவர்கள் வழிபாடுதான் எப்படியோ என்பதை அறிவதிலே ஆர்வம் ஏற்படுதல் இயற்கையே. முன்னர் சுட்டிக்காட்டியபடி முறையான வரலாற்றுத் தொகுப்புக்கள் ... சரித்திரங்களைப்பற்றி ...



கட்டுரை ஆசிரியர்
திரு: சி. பொன்னம்பலம்
"ஆதவன்"

மான முடிபுகளை எடுக்க இயலாது. இந்த உண்மையைக் கட்டுரையை முடிவு பெறப் படித்ததும் உணர்ந்துவிடலாம்.

கிராமமும் கிராமத்தின் உட்பகுதிகளும், அயற்கிராமங்களும் பெற்றிருக்கும் பெயர்களைக் கொண்டு சிலர் அவை சிங்களப் பெயர்கள் என்ற முடிபிற்குவந்திருக்கிறார்கள் ஆனால் இன்று தமிழ் என்று வழங்கிவரும் மொழியுடன் திரிபுபடுவதால் அப்பெயர்களைச் சிங்களம் என்று இலகுவாகக் கூறிவிட நியாயமில்லை. உண்மையாக மொழி உற்பத்திக்கு வித்தாயிருந்த ஈழமும் அதனைச் சூழ்ந்த பெரும்பகுதிகளும் இயற்கைக் கோளாறுகளால் ஆழ்ந்துவிட்ட வரலாறு ஒன்று உண்டு. அங்கே வளர்ந்தமொழி திராவிடம். ஆதிதிராவிட மொழிக்கும் இப்போது வழங்கும் தமிழ் மொழிக்கும் தொடர்பு உண்டேயொழிய அது இதவல்ல: தமிழ் அதன் வழிமொழி. பாளியும் சிங்களமும் தோற்றமெடுக்கவும் அம்மொழி உதவியிருக்கிறது. இந்த அடிப்படை உண்மையை வைத்துக்கொண்டு யாழ்ப்பாணக் குடாநாட்டுக் கிராமங்களின் பெயர்களை உற்று நோக்குவோம். கிராமங்களுக்கு அன்று இட்ட பெயர்கள் அதே உச்சரிப்பில் இன்று வழங்கிவரவில்லை; சிதைந்தும், திரிந்தும், மருவியும் பலபல மாற்றத்துடன் வழங்கிவருகின்றன. சுன்னாகம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், சண்டிருப்பாய் இவைகள் கந்தரோடையின் பக்கலிலுள்ள கிராமங்கள். மக்கள் தாம் வழங்கிவரும் மொழி உச்சரிப்புக்கு ஏற்றவாறு திரித்துக் கிராமங்களின் பெயரை அழைத்து வருகின்றனர் சிங்கள நாட்டிலும்கூட அப்படியே நடக்கிறது, ஆனால் தமிழர் வாழும் கிராமப் பெயர்களைவிட அவை குறைந்த அளவிலேயே மாற்றம் அடைந்துள்ளன. உதாரணமாக கம், காமம் என்ற முடிபையுடைய பெயர்களை எடுப்போம். அவை மல்லாகம், சுன்னாகம், பண்ணாகம் எனவும் பனங்காமம், கொடிகாமம், கதிர்காமம் எனவும் வழங்குகின்றன. கிராமம் என்ற ...மம். கம் என மருவியமையும் கிராமம் என்ற சொல்லிலிருந்து கிராமத் தலைவனுக்குக் கிராமணி காமணி என்றும் வருதல் ஒப்புநோக்கத்தக்கது பிலவு புலம் என்ற பொது இடப்பெயர்கள் பழந்தமிழ் லக்கியங்களில் வருதலும் இடப்பெயர்களில் இங்கு வருதலும் ஒப்புநோக்கத்தக்கது, உதாரணம் சங்கம் பிலவு, பொருக்கம்பிலவு ஒட்டகப்புலம், கருகப்புலம் என்பன வத்தை தோட்டம் என்பன ஒரு பொருளன. உதாரணமாக தமிழ்ப் பெயர்களான சாத்தன், கொத்தன், என்பன அப் பெயருடையார் வசித்த இடங்களுக்கு சாத்தவத்தை, கொத்தவத்தை எனவும் பெரிய தோட்டம் என்ற கருத்தில் மாவத்தை எனவும் வருதல் அறிக. கந்தரோடையில் பருத்திகொல்லை, பூஜவத்தை, விளாங்கணை, சங்கம் புலவு பொருக்கம் புலவு, கொத்தியாவத்தை குடாரை கோட்டன்கட்டு உச்சப்பனை குணஐயா தோட்டம் (குணஐயா குணையா) —குணையா என்ற பெயரோடு கண்டி நடனத்தில் சிறப்புடையவர் ஒருவர் இருக்கிறார் — எனப் பல சிறு குறிச்சிகள் உள்ளன.

### புதைபொருள் சிரிக்கின்றது

வரலாற்றுக் கருவூலங்களான நாணயங்கள் மட்பாண்ட ஓடுகள் அணிமணி வர்க்கங்கள் போளங்கள் ஆபரணச் சிதைவுகள் ஆதியன புதை பொருள்கள் ஆழ்ந்திருக்கும் மேடுகளிலிருந்து மழை வெள்ளத்தால் அரிபட்டு வருடாவருடம் இயல்பாக வெளிவந்து கொண்டிருந்தன கிராமத்தவரின் கவனத்துக்குத் தக்கமாதிரி அவை எடுக்கப்பட்டும் எடுக்கப்படாமலும் இருந்தன. பழமையில் ஆர்வமுள்ளவர் சேகரித்தும் வைத்தனர். அதன் வரலாறு தெரியாமலும் உபயோகந் தெரியாமலும் அழகுணர்ச்சிக்காகச் சேர்த்தனர் ஒரு காலம். 1917 ஆம் ஆண்டில் போல்பீரிஸ்துரை வரலாற்றில் ஆர்வத்துடன் கந்த

## புதை

## சிரிக்

ரோடையில் ஒரு பகுதி
அகழ்ந்து புதைபொருள்
பலவற்றை எடுத்தார்:
றிக்ற் நீதவானக இரு
இவ்வேலையையும் செ
வந்தார். அவர் க
ரோடை மண்ணில் க
வைத்த போதே பு
பொருட் செல்வங்கள்
னகை பூத்தன. க
ரோடையிலும் அயல் கி
மங்களான மாகியப்பிட்



...ந்
அங்கணாக் கடவையிலு
சுன்னாகம் கதிரமலை
காட்டு வெளியிலும் அ
ந்து பல தொல்பொரு
களை எடுத்து அவைபற்
குறிப்புக்களை 'இரு வெ
டாக வெளியிட்டு தீவி
பல பாகத்திலுமிருக்
வரலாற்று ஆர்வலர்க
கும் புதைபொருள்கள்
நாட்டமுள்ளவர்களுக்கு
வழிகாட்டிகளாகி



திரு. கந்தையா உபாத்தியாயர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ந்தரோடைக்கு
# ழைககிறது
## தைபொருள்
## க் கின்றது!

ரு பகுதியை பொருள்கள் த்தார்: டிஸ் க இருந்து ம் செய்து வர் கந்த ணில் கால் த புதை வங்கள் புன் ன. கந்த அயல் கிரா ாகியப்பிட்டி

அன்று அவர் ஆராய்ச்சியி லீடுபட்டிருந்தபோது எட்டு வயது நிரம்பாத இராஜ லக்சுமி என்ற சிறுமி தாம் சேகரித்த பழைய நாணயங்கள் சிலவற்றை அவரிடம் கொடுத்தார். அந்த நாணயங்களில் சித் பெண் உருவங்கள் பொறில தனவாகவும் காணப்பட் டன. அப் புராதன நாண யங்களின் தொகுதிக்கு இலக்

கடவை என்ற பகுதியில் (அங்கணுக்கடவை - அம் கண்ணுள் கடவை) அகழ்ந் தெடுத்த (கண்ணகையம் மன் கோவிலுக்குப் பக்கத்தி லுள்ள கூவல் கட்டுக்குச் சமீபத்தில்) உருவச் சிலையை கண்ணகியின் சிலையோ என்று ஐயப்படுவாருமுளர். சில காலக்கழிவால் உருச்சிதை ந்து காணப்படுகின்றது. இங்கே கோயில்கொண்ட கண்ணகை அம்மனை வழிபடும் பாரம்பரியத்தொடர்பு கண் டிப்பகுதியிலுள்ள சில சிங் கள மக்களிடம் காணப்படு கிறது. அவர்கள் நயினா தீவு விகாரைவணக்கத்திற்கு வரும் காலத்தில் இப்பத்தி னித்தேவி வழிபாட்டையும் தவறவிடுவதில்லை.



ந்தவரோதயக் கல்லூரியின் ஒரு தோற்றம்.

வையிலும் ரமலைக் லும் அகழ் ால்பொருள் வைபற்றிய இரு வெளியி டு தீவின் லுமிருக்கும் ர்வலர்களுக் ளுக்கும் கிருர்.

சுமி நாணயங்கள் என்று அந்தச் சிறுமியின் ஞாபக மாக அவரது பெயரையே வைத்தார். அவ்வகை நாண யங்களுக்கு தொல்பொருள் இலாகா அதே பெயரையே வழங்கி வருகிறது. இன்று அந்தச் சிறுமி நரைமூதாட் டியாகக் கிராமத்தில் வாழ் கிருர். கந்தரோடை வர லாற்றின் தந்தையாகிய ஆவர் கந்தரோடையில் ஒரு குறிச்சியாகிய 'கயக்கணை' என்ற பகுதியில் கூடுதலான சிலைகளையும், பௌத்த பலி பீடங்களையும் அக் கால வழக்கிலிருந்த

நயினாதீவு பௌத்தகோவி லுக்கு வரும் பௌத்தர்க ளில் பலர் கந்தரோடைக்கும் வந்து செல்கிறார்கள். 1966 ஆம் ஆண்டில் தொல் பொருள் ஆய்வு இலாகா தங் கள் ஆராய்ச்சியை அர சாங்க நிலமான கயக் கணியில் நடத்த ஆரம்பித் தது. இந்நிகழ்ச்சி கிராமத்து மக்களிடையேயும் சைவமக் களிடையேயும் பௌத்த மக்களிடையேயும் பரபரப்பு உணர்ச்சியைத் தூண்டியது. அகழ்ந்து வெளியாகும் கரு வூலங்கள் பௌத்தத்தைச்



# எங்கள் கிராமம் -4

அணிமணிச் சிதைவுகளையும் ஆபரணக் குறைகளையும் ஒரு பாரிய சிலாசாசனக் கல்லை யும் அகழ்ந்தெடுத்தார். அவற்றில் சில கொழும்பு நூதனசாலைக்கு அனுப்பப் பட்டன, பல அக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்த ஆங் கிலக்கலைஞர் ருவைனர் என் பவரது நூதனசாலையில் வைக்கப்பட்டன. அவை இன்று யாழ்ப்பாண நூதன சாலையில் காணப்படுகின் றன.

போல்பீரிஸ்துரை அவர் கள் கந்தரோடையின் மேற் கெல்லைக் கிராமமான சண் டிருப்பாயில் அங்கணம்மைக்

சார்ந்தவையா? சைவத் தைச் சார்ந்தவையா என்று அறிவதில் ஆர்வம்கொண்டு தினமும் சனக்கூட்டம் கூடி வந்தது.

### பௌத்தமா? சைவமா?

பௌத்த சமயச் சின்னங் கள்தாம் பல வெளிப்பட் டன. அங்கே புராதனமாக பௌத்த சமயத்தை அநுட் டித்தவர்கள்தாம் வாழ்ந்த தாக எடுக்கப்பட்ட பொருட் கள் உறுதி பகர்ந்தன. பௌத்த பலிபீடங்களும் டாகபக்களும் புத்தபகவா

னின் பாதங்களும் (வழிபாட் டுச்சிற்பம்) வெளிவந்தன. இவற்றைப் பத்திரிகை வாயி லாக அறிந்து வெளிநாடு களிலிருந்து பௌத்தர்கள் தினமும் வரலாயினர். இந் துக்கள் மனச்சோர்வுபட்ட னர். காரணம் இந்துமதத் தைச் சார்ந்த சின்னங்களை அங்கு காணவில்லை கவலை யடையக் காரணம்இல்லை, அக்காலத்தில் இந்துக்களா யிருந்தவர்களே பௌத் தத்தையனுட்டித்தார்கள். அவர்கள் தமிழர்களாகவே இருக்கவேண்டும். இதற்கு நியாயம் அங்கே காணப் படும் சிற்பங்களின் பாணி யும் டாகபக்களின் அமைப் பும் உண்மையான பௌத்த கலாசாரங்கள் உள்ள பகுதி யில் இருக்கும் சின்னங்களை விட வேறுபடுகின் றன. இங்கே காணப்படும் டாகபக்கள் அளவில் மிகச் சிறியனவாகவும் மிக நெருக் கமாகவும் காணப்படுகின் றன. இலங்கையில் ஏனைய இடங்களில் காணப்படும் பௌத்த கோவில்களின் அமைப்புப்போல இல்லை. ஆனதால் இந்துக்கள் பௌத் தர்களாகி அவர்கள் வழி பாட்டிற்குக் கட்டிய கோயில் களாக இருத்தல்வேண்டும்.

### குறுநில மன்னர்களின் புகலிடமா?

மகாவம்சத்தில் ஒரு புனித நகரமாக குறிக்கப்பட்ட கந்தரோடையில் சிங்கள மன்னர்கள் வாழ்ந்தே இரு க்கவேண்டும். சங்கமித்தை யினுல் கொண்டுவரப்பட்ட வெள்ளரசுக்கிளை மாதகல் கரையிலுள்ள ஜம்புகோலா என்னும் சம்பல்துறை வரலாற்றுக்கோர் வரலாறு தந்த கந்தரோடை

(தொடரும்)

# கடவுள் இருக்கிருர் என்பதை விஞ்ஞானிகளுக்கு நிரூபித்த மேதை

## நேரு பரிசு பெறும் யெஹுதி மெனுஹின்

'காலைக் கதிரவனுடன் எழுந்திருக்கிருர். உடனே தலைகீழாக நிற்கிருர். அந்த நிலையிலேயே காலை உணவு க்கு என்ன வேண்டும் என்று கேட்பேன்.

வழக்கமான ஓட்ஸ், கோதுமை, பழம், பால் வகைகள்தான். பின்னர் அவர் வெளியே போகிருர். ஓட்டம்தான். அலுவல் நிரல் என்று ஏதும் அவரு க்கு இல்லை'

திருமதி டியானு மெனு ஹின் தமது கணவர் யெஹுதி மெனுஹின் பற்றி இவ்வாறு கூறுகிருர்.

தியா வழங்கும் சிறப்பு மிக்க பரிசு இதுதான். இதற்குமுன்னர் நேரு பரிசு பெற்றவர்கள் ஊதாண்ட், மார்ட்டின் லூதர் கிங், கான் அப்துல் கபார்கான். பரிசு பெறுவதற்குரியவ ரைத் தெரிந்தெடுக்கும் தேர்வுக்குழு மெனுஹின் பற்றிக் கூறியதாவது:'அவர் இசை உலகிலே மாமேதை யாக இருக்கிருர் என்பது மட்டுமல்ல; மக்கள் குலத் தின் பொதுமரபிலே நம் பிக்கை கொண்டவர் அவர். மனித உறவுகளையும், அனைத் துலக நல்லுணர்வையும்

இசை அமைத்தவர் ரவிசங் கர். முதல்தட்டில் இனிமை யான தனி வயலின் இசை யும், தபேலா ஆவர்த்தன மும் பதிவு செய்யப்பட் டிருக்கின்றன. இசைத்தட் டின் உறையில் மெனுஹின் கீழ்வருமாறு எழுதியிருக்கி ருர். என்வாழ்நாளில் மிக வும் அனுபவித்த ஊக்கம் மிக்க சிலநிமிட இசைக்காக நான் ரவிசங்கருக்குக் கட மைப்பட்டுள்ளேன்.'

இந்தியாவையும் இந்திய மக்களையும்பற்றி மெனுஹின் கூறுவதாவது: 'உலோகா யத விஷயங்களிலே உண்மை யில் இவ்வளவு அக்கறை

**கணிதமேதையும், தலைசிறந்த விஞ்ஞானியுமான ஐன்ஸ் டீனுக்கு கடவுள் இருக்கிருர் என்பதை நிரூபித்தவர் உலகப் புகழ்பெற்ற இசைமேதை யெஹுதி மெனுஹின் 1968-ம் ஆண்டுக் கான நேரு பரிசுபெறும் அவர் பற்றிய சுவையான தகவல்கள் இங்கு தரப்படுகின்றன.**

உலகப் புகழ்பெற்ற வய லின்இசைமேதை யெஹுதி; யோகாசனம், இந்தியா, அன்புப்பணி ஆகியவற்றில் ஆழ்ந்த பற்றுதலுள்ளவர். இந்தியாவை அவர் மிக வும் நேசிக்கிருர். இந்த அன் பில் வயப்பட்டதன் காரண மாக ஏற்கனவே அவர் இந்த நாட்டுக்கு மூன்று தடவை வந்து விட்டார். அடுத்தமாதம் நவம்பர் துவக்கத்தில் மீண்டும் வரு கிருர், நேரு பரிசு பெற. 1968- ஆண்டுக்குரிய அனை த்துலக நல்லுணர்வுக்கான ஜவாஹர்லால் நேரு பரிசு இது. உலக நல்லுணர்வு ஓங்கவும் மக்களிடையே சகோதரப்பாசம் வளரவும் அரும்பணியாற்றியவர்களுக் குப் பெருமையாக இந்

வளர்ப்பதற்குத் தமது மாபெரும் ஆற்றல்களை அவர் பயன்படுத்தியிருக்கி ருர். குறுகிய மனிதனுல் ஆக்கப்பெற்ற தடைகளை யெல்லாம் கடந்து உலகின் எல்லா மக்களுடன் அவர் கலந்து உறவாடியிருக்கிருர். நேரு பரிசு பெறும் மெனு ஹின், மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ்,ஸ்விட்ஸர்லாந்து, கிரீஸ், இங்கிலாந்து உள் ளிட்டு பல நாடுகளின் சிறப் புப் பரிசுகள் பெற்றவரா வார்; நீண்டதொரு பரிசுப் பட்டியல் இது.

இசை, சுரங்களின் ஜால வித்தையல்ல; தமது வாழ்க் கையுடன் ஒன்றிவிட்ட ஒன்று என்றே மதிக்கிருர். 'இசைதான் நான், நான் தான் இசை; எனவே எனது இசையில் விளைவு உண்டு பண்ணுதது ஏதுமேயில்லை. நான் உணர்வது, நினைப்பது செய்வது (துன்பம்) அனுப விப்பது (இன்பம்) நுகர்வது எல்லாமே இசைதான்' என் கிருர் அவர்.

கீழைஇசை வேறு, மேலை இசை வேருக இருக்கலாம். ஆனுல் என்ன? இசை ஒன்றே உலகமொழி. இசைதான் இரு பண்பாடுகளை இணைக் கும் பாலம் என்று கருதுகி ருர் மெனுஹின்.

### இந்திய இசையில்

வாழ்க்கைபால் அவர் கொண்டுள்ள மெய்யுணர் வுக் கோட்பாடு நிலைஅவரை இந்தியாவிடம் இழுத்துள் ளது. இந்திய இசையும் அவ ரைக் கவர்ந்துள்ளது.

கீழை இசையும் மேலை இசையும் மேலைநாட்டு மக்க ளுக்கும் கீழைநாட்டு மக்க ளுக்கும் கிளர்ச்சியூட்டி இவ்விரு மக்களும் நல்லு ணர்வு நட்புறவில் இன்னும் நெருங்கி வரச் செய்யும் என்கிருர் மெனுஹின்,

'இசைகள் அனைத்தின் — மேலைஇசை, இந்தியஇசை, ஆபிரிக்க இசை - உள்ளங் கவரும் வேற்றுமைகளையும் ஒற்றுமைகளையும் அறிவிக்க விரும்புகினறேன்' என்ருர் அவர்.

தாம் சொல்வதில் உறுதி யான நம்பிக்கையுடையவர் மெனுஹின் பண்டிட் ரவி சங்கருடன் நீண்டநேரம் பாடும் இசைத்தட்டுகள் இரண்டினைத் தயாரித்துள் ளார். ஒருதட்டு இங்கிலாந் தில் 1966-ம் ஆண்டில் பாத் இசைவிழாவின் போதும், மற்றது 1967 டிசம்பரில் ஐ; நா. மனித உரிமை நாளன்று நடந்த இசைவிழாவின் போதும் ஒலிப்பதிவுசெய்யப்பட்டன.

குறைவான மக்களை வேறு எந்த நாட்டிலும் பார் க்க முடியாது. ஏன். முற் றும் துறந்த முனிவர்கள் எனக்குத் தெரிந்தமட்டில் வேறு எந்தநாட்டிலும் வாழ் வதாகத் தெரியவில்லை.

### யோகாசனம்

யோகாசனப் பயிற்சியி யிலும் மிகுந்த அக்கறை யுள்ளவர்மெனுஹின்யோகா சனமும், இந்திய இசையும் தான் என்னுடைய சொந் தப்பண்பாட்டிற்குள் ஊடுரு விச் செல்ல முயல்வதற்கு நான் கையாளும் வழிகள்' என்கிருர் அவர்,

எங்கும் எந்தச் சமயத்தி லும் அவரால் உறங்கிவிட முடியும், 10 நிமிட இடை வேளை இருந்தால் போதும். எந்த இடத்திலும் கரடு முர டான இடத்திலும்கூட (அநேகமாக பியோனேவின் மேலில்) விரிப்பு ஒன்றை விரித்துக்கொண்டு மெய்மற ந்து 9 நிமிடம் உறக்கத்தில் ஆழ்ந்துவிடுவார்.

6000பேர்கொண்ட அவை யில் மெனுஹின் வயலின் லின் கச்சேரி செய்தபோது அவருக்கு வயது ஏழு, கார் னகி மன்றத்தில் அரங்கேற் றம் நடந்தபோது வயது பத்து.

18 வயதை அடைகையில் 63 நாடுகளில் 110 கச்சேரி கள் செய்திருந்தார் மெனு ஹின்.

உலக கவிதை மேதை ஆர் பெர்ட் ஐன்ஸ்டைன், புகழ் பெற்ற இயக்குநர் அர்டுரோ டாஸ்கனினி ஆகிய இருவ ரும் மெனுஹீன் விசிறிகளா வர்; இவர்களுக்கு மெனு ஹின் இசை என்ருல் ஒரே வெறிதான்.

அப்பொழுது மெனுஹி னுக்கு வயது 11. பீதோவன் இசைக்கச்சேரி ஒன்று நடந் தது அது முடிந்தபின்னர் ஐன்ஸ்டைன் மேடையின் பின்புறமாக வந்து மெனுஹி னைத் தூக்கி முத்தமிட்டு, 'கடவுள் ஒருவர் இருக்கிருர் என்பதை நீ மீண்டும் மெய்ப் பித்துவிட்டாயடா!' என் ருர்.

### தெய்வப்பிறவி

இயக்குநர் டாஸ்க னினுக்கு மெனுஹின் வயலின் வாசிப்பதைக் கேட்க விருப்பமே இல்லை. கூறி வந்தார். எப்படியோ ஒருமட்டில் மெனுஹின் கச் சேரிகளில் ஒன்றுக்கு அவரை அழைத்துச் சென்றனர். அவ்வளவுதான். கச்சேரி முடியுமளவும் காத்திருந்து ஓட்டமாக ஓடி மேடையின்

(12- பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிறுவர் கவி நயம்—8

# கோழிக் குஞ்சு

—இரசிகமணி கனக. செந்திநாதன்—

தம்பி தங்கைகளே!

உங்களைப் பார்த்து ஆசிரியர் நீ யார் என்று கேட்டால் என்ன சொல்வீர்கள்? உங்களுடைய தகப்பனுர் பெயர், தாயார்பெயர், அண்ணன் தம்பிமாரின் பெயர், ஊரின் பெயர் இவற்றைக் கூறுவீர்கள், சரி. தெருவில் உங்களைப்பார்த்து ஒரு பெரியவர் கேட்டால் இவற்ருேடு பாடசாலையின் பெயர், படிக்கும் வகுப்பு, படிப்பிக்கும் ஆசிரியர் பெயர்களையும் கூறுவீர்கள், சரி, ஆட்டுக்குட்டியை பசுக்கன்றை, கிளிக்குஞ்சைப் பார்த்து நீங்கள் கேட்டால் அவை என்ன கூறும்? அவை தாய் தந்தையர் பெயரைக் கூறுமா கூறமாட்டா. பிறந்த ஊர் இருக்குமிடம் இவற்றைப்பற்றிக் கூறுமா? இல்லை. அவை பிறந்தவிதம் வளரும்மாதிரி, உண்ணும் உணவு, பகைப் பிராணிகளின் கொடுமை, வளர்க்கும் மனிதர்களின் தன்மை இவை பற்றித்தான் கூறும். ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமாகக் கூறும். இதைச் சுயசரிதை என்பர். கிழிந்த குடை, ஓலைப்பெட்டி, ஊற்றுப்பேனு என்பவை தம்மைப்பற்றி கூறிய சரிதைகளை நீங்கள் வாசிப்புப் புத்தகங்களில் படித்திருப்பீர்கள். இதோ கோழிக்குஞ்சு ஒன்று தன்னைப்பற்றிக் கூறுவதைக் கேளுங்கள்:-

வட்ட வடிவான தொரு
முட்டையினில் உள்ளே
வளர்ந்து கொண்டு நான்
இருந்தேன் வாழ்வு
நினைவில்லை.

கோழிக்குஞ்சு சொல்கிறது. தம்பி, என்னைப்பற்றிச் சொல்லும்படிதானே கேட்டாய். இதோ சொல்கிறேன்; கவனமாகக் கேள். நான் இந்த உலகத்தில் பிறக்குமுன் வட்டவடிவமான ஒரு முட்டைக்குள் கருவாக இருந்தேன்; பின்பு வளர்ந்தேன் அதைவிட வேறென்றும் எனக்குத் தெரியாது. அப்புறம் என்ன நடந்தது தெரியுமா? தாய் அடைகாத்தாள், கால் முளைத்தது கண்திறந்தது. காதுகளும் தோன்றின- ஆனுல் முட்டையில் இருந்து வெளிவரத்தான் பாதை தெரியவில்லை. அப்போது,

தாயறிந்து கொத்தி
விட்டாள் தப்பி
வெளிவந்தேன்
தப்பி வெளி வந்தவுடன்
தலைநிமிர்ந்து
பார்த்தேன்.

ஒரு முட்டைக்குள் இருந்து தவித்த என்னை தாய் வெளியே வரச் செய்தாள், வெளியே வந்தவுடன் இந்த உலகத்தைப் பார்த்தேன். தலை நிமிர்ந்து பார்த்தேன் இருட்டில் முடங்கிக் கிடந்த நான் வெளிச்சத்தில் தலை நிமிர்ந்துபார்த்தேன்.

ஆ! இந்த உலகம் எவ்வளவு அழகுள்ளது. அருமையுள்ளது, கருணையுடையது தாயின் கருணையைப்பற்றிச் சொல்லவேண்டுமா? அவள் என்னைத் தன் கண்ணைப் போற் காத்தாள். என்னைத் தனியே போகவிடமாட்டாள். படுக்கும்போதுகூடத் தன் சிறகினுள்ளே வைத்துக்கொண்டாள்.

காலைமுதல் மாலைவரை
கண்ணுறக்கமின்றி
கண்டதெல்லாம் கிளறி
வந்தோம்
கால்விரலினுலே

தாய் உணவு இருக்குமிடமெல்லாம் என்னை அழைத்துச்சென்ருள். தன்கால்விரலினுல் கிளறி, 'கொக்கொக்கோ' எனக் கூப்பிட்டு அவற்றை எனக்குக் காட்டினுள், உண்டு களித்தேன். காலை முதல் மாலை வரை உண்டு களித்தேன். கண் உறக்கமில்லாமலே உண்டு களித்தேன். சிறிது நாள் செல்ல நானே உணவுதேடி கிளறி உண்ணப் பழகிக் கொண்டேன்.

உலகம் அழகானது. அருமையானது; கருணையுள்ளது என்று நினைத்திருக்க எனக்குச் சிறிது நாளில்தான் ஒரு உண்மை தெரிந்தது. இந்த உலகத்தில் கருணையும் இருக்கிறது. பகையும் இருக்கிறது. மற்றவர்களுக்கு ஒரு கேடும் செய்யாத எனக்கு சிறிய குஞ்சுக்கு கூடப் பகைவர் இருக்கின்றனர். பதுங்கிப் பதுங்கிப் பூனையார் என்னைப் பிடிக்க வருகிருர். மிக உயரமாகப் பறக்கும் பருந்துக்கு எப்படியோ என்னைத் தெரிந்து விடுகிறது. ஒரே பாய்ச்சலில் என்னைத்தூக்கிக் கொண்டு போய்விடுகிறது. எந்தப் பற்றைக்குள் இருந்து இந்தக் கீரிப்பிள்ளை வருகிறதோ? அது கூட எம்மைப் பிடித்துச் சாப்பிடுகிறது. ஆனுல் என் தாய் இவற்றிலிருந்து என்னைக் காப்பாற்றுகிருள். சத்தமிட்டு எச்சரிக்கை செய்கிருள். பறந்து வீரத்தோடு கொத்திக்கலைக்கிருள், இந்தப் பகைவர்களிடமிருந்து நான் தப்பப் பட்டபாடு! அப்பப்பா!! சொல்ல முடியாது.

பாய்ந்து வரும்பூனை
முன்னே பறந்து விழும்
பருந்து
சாய்ந்து வரும்கீரி எல்லாம்
தப்பி வளர்ந்தேனே.

'எப்படியோ தப்பிவிட்டேன். வளர்ந்தும் விட்டேன். இனி பூனை, பருந்து, கீரி இவை என்னை ஒன்றும் செய்யமுடியாது. இவைகளின் பயம் இனி எனக்கு இல்லை. ஆனுல் இன்றெரு செய்தியை என்தாய் எனக்குச் சொன்னுள். சில பொல்லாத மனிதர் என்னைக் கொன்று தின்பார்களாம். இதைக்கேட்க எனக்குப் பயமாக இருக்கிறது. குழந்தையே, என்னை ஆதரித்துக் காப்பாற்றுவது உனது கடன் நீ அதைச் செய்வாயா?

இந்தக் கோழிக் குஞ்சின் சுயசரிதையை இலகுவாகவும்-அழகாகவும் பாடியவர் கரம்பனைச் சேர்ந்த பண்டிதர் சோ. தியாகராசா என்னும் கவிஞராவர். 1943-ம் ஆண்டளவில்அதாவது இருபத்தேழு வருடங்களின் முன் இது வெளிவந்தது. குயில், மயில், கிளி, அணில் என்பவை பற்றி வெறும் உருவ வர்ணனையாகவே குழந்தைப் பாடல்கள் இருக்கின்றன, இந்தப் பாடல் சுயசரிதை உருவத்தில் உள்ளது. படிக்க எளிமையானது. மனப்பாடம் செய்துவைத்தால்பிற்காலத்தில் சுயசரிதை எழுதமாதிரிகையாகவும் இது உதவும். முழுப்பாடலையும் ஒரு சேரத் தந்திருக்கிறேன். படித்து மகிழுங்கள்.

வட்டவடி வான தொரு
முட்டையினில் உள்ளே
வளர்ந்துகொண்டு நான்
இருந்தேன்
வாழ்வு நினைவில்லை.

கால் முளைத்துக் கண்
திறந்து
காதுகளும் தோன்றி
காலம் வரப் பார்த்திருந்
தேன்
காணவில்லை வழியை

தாயறிந்து கொத்தி விட்டாள்
தப்பி வெளி வந்தேன்
தப்பி வெளி வந்தவுடனே
தலை நிமிர்ந்து பார்த்தேன்.

காலைமுதல் மாலைவரை
கண்ணுறக்க மின்றி
கண்ட தெல்லாம் கிளறி
வந்தோம்
கால் விரலினுலே.

பாய்ந்து வரும்பூனை
முன்னே
பறந்து விழும் பருந்து
சாய்ந்து வரும் கீரிஎல்லாம்
தப்பி வளர்ந்தேனே.

குஞ்சாக வளர்ந்து விட்டேன்
குழந்தைகளே பாரும்
அஞ்சாமல் நின்றிடுவேன்
ஆ[illegible]

அன்பான தம்பி
தங்கைகளுக்கு!

தீபாவளி வாழ்த்துக்கள் அனுப்பிய தம்பி தங்கைகளுக்கு எங்கள் மனமார்ந்த நன்றி. நீங்கள் அனுப்பும் கவிதை, கதைகட்டுரை யாவையும் தாளின் ஒரு பக்கத்தில்மட்டும்எழுதி அனுப்பவும்.

—விமலா அக்கா

## நல்ல தீர்ப்பு

க. தயாளன்

ஓர் அரசன் தன் மந்திரிமார்களுடன் கனிகள் நிறைந்த ஒரு மாமரத்தின் கீழ் உட்கார்ந்து இருந்தான்

ஒரு பிராமணன் மாங்கனியைப் பறிக்கும்பொருட்டு கல்லொன்று வீசினுன் அதனுல் இரு மாம்பழங்கள் விழுந்தன; அவன் அதை ருசித்தான்.

பிராமணன் எறிந்த கல் மறுபக்கத்தில் உள்ள அரசனின் தலையில் விழுந்ததினுல் குருதி வடிய ஆரம்பித்தது. இராசவைத்தியர்கள் அரசனுக்கு அரச சபையில் இராச வைத்தியம் செய்தார்கள். மந்திரிமார்கள் கல் எறிந்தவனைத்தேடிப்பிடித்து மரண தண்டனை விதித்தார்கள். தண்டனை நிறைவேற்றுவதற்கு முன் அரசனிடம் உத்தரவு பெறவேண்டும். ஆதலால் அரசன் முன் பிராமணனைக் கொண்டுசென்று மரணதண்டனை கொடுக்கப் போவதாகக் கூறினுர்கள்.

அரசன் பிராமணனை நோக்கி "கல் எறிந்தது நீயா?" என்று கேட்டான். "ஆம் அரசே! என் பசிக் கொடுமையினுல் மாங்கனி பறிக்கும்பொருட்டுத் தான் எறிந்தேன். ஆனுல் தங்களிடம் எதிர்பாராதவிதமாகப் பட்டுவிட்டதையிட்டு வருந்துகிறேன்" என்ருன், பிராமணன். "கல் எறிந்து என்ன பிரயோசனம் கிடைத்தது" என அரசன் கேட்ட போது "இரண்டு மாங்கனிகள் அரசே' என்ருன் பிராமணன்.

அரசன் சற்று ஆழ்ந்த யோசனையின்பின் மந்திரிமார்களை நோக்கி "இவனுக்கு அதிக பொருள் பண்டங்களைக் கொடுங்கள்" என்று கட்டளையிட்டான்.

மந்திரிமார்கள் திகைத்துக் கல்லாய் நின்ருர்கள். அவர்களைப் பார்த்த அரசன் புன்னகையுடன் அமைச்சர்களே "மாமரத்துக்கு கல் வீசியதால் இரு மாங்கனிகள் கிடைத்தன. அக்கல்வீச்சு மாமன்னன்மீது பட்டதால் நான் மரண தண்டனையா வழங்கவேண்டும் இது தகாது" என்ருன். பின் அரசன் தீர்ப்பின்படி பொருள் பண்டங்களைக் கொடுத்து பிராமணனை அனுப்பிவைத்தார்கள்.

## மின்மினிகள் செய்த உதவி

கியூபாவில் டாக்டர் வில்லியம் சி. கார்கால் ஒருசமயம் ஒரு யுத்தவீரனுக்குசத்திரசிகிச்சை செய்யும் சமயம், வேண்டிய விளக்கு வசதியில்லாததால் அந்த டாக்டர் ஒருகண்ணுடி சாடி நிறைய மின்மினிப பூச்சிகளைப் பிடித்துப் போட்டு அதிலிருந்து கிடைத்த வெளிச்சத்திலேயே சத்திர சிகிச்சையை வெற்றிகரமாக செய்து முடித்தார்.

0 0 0

## இருதயத்தைப் பூஜித்தாள்

பிரெஞ்சு நாட்டில் சிறந்த ஒரு யுத்தவீரர் 1675-ம் ஆண்டு நடந்த சண்டையில் இறந்தார். இறந்தவரின் இருதயத்தையெடுத்து அழகிய வேலைப்பாடுகள் செய்யப்பட்ட ஒரு கண்ணுடிப் பேழையில் மிருதுவான வெல்வெட்துணிமீதுவைத்து அவரின் மனைவி தினமும் இரண்டு மெழுகுவர்த்தி கொளுத்தி வணங்குவாளாம். இவரும் 1704-ம் ஆண்டு இறந்தாள்.

0 0 0

## யானையின் வயது

யானைக்கு புத்திக் கூர்மை அதிகம் என்றும் ஆயுள் அதிகம் என்றும் சாதாரணமாகக் கூறுவது உண்டு, சூடான இரத்தம் உடையபிராணிகளில்நீண்ட நாள் வாழ்வது யானைதான். எழுபது வயதுக்கு மேற்பட்ட யானை இருப்பது அபூர்வம். பெரும்பாலான யானைகள் 60முதல் 70 வயதுக்குள் இறக்கின்றன. விஞ்ஞானிகளால் சரிவர ஆராயப்பட்டவரையில் 69வயது வாழ்ந்த ஒரு யானையே மிக அதிககாலம் வாழ்ந்த யானை என்று தெரிகிறது.

0 0 0

## வேர்க்குரு போக என்ன செய்ய வேண்டும்?

உடம்பில் வரும் வேர்க்குரு வெய்யில் காலம் போன பிறகு கூடப் போவதில்லை. இப்படிப் போகாமல்இருந்து கொண்டே இருக்கும். இந்த வேர்க்குருவை எப்படிப் போக்கலாம். முதலில்உடம்பில் வேர்வை தங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்புறம், அரிக்கும் இடத்தைச் சொறியாமல் தடவிக் கொடுக்கவேண்டும். தினமும் வெந்நீரில் காலையிலும் மாலையிலும் குளிக்க வேண்டும். வெந்நீரில் ஒரு நாளைக்கு இரண்டுதரம் குளித்தால் தான் இந்த வேர்க்குரு போகும்.

— தொகுத்தவர் :-

தா.மு.கணபதிப்பிள்ளை

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

## பொம்மை நாய்க்குட்டி

—ஏழாலை இரா. சுப்பிரமணியம்—

அம்மா தைத்த நாய்க்குட்டி
அழகான நாய்க்குட்டி
சும்மா வீட்டில் இருக்கும்
சுற்றத் தெரியா நாய்க்குட்டி

பச்சை நிற நாய்க்குட்டி
பவள வாய் நாய்க்குட்டி
உச்சு என்று சொன்னுல்
உடனே வாரா நாய்க்குட்டி

காது இரண்டும் சிவப்பு
கண்கள் இரண்டும் கறுப்பு
நாலு கால்கள் உண்டு
நடுவில் வாலும் உண்டு

வாலை நீட்டத் தெரியா
வங்காள நாய்க்குட்டி
பாலை நாங்கள் வைத்தால்
பருகத் தெரியா நாய்க்குட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிக்குயிலும் காந்திஜியும்

- நிலவை சங்கர் -

இந்தியாவின் 'வானம்பாடி' என்று காந்தியடிகளால் பாராட்டப்பெற்றவர் கவியரசி சரோஜினிதேவியார். முதல் உலகப் பெரும்போர் தொடங்கியபோது கவியரசி சரோஜினிதேவி இலண்டன் மாநகரில் இருந்தார். அங்கே இந்தியப் பெண்கள் சிலர் கூடி போர்க்களத்துக்கும் பயன்படும் 'பாண்டேஜ்' துணிகளைத் தாயாரித்து அனுப்ப ஒரு குழு அமைத்தனர். அதில்



சரோஜினிதேவியும்ஓர் உறுப்பினர். காந்தியடிகளைப்பற்றி அவர் முன்னரே கேள்விப்பட்டிருந்தார் இதுபோன்ற வேலைகளில் அவருக்கு அனுபவம் அதிகமென்றும், அவர் அன்றைய கப்பலில் இலண்டனுக்கு வரவிருப்பதாகவும் அறிந்த சரோஜினிதேவி அவரைச் சந்திக்க ஆவல் கொண்டார் ஆனல் துறைமுகத்திலேயே சந்திக்க இயலவில்லை. மறுநாள் 1914-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் எட்டாம் நாள் இலண்டனில் எங்கோ ஒரு மூலையில் காந்தியடிகள் தங்கியிருந்த விடுதியை விசாரித்து வெகு சிரமத்தின்பேரில் கண்டு பிடித்தார்.

விடுதியின் வாயிற் கதவு திறந்திருந்தது. உள்ளே தரையில்விரிக்கப்பட்டிருந்த கம்பளத்தில் எளிய தோற்றத்தில் மொட்டைத்தலையோடு கூடிய ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவரது அருகில் வேகவைத்த தக்காளிப்பழங்களும், ஆலிவ் எண்ணெயும்கலந்த ஓர் உணவு ஒரு மரக்கிண்ணத்தில் வைக்கப்பட்டிருந்தது. வறுத்த கடலைகளும், வறண்ட ரொட்டிகளும் பரப்பிக்கிடந்தன. அவற்றை அவர் எடுத்துச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். புகழ்பெற்ற தலைவரை—காந்தியடிகளை இந்தக் காட்சியில் கண்டதும் சரோஜினிதேவி குலுங்கக் குலுங்கச்சிரித்தார். குனிந்த தலையை நிமிர்த்தி சரோஜினிதேவியை நோக்கினர். அவ்வளவில் அடிகளும் சேர்ந்து சிரித்தார். பின்னர் "நீதானே திருவாட்டிசரோஜினி? இவ்வளவு அவமரியாதையாக உன்னைத் தவிர வேறு யாரால் நடந்து கொள்ளமுடியும்! வா... இந்த உணவை நீயும் கொஞ்சம் சாப்பிடு" என்று வரவேற்ருர். தொடக்கத்தில் இலண்டனில் ஐரோப்பியரிடையே பழகிய சரோஜனிதேவிக்கு அவ்வுணவைப் பார்க்கவே வெறுப்புத் தட்டியது. "மிக்க நன்றி. வேண்டாம் இது என்ன உணவு?" என்று முகத்தைச் சுளித்துக்கொண்டார். இவ்வாறு தான் நிகழ்ந்தது காந்தியடிகள் சரோஜினிதேவி ஆகிய இருவரின் முதல் சந்திப்பு.

காந்தியடிகளின் செய்தியை உலகமெங்கும் பரப்பிய புனிதமான பணியில் சரோஜினிதேவியின் கவிச்சுவையோடுகூடிய கவர்ச்சியான பேச்சுத்திறனுக்கு ஒரு சிறந்த பங்கு உண்டு. சுதந்திரப்போராட்டத்தில் சிறை செல்ல நேர்ந்தபோதெல்லாம், காந்தியடிகளின் நெருங்கிய தோழியாக இருந்துவந்துள்ளார் கவியரசியார் சிறை வாழ்க்கையில் காந்தியடிகளை கவியரசியார் தாமே தரித்து. அவரின் உடன் பிறந்த சகோதரிபோன்று உதவியிருக்கிருர்.

ஒருநாள் காந்தியடிகளின் பிறந்த நாள் விழாவின் போது அவருக்குப் பணமுடிப்பு அளிப்பதற்காக பதின்மூவாயிரம் ரூபாய் திரட்டப்பட்டிருந்தது. சரோஜினிதேவி அந்தப் பணமுடிப்பைச் சுட்டிக்காட்டி 'இதைத் தங்களிடம் கொடுக்காமல் நான் எடுத்துக்கொண்டு ஓடிவிட்டால் என்ன செய்வீர்கள்?' என்று அடிகளிடம் கேட்டார். அதற்கு காந்தியடிகள், 'இது போன்ற வேலைக்கு நீங்கள் (பெண்கள்)மிகவும் தகுதியானவர்கள் தாம்' என்று சொல்லிச் சிரித்தார். கூட இருந்தவர்களும் சிரித்தனர்.

ஒவ்வொரு கூட்டத்திலும் நன்கொடை பெறுவது காந்தியடிகளின் வழக்கம். ஒருநாள் தங்கமோதிரம் ஒன்று நன்கொடையாகக் கிடைத்தது, அதை விரலில் அணிந்துகொண்டு அருகேயிருந்த சரோஜினிதேவியிடம் 'நன்ருயிருக்கிறதல்லவா?' என்று சேட்டார்! 'ஏன் புதுமாப்பிள்ளைபோல இருக்கிறது' என்ருர் சரோஜினிதேவி. சத்தம் போடாதே. கஸ்தூரியின் காதில் விழப்போகிறது' என்று சொல்லிவிட்டு நீண்ட சிரிப்பில் ஆழ்ந்தார் காந்தியடிகள்.

1942-ம் ஆண்டு காந்தியடிகளின பிறந்தநாள் விழாவின்போது ஆகாகான் அவர்களின் அரண்மனையில் காந்தியடிகளும் சரோஜினிதேவியும் உரையாடிக் கொண்டிருந்தனர். மகாதேவ தேசாயின் மறைவிஞல் காந்தியடிகள் மகிழ்ச்சிகுன்றியிருந்தார். அவரை மகிழ்விக்க கவியரசி ஒரு திட்டம் போட்டார். அதன்படி சரோஜினிதேவி 'நான் சில கேள்விகள் கேட்கிறேன்



உங்களால் பதில் சொல்ல முடியுமா?' என்றுகேட்டார். காந்தியடிகளும் 'தெரிந்தவரை சொல்கிறேன்' என்ருர். 'ஆண்டவன் ஏழைகளிடம் ரொட்டி. (உணவு)வடிவத்தில் வருகிருன்.' இந்த வாக்கியத்தைச் சொன்னவர் யார்? என்று கேட்டார் சரோஜினிதேவி. அடிகள்

(14- பக்கம் பார்க்க)

குடும்பச் சுடர்



தயாரிப்பு: குணம்

# கன்னியர் கற்பின் திறன்!

பண்டித வித்துவான்

வரணியூர் ஆ. சின்னத்தம்பி

வைப்பூரில் தாமன் என்ருெரு வணிகன் இருந்தான். அவனுக்கு மகளிர் எழுவர் பிறந்திருந்தனர். அவருள் இளையாள் கன்னியென்று அழைக்கப்படுவாள். இஃது அவளின் இயற்பெயரென்று கொள்ள இடமில்லை. மகளிர் எழுவருள் மூத்தார் அறுவரும் மணமெய்தி வாழ்க்கைப்பட்ட பின்னர், இவள் ஒருத்தி மணம் செய்யும் பருவம் உடையவளாய் இருந்தபோது, அவளைவேறு குறிக்க வீட்டார் எல்லாரும் 'கன்னி' என்று அழைத்திருக்கவேண்டும், அதுகேட்டோர் பிறரும் கன்னியென்றழைத்தல் இயல்பே.

இக்கன்னி மணப் பருவமெய்தியிருந்தனள். அக்காலைக் கன்னியென்பவளின் மாமியாருக்கு ஒரு மகனும் மணம்செய்யும் பருவத்தினஞய் இருந்தான். இவரிருவருக்குமிடையில் பிறர்யாரும் அறியாதவகையில் காதல் உண்டாயிற்று. அவர்கள் காதல் நாளுக்குநாள் வளர்வதாயிற்று. காதல் அல்லது சாதல் என்றவாறு காதலைச் சகிக்கும் ஆற்றல் காதலருக்கில்லை. ஆனதால் காதலர் காதல் தீர்க்க வழிதேடுவர். அதனுல் யாரும் அறியாதபடி இருவரும் கூடிக்கொண்டு மதுரையை நோக்கிச் செல்வாராயினர்.

போகும்வழியில் திருப்புறம்வயம் என்னுமிடத்தில் அன்று இராப்பொழுதைக் கழிக்கக்கருதி அங்கு தங்கினர். அவ்விடம் இறைவன் எழுந்தருளியிருக்கும் ஓர் ஆலயம் அங்கு வன்னி மரமும் கிணறும் மடைப்பள்ளியும் இருந்ததாக வரலாறு கூறுகின்றது. ஆதலின் வன்னிமரமே இறைவன் கோயில் கொண்டெழுந்தருளிய தலவிருட்சமாகவேண்டும். மடைப்பள்ளி இறைவனுக்கு அமுது படைக்கும் அட்டிலாகும்.

இவ்விடத்தில் தங்கிய போது அன்றிரவு வணிகன் மகனை அரவு தீண்டியது. அதனுல் அவன் இறந்தான். கன்னி ஆருக்கவலையில் ஆழ்ந்திஞள். செய்வதறியாது திகைத்தாள், திக்கற்றவளாஞள். ஆருமற்றவருக்குத் தெய்வம் துணை என்றவாறு திருப்புறம்பயத்த தீசன் திருவருளால் வணிகன் மகன் உயிர் பெற்றெழுந்தான். கன்னியின் கற்பைக் கடவுள் சோதிக்கக் கருதிஞன்போலும்.

பிரிந்தவர் கூடிஞற் பேசவும் வேண்டுமா? கன்னியின் மகிழ்ச்சிக்குஅளவின்று. அன்றிராக் கழிந்தபின் இருவரும் மதுரைக்குச் சென்றனர். அங்கு வதியும் நாளில் ஒருநாள் மாற்ருள் ஒருத்தி கன்னியைக் கற்பில்லாக் கழுதை என்று பல்லோருமறியத் தூற்றிப் பேசிஞள். அச் சொற்கேட்டுக் கன்னி யாத கன்னி உளம்நொந்து ஊண்வருந்தி வாடிஞள். நீயறிய நான் கற்பில்லாத் தாசியா? என்று திருப்புறம்பயத் தீசனைவேண்டிக் கவன்ருள். கன்னி கற்பிற் சிறந்த காரிகை. கற்புடைமையே உள்ளத் தூய்மை உள்ளத்தூய்மையே இறைவன் உறையும் தானம். மனத்துக்கண் மாசிலஞதல் அனைத்து அறன் அன்ருே? இறைவன் அறவாளியந்தணன் அல்லனே? ஆதலின் கற்பின் சக்தியால் இறைவன் திருவருள்கூட மாற்ருரும் மற்ருேரும் அறியக் கன்னியின் கற்புக்குச்சான்று காட்டிஞர். பட்டப்பகலிலே மாற்ருள் முன்னிலையிலே கண்டோர் யாவரும் வியப்படையுமாறு வன்னிமரமும் அயலே மடப்பளியுமாகத் தோற்றியது. கன்னியின் கற்பின் திறமை யாவராலும் போற்றப்பட்டது.

நிறங்கள்

# உங்கள் தன்மையைச் சொல்லுகின்றன!

நீங்கள் விரும்பும் நிறங்கள் எப்படிப்பட்டவர்கள் நீங்கள் என்பதை நனகு எடுத்துக் காட்டிவிடும். ஒருவர் அணிந்திருக்கும் உடைகளின் நிறங்களைக் கொண்டே அவர் எப்படிப்பட்டவர் என்று சொல்லிவிடலாம். எடுத்துக் காட்டாக ஒருவர் வலுவான நிறமுள்ள உடைகளை அணிகிருர் என்று வைத்துக் கொள்ளுங்கள். வலுவான வண்ணம் என்னும்போது அடர்ந்த பச்சை, பளிச்சென்ற நீலம், மஞ்சள். பச்சை முதலிய வண்ணங்களைக் கொண்ட உடைகளைத் தாம் ஒருவர் விரும்புகிருர் என்ருல் அவர் வாழ்க்கையில் செல்வாக்குடன் இருக்க மாட்டார், எளிதில் சினம் கொள்பவராகவும், வாழ்க்கையில் மற்றவர்களுக்கு விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையற்றவராகவும் இருப்பார் என்பது தெளிவான உண்மை. கண்ணுக்கு நிறைந்த பளிச்சென்ற வண்ணமுள்ள நீலம் மஞ்சள், சிவப்பு, உடைகளை அணிபவர்கள் ஏறக்குறைய அதே வண்ணங்களைத் தாம் எப்போதும் தேர்ந்தெடுப்பார்கள். இது அவர்களுடைய வழக்கமாகி விட்டது. இந்தப் பழக்கம் வாழ்க்கையில் அவர்களுக்குத் தோல்வியையே அளிக்கிறது என்பதை அவர்கள் உணர்வதில்லை.

ஒருவர் விரும்பும் வண்ணங்கள் அவருடைய மனநிலையை எடுத்துக்காட்டுவதால் வண்ணங்களைத் தேர்ந்தெடுக்கும்போது விழிப்புடன் நடந்து கொள்ளுங்கள். விடாப்பிடியாக இருக்காதீர்கள். நீலவண்ணம் கொடிதல்ல நீலவண்ணந்தான்வேண்டுமென்ருல் அடர்ந்த நீலவண்ணத்தைத் தவிர்த்து மெல்லிய நீலவண்ணத்தைத் தேர்ந்தெடுங்கள். பச்சை வண்ணந்தான் வேண்டுமென்ருல் மெல்லிய பச்சை வண்ணமாகப் பொறுக்கியெடுக்க வேண்டும். மஞ்சள்தான் வேண்டுமென்ருல் இலேசான மஞ்சள்நிறமாகத் தேர்ந்தெடுங்கள். நான் குறிப்பிட்ட வண்ணங்களெல்லாம் பார்ப்பவர்கள் மனத்தைக் கவரும். இலேசான ,நிறமுள்ள உடைகள் தாம் உங்களைப்பற்றி உயர்வான எண்ணங்களை மற்றவர்கள் மனதில் எழுப்பும். அடர்ந்த வண்ணத்தை விட்டு இலேசான எண்ணங்களைத் தேர்ந்தெடுப்பவர்கள் தங்களது நிலையை மாற்றிக்கொள்வதால் வாழ்க்கையில் பெரிய மாறுதலைக் காணுவார்கள் வெற்றி அவர்களை எளிதில் வந்தடையும்.

உத்தரவாதமுள்ள
தங்க - வைர நகைகளைப் பெற்றுக்கொள்ள
நம்பிக்கை வாய்ந்த ஸ்தாபனம்
எஸ். எல். எம். தீபி அன் சன்ஸ்
நகைகள் - வைர வியாபாரிகள்
[illegible] (R. G. பில்டிங்) யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருவக நாடகம்

# தலைவன் தாள்!

— இ. நாகராஜன் —

### காட்சி (2)

இடம்: குறிஞ்சி நிலம்.
பாத்திரங்கள்: கங்கை, முல்லைக்குமரன்

முல்: கங்கா...வருக!... வருக... உன் எழிலமை தோற்றங்காண காலமெல்லாம் காத்திருந்தேன். வா கங்கா.

கங்: யார் நீ?

முல்: நான்தான் முல்லைத் தேவன். உனக்காகக் காத்திருந்தேன்... உன் புகழைத் தென்றலிடம் கேட்டேன். உன் அழகை இன்று கண்ணுற் கண்டேன், உன் நீரின் சுவையை நான் ரசித்தேன். நீ அள்ளிவரும் மலர்களின் மணத்தை நாசிமுகர்ந்தது... ஆ...ஐம்புலன்களுக்கும் இதமானவள்... நீ...

கங்: மூர்க்கா... என்னைத் தீண்டவேண்டாம் ... நான் குலப்பெண்... கோதிலாக் கற்புடையவள். நான் நீராகத்தான் இருப்பேன்...... நீ தீண்டினால் நெருப்பாகிவிடுவேன். கற்பின் கனலில் பூத்தவள். கருணைக்கு என்றும் கட்டுப்படுவேன். அதர்மத்தைக் கண்டால் அழிவு செய்வேன்.

முல்: உன்னை அறிவேன். குலமகள் நீ. குற்றம் பொறுக்கமாட்டாய். உயரிய மலையின் மகள் நீ. உன் புகழ் கேட்டு உன்னைத் தேடிக் காத்திருந்தேன். நீ என் உள்ளத்தை உணரவில்லையே.

கங்: என்ன பூடகமாகப் பேசுகிறாய். உன் வார்த்தைகளினுள்ளே புதையுண்டிருப்பன யாவை? புறத்தே விளங்க உரை செய்!

முல்: பூடகம் ஒன்றும் இல்லை. புனிதமான உன்னைப்பற்றி நானறிந்தவை அற்பம். ஆனால் என்கண்கள் மாபெருந்தவஞ் செய்திருக்கவேண்டும் ஆனமையாற்றான் அவை உயர்ந்தவற்றையெல்லாம்இப்போது காண்கின்றன.

கங்: விளக்கம்வேண்டாம் சுருக்கமாகச் சொல்.

முல்: அதோபார். உயரிய அகில்கள் உன்னத சந்தனமரங்கள் நிரையார்ந்த தேக்குகள், நேரார்ந்த மலர்கள். காணுமிடமெங்கும் கலந்துள கலைத்துவக் காட்சிகளைப்பார்... அதோ காது கொடுத்து கேள்.

(குயில் கூவும் ஓசை எங்கும் பரந்தொலிக்கின்றது) அந்தக் குயிலின் குரலைக் கேட்டாயா? துணையின்றித் துடித்துத் தூரத்திலேயுள்ள தன் துணையை அழைக்கின்றது. அதன் அர்த்தம் புரிகிறதா?

கங்: புரிகிறது பைத்தியம் மிஞ்சிவிட்டதா உனக்கு? மனமறியா மடைமை மிக்கவன் நீ வழியிலே ஓடிச் செல்லும் குலமகளை இழிவுசெய்ய முனைகிறாயா? எனக்குக் குறுக்கே நின்று தடைசெய்யாதே விலகிநில்.

முல். விலகமாட்டேன்.

கங்: மனம் விழையா மங்கையை மாசுபடுத்தத் துணிந்துவிட்டாயா?

முல்: இல்லை! உன் மலமிசைந்த வாழ்வையே விரும்புகிறேன்.

கங்: கருத்தை தயறியாக் கயவனே! இந்த வையகத்தில்எவர்வாழ்வையும்உன்னாலும் என்னாலும் நிர்ணயிக்க முடியாது. அதை நிர்ணயிப்பவன் மற்றொருவன்

முல்: கண்ணும் கண்ணும் கலந்துவிட்டால் கருத்து மலரும் என்பார்களே.

கங்: கருத்தின் இசைவைக் கண்ணா நிர்ணயிக்கிறது, யாம் காணும் அனைத்திலும் ஆசைப்பட்டுக் கொண்டே இருந்தால் பின்பு என்னாகும்...

முல்: பண்பும் பயனும் தெரிந்தவள் நீயல்லவா... என் கருத்தைப் புரிந்து என்னோடு தங்கிவிடு ...நீயில்லாவிட்டால் என் வாழ்வு வரண்டுவிடும்.

கங்: விலகி நில் இனிமேல் நீ என்னை மறிக்கத் துணிந்தாயானால்... உன்னை... அழித்துவிடுவேன்.

(குறிப்பு: முல்லை அச்சத்துடன் பேசுகிறது)

முல்: வேண்டாம்... கோபம் வேண்டாம் கங்கைத்தாயே...உன் கருத்துக்குப் பொருத்தமற்றவையை பேசிய என்னை மன்னித்துவிடு அம்மா. என் நாடு நின் அடைக்கலம் அதனை அழித்துவிடாது மெதுவாகச் செல் தாயே.

### காட்சி (3)

பாத்திரங்கள்
கங்கை: மருதிளங் குமரன்.

மருதிளங்குமரன்: என்னை நாடி எவளோ ஒருத்திவருகிறாள் ஆகா...இவள் அங்கத்தின் அசைவிலே ஆயிரம் பாவங்கள்பொங்குதே உடல் அழகிலே புதுப்புதுக் கற்பனைகள். இவள் ஒரு பெண்...... இந்த இடம் நோக்கியே வருகிறாள்... கங்கையே வருக உன் கானம் கேட்டு என் காதுகள் கனிவுற்றன. அந்த உணர்விலே உள்ளம் பூரிக்கின்றது. என்ன இவ்வளவு பேசுகிறேனே... என் பேச்சுக்குப் பதிலே கிடையாதா?

கங்: மௌனம் கலக நாஸ்தி!

மரு: அமைதியே பெண்களுக்காபரணம்... உன் அமைதியில் என்சுகம்கரைகிறது...

கங்:, பிதற்றல் வேண்டாம்...என் இலட்சியத்தை நாடிச்செல்கிறேன். என்னைத் தடுக்கவேண்டாம் ... என் தலைவன் தாளைச் சரணகதியடையச் செல்கிறேன்...

மரு: என்ன [illegible]

கங்: ஆமாம்...என்னை [illegible] கொண்டவனே என் தலைவன்...

மரு: உன் கருத்திற் கலந்து...கனவிலே கைக்கொண்ட காதலன் யாரோ?

கங்: ஆழிக்குமரன்

மரு: ஆழிக்குமரனா?... அவனா உன் காதலன் ... வரண்ட உப்புவெளியிலே வாழும் அந்தப் பஞ்சப் பயலா உன் காதலன்...கார் நிறக்கடல...சே, வெட்கம்...

கங்: ஆமாம்...அவர் கண்ணுக்குப் பொலிவூட்டவில்லையானாலும் கருத்துக்கு விருந்தூட்டுவார்...

மரு: உன் கண்கள் குருடல்லவே கங்கா.

கங்: ஏன்?

மரு: அவனைக்கண்ட எந்தக் கன்னியும் அவனைக்கைப் பிடிக்கமாட்டாள் என்பது அடியேனின் அபிப்பிராயம்...

கங்: அவரை நான் கண்ணுற் காணவில்லை ... ஆனால் காலமெல்லாம் கண்டறிந்து அளவளாவியதாக என்னுள்ளம் கருதுகிறது.

மரு: அப்பப்பா இது தெய்வீகக் காதல் ... அப்படியா,

கங்: சத்தியமே எங்கள் காதலுக்குச்சாட்சி.

மரு: நீ வயதில் இளையவளானாலும் அறிவில பாட்டி. அப்படித்தானே கங்கா... நான் சொல்வதில் தவறிருக்கமுடியாதென்று நம்புகிறேன்... பேதைப்பெண்ணே ஊர்பேர்தெரியாத யாரோ ஒரு பஞ்சப்பயலைத்தேடி ஓடாதே... நில் அவன் வெறும் உப்பு ... உதவாத உப்பு.

கங்: (சிரிக்கிறாள்) கடல் தேவனா பயனற்றவன். அகன்று விரிந்துபரந்து கிடக்கும் அவனே உலகத்தின் உயிர். நீ உயிர் வாழ்வதெல்லாம் அவன் தயவினால் என்பதை மறந்துபேசாதே.

மரு: புனிதமான குலத்தவர் நெருங்கமுடியாதபுலால் வாடைவீசும் புன்னையும் தென்னையும் சூழ்ந்த தோப்பிலே ஓர் அழகியமாடியைக்கூடக்காணமுடியாது... அத்தனையும் ஓலைக் குடிசைகள்... சே, உன்வாழ்வுக்கு அந்தப் பரதேசியினால் எதையும் தரமுடியாது:

கங்: சிப்பியிலேதான் முத்துண்டு.

மரு; அந்தச் சிப்பியைத் தொடுவதே அனுச்சாரம். நீ புனிதமான மலையின் வயிற்றில்பிறந்தவள்: இதோ என்பிராந்தியத்தைப்பார்... பார்க்குமிடமெங்கும் அழகு பூத்துக்குலுங்குகிறது. கழனியெங்கும் நெற்கதிர்கள்... குலைதள்ளிய வாழைகள்... தீஞ்சுவை மாவினங்கள்... தேன் வடியும் பலாவினந் தண்டலையில் மயில்கள் ஆடுகின்றன. தாமரைகள் உன்னை வரவேற்று ஆலத்தி எடுக்க முனைந்துள்ளன.

கங்: ஆசையினால் உனக்காட்பட்டுவிடுவேனென்று கருதுகிறாயா?... ஒருநாளும் உத்தமப் பெண்ணின் உள்ளம் திரியாதென்பதை அறிவாயா என்னைத்தடுக்காதே? விலகிவிடு,

மரு: நீ என் உறவினள். என்போன்ற உயரிய குடும்பத்தில் உதித்தவள் உன்னைப் போகவிட மாட்டேன் எனக்கே உரிமையானவன் நில். அப்பால் செல்லாதே.

கே: என்னையா தடுக்க [illegible] இதோ காட்டவா ஆயிரங் காலால் நடந்துவருகிறேன் நன்செய் நிலங்களத்தனையும் கண்டவள். தீங்கரும்பை... தேன் கதலியையெல்லாம் நினைத்தால் என் கரம்நீட்டிப் பறிக்கமுடிந்த எனக்கா ஆசை காட்டுகிறாய்...ஆசை காட்டுவது மட்டுமல்லாமல் என்னைத்தடுக்க முனைகிறாயா?

(குறிப்பு: மருதம் கங்கையின்சினத்தினால் அஞ்சுகிறது)

மரு: நீ சர்வலோகத்தையும் ஆளும் வல்லமை பொருந்திய மாசக்தி, உன்னை எவராலுமே கட்டுப்படுத்தமுடியாதென்பதைக் கண்டுகொண்டேன்... தாயே... என் அற்ப குற்றத்தைப் பொறுத்தருள்வாய்.

கங்: அடக்க ஒடுக்கமாக வரும் எவரையும் மடக்கித் திருப மனங்கொள்ளாதே அழியும் பொய்யைவிட-அழியாத மெய்க்குச் சக்தி அதிகம் என்பதைப்புரிந்து கொள்...!

### காட்சி (4)

பாத்திரங்கள்:
கங்கை—ஆழிக்குமரன்

கங்: அதோ என் அகத்தில் கலந்த நாதன்... ஓம் ஓம் என்று உச்சரித்துக் கொண்டே இருக்கிறான்... நெளியும் அவன் அலைமேனியில் எத்தனை அழகு ... கார் வண்ணத்தையும் கவினாக்கிய கட்டழகன்... நீண்டு விரிந்து இந்த நீளுலகத்தின் பெரும் பகுதியை உரித்தாக்கிய போதிலும் ... நெஞ்சிலே வஞ்சமற்றநினைவையெல்லாம் இறைவன் மீது வைத்துள்ளானே ... நாதா... நாதா... இங்கே கங்கை வந்திருக்கிறேன். உங்கள் கண்ணைத் திறந்து பாருங்கள்.

ஆழி: ஓம் ஓம் ஓம்.

கங்: என்ன ஓம்ஓம் என்று பேசுகிறீர்களே ... வேறொன்றும் பேசுவதற்கில்லையா?

ஆழி: ஓம் ஓம்.

கங்: காலமெல்லாம் உங்களையே எண்ணிக் கால் கடுக்க நடந்து வந்தேனே ... உங்கள் அருட்கண்ணைத் திறந்து அடியாளைப்பார்க்கக் கூடாதா?

ஆழி: ஓம் ஓம்... நமசிவாய

கங்: நான்பேசுவது காதில் விழவில்லையா ... ஏன் என்னோடு பேசப்படாதென்று இப்படியே இறைவனை ஸ்மரணை செய்கின்றீர்கள்...

ஆழி: ஓம் ஓம்.

கங்: ஓம் ஓம் இதன் உட்பொருள்

ஆழி: ஓம் ஓம் நமசிவாய. பெண்ணே. இந்த உலகமும் அதிலுள்ள சர்வகோடி ஜீவராசிகளும் விண்ணின் தேவர்க்கும் மேலான மகாதேவனால் அருளப்பட்டவை. தோன்றிய அனைத்தும் ... ஓர் நாள் தோல்வி கண்டு அழியவே போகின்றன. ஆனால்...அவனே பெரியன். அன்பு கொண்ட உள்ளங்களுக்குரியன் ... அவனை ஸ்மரிக்கும் என்னைக் குழப்புவது சரியா

கங். இல்லை ... ஆனால் தூரத்திலுள்ள மலையின் வயிற்றில் பிறந்தவள் உங்களைத்தேடிவந்திருக்கின்றேன்... தேடிவந்த அபலையைக் காப்பது கடமையல்லவா?

ஆழி: கடமையென்பது... மடமைக்கு வித்திடுவதாக அமையக்கூடாது.

கங்: மங்கை பொருத்தி மனத்துக்குகந்தவனைத் தேடி வருவது மடமையாகுமா?

ஆழி. மங்கையே... உன் மனதுக்கு மட்டுமுரியதைப் பேசுகிறாய். மற்றவர் உரிமையை உணராது ஊர்விட்டு ஊர் தாண்டி ஓடிவந்ததே தவறு.

கங். எது தவறு,மனம் படிந்த மாண்புடையானை விரும்பி வீட்டை நாட்டை விடுத்து வேதனைப்பட்டுவந்தது தவறா?

ஆழி: உன் கொள்கைக்கு அது சரியாக இருக்கலாம். உன்னை ஏற்கவேண்டுமென என்னை நீ யாசிப்பதுதான் தவறு.

(13-ம் பக்கம் பார்க்க)

---

# சிறுகதை

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

மென்று புரியவில்லையே. மனம் பலபாட்டிலும் அலைபாய்கிறது.

கண்ணைமூடி, தலையை மேசைமேல் கவிழ்த்தபடி யோசிக்கிறேன்—

காலில் 'மெத்'தென்று உரசுவது வெள்ளைப்பூனே. கண் விழித்துப் பார்க்காமலே சொல்லலாம். எங்கள் அலுவலகத்தின் செல்லப்பிராணி அது. (வெகுவிரைவில் குட்டிபோடப்போகிறது).

நான் யோசிக்கத் தொடங்குகிறேன் ...

யாரோ முதுகில் தட்டுகிறார்கள். திடீரென நிமிர்ந்தால் 'சி, ஈ. (பிரதம என்ஜினியர்) வந்துகொண்டிருக்கிறார்! சுதாரித்துக்கொண்டேன்.

'பொன்னண்டோ தான் தட்டியெழுப்புகின்றான்; அப்படியானால் தூங்கிவிட்டிருந்தேனா?'

சிந்திக்கப்போய்த் தூங்கிவிட்டேன். மணி ஒன்றேகால்!

துக்கந்தான்.

'தாங்ஸ், மச்சான்; பிறகு.

(அவனை அப்படிக் கூப்பிட்டால் எனக்கு சந்தோஷம்)

எழுந்து கண்ணைத்துடைத்தேன்.

இரவு அறைக்குப் போனபின் எழுதலாம்—நேரமிருந்தால்!

வெறுங்கடதாசிகளைச் சுருட்டி வைக்கையில்—

கொடுப்பிற்குள் ஒரு பாக்குத்துண்டு உறுத்துகிறது.

[யாவும் கற்பனை]

---

# கடவுள் இருக்கிறார்....

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

மேல் தாவி ஏறி சிறுவனை முத்தமிட்டு, "யெஹூதி, நீ தெய்வப் பிறவியடா" என்று உரக்கக் கத்தினார். உனக்கு இணையான வயலின் மேதை யாருமில்லையடா, என்றார் மேலும்.

மக்களை மகிழ்விப்பவர் மெனுஹின். 'இசையானது மனிதப் பண்புடன் ஒன்றியிருப்பதாகும். எனவே ஒருவர் இசைக் கலைஞராக வருவதற்கு மனிதப் பண்பினை வளர்க்கவேண்டும்'' என்று அவர் நம்புகிறார்.

இங்கிலாந்தில் பாத் நகரிலும் ஸ்விட்ஸர்லாந்தில் கஸ்டாட் நகரிலும் ஆண்டு தோறும் நடக்கும் இசை விழாக்களைத் தொடங்கி வைத்தவர் மெனுஹின். இங்கிலாந்திலே ஸர்ரே மாவட்டத்தில் ஆற்றல் மிக்க இளம் இசைக் கலைஞர்களுக்கு ஒரு பள்ளிக்கூடம் நடத்துகிறார். உணவும் தங்குமிடமும் உடைய இந்த பள்ளி மிகச் சிறப்பாக நடக்கிறது.

பலப்பல இசை-கல்வி நிலையங்களையும், அற நிலையங்களையும் இவரே தோற்றுவித்துள்ளார்; ஆதரவளித்திருக்கிறார்; தலைவராக இருந்திருக்கிறார். இந்த பள்ளிகள் நிலையங்களின் பட்டியலை 1966-ல் தட்டெழுத்தில் நெருக்கமாக ஒற்றை வரியில் இடைவெளியில்லாமல் அடித்தபோது நான்கு பக்கங்களுக்குமேல் போயிற்று. இரண்டாம் உலகப் போரின்போது உலகம் நெடுகிலும் அமெரிக்க ஆயுதப் படைகளுக்காகவும் செஞ்சிலுவைச் சங்கத்துக்காகவும், போர் சம்பந்தமான பிற நற்பணிகளுக்காகவும் 500 இசைக் கச்சேரிகள் நடத்தியிருக்கிறார்.

1960-ம் ஆண்டுவாக்கில் பெனுஹின் இயக்குநராக அரங்கேற்றம் ஆயிற்று. வியோலா இசைக் கருவியை நடுத்தர வயதானபோது கற்றுக்கொண்டார். "எனக்கு 130 வயது ஆகும்போது பலலெய்க்கா என்ற ரஷ்ய இசைக் கருவியைக் கற்றுக்கொள்ளப்போகிறேன்'' என்று நிருபரிடம் ஒரு சமயம் கூறினார் மெனுஹின்.

1916 ஏப்ரல் 22ம் தேதி யெஹூதிமெனுஹின் பிறந்தார் 22-வது வயதில் நோலா நிக்கொலஸ் என்பவரை மணந்தார். ஏழு ஆண்டுக்குப் பிறகு மணவிலக்கு ஆயிற்று.

பின்னர் 1947-ல் இங்கிலாந்தைச் சேர்ந்த டியானா கவுல்ட் என்பவரை மணந்தார். நான்கு குழந்தைகள் இருக்கின்றனர்- ஸமிரா, குரோவ், கெரார்டு, ஜெரெமி.

கடைக்குட்டி ஜெரெமி எழுதக் கற்றுக்கொள்ளு முன்னரே பாடல் இயற்றத் தொடங்கிவிட்டார். 18 வயது இளைஞரான இவர் பியானோ மேதையாக விளங்குகிறார்.

தந்தையின் அடிச்சுவட்டிலே தனயன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

40 கலன்களும் எடுக்கப்படும். சிலமரங்கள் நாளுக்கு ஒரு கலன் வீதம் தருவன. இரண்டு பால் மரங்களிலும் சீவப்படுகிறது. ஆண்மரம் பூவிரல்களைப் போன்றது. இவை ஒன்ருகக்கட்டப்பட்டு அழுத்திச்சீவப்படும். ஆண் மரங்கள் பெண்மரங்கள் அளிப்பவற்றின் 60 வீதத்தையே தருவன. ஒரு திறமையான சீவல்காரன் காலையில் 4 மணித்தியாலமும் மாலையில் 2 மணித்தியாலமும் வேலை செய்து 20—25 மரங்களைச் சீவலாம். இனிமையான கள்ளைப் பாதுகாத்து வைத்திருக்க மலிவான முறை சுண்ணும்புஇடுதலாகும். இதனுல் பானைகளில் சுண்ணும்பு இடப்படும். பனங்கட்டியானது சாறு எடுக்கப்பட்டவுடன் அதைக் கொதிக்கவைப்பதிலிருந்து பெறப்படும் 15 வீதம்—18 வீதமான சாறு சர்க்கரையாக மாறுகிறது. கபிலநிறச் சீனிக்கட்டிகளும் (கற்கண்டு) தயாரிக்கப்படுகின்றன.

### சர்க்கரையின் கூட்டுப்பொருட்கள்

சர்க்கரை 82 வீதம்(பளிங்குச் சர்க்கரை 60 வீதம்) குளுக்கோசாக, மாற்றப்பட்ட சர்க்கரை 2 வீதம், சாம்பல் 3 1/2 வீதம், ஈரப்பற்று 9 வீதம். சாராயம் செய்வதற்கு பளிங்குருவாக்கம் பயன்படுத்தப்பட்ட பின்னர் வெல்லச்சாறுஎடுக்கப்படும்.

### விதைகள்

இளம்விதையின் உட்புறத்தில் நொங்கு காணப்படுகின்றது. இக்கூழானது கடினமாகி பருப்பாகின்றது முளைக்கும் விதையின் பருப்பாகிய பூரான்உருசியானது. விதைகள 2—3 மாதங்களாகியபின் பசைத்தன்மையுடையதாய் இளம்வேர்கள் கிண்டிஎடுக்கப்பட்டுமாவாக்கப்படுகின்றது. அல்லது சமைக்கப்படுகிறது அல்லது அவிக்கப்படும். பழைய விதைகளின தோல்கள் எரிப்பதற்கும் பயன்படும்.

### பழம்

வெளிப்படையாக உள்ள கரிய தோலுக்குள் இருக்கும் பழம் மஞ்சளிலிருந்து செம்மஞ்சள் நிறமுடைய கூழாக உள்ளது. அதிக இனிமையுடையது இதைப் பிழிந்து சேர்த்துப் பனை ஓலைப் பாய்களில பரப்பி சூரியவெளிச்சத்தில் காய வைப்பார்கள், அல்லது கொதிக்கவைத்து ஜாம் போன்றனவாகச் சமைப்பார்கள். காய்ந்த பழச்சாறு (பனுட்டு) நீண்ட நாட்களுக்கு இருக்கக் கூடியது, அத்துடன் மணமும் வாசனையுமுடையது.

### இலைத்தண்டுகள்

(ஓலை மட்டைகள்)

இவை உயர்ந்த நார்த்தன்மையுடையவை தூரிகைகள், தும்புத்தடிகள் முதலியன செய்ய உபயோகிக்கப்படுகின்றன. சீவுதல் நடைபெறுமுன்பு சுமார் 15—20 ஓலைகள் வெட்டப்படுகின்றன.

### மரம்

பனைமரம் மிகவும் பலமும் இறுக்கமும் உடையது. 1கன அடிமரம் 50 ருத்தல் நிறையுடையது. அதிக பாரத்தைத் தாங்கக் கூடியது. தூண்களாகவும் கைமரங்களாகவும் நீர் வாய்க்கால்களாகவும் இது பயன்படுத்தப்படுகிறது.

### இலைகள்

முன்னுட்களில் குருத்திலைகள் காயவைக்கப்பட்டு எழுதப்படுவதற்கும் ஏடுகளாக உபயோகப்பட்டன. இன்று முக்கியமாக விசிறிகள், கூடைகள், பாய்கள், வீட்டுக் கூரை வேலி போன்றவற்றிற்கு பயன்படுத்தப்படுகின்றன. முற்றியஇலைகள்

# கருப்பனி, கள்ளு ..

மாடுகளுக்கு உண்பதற்கு கிழித்துப்போடப்படுகின்றன பழைய ஓலைகளை கூரையிலிருந்து எடுத்து வயலுக்குப் பசளையாகப் பாவிப்பர்.

### கறுப்புப் பிசின்

மரப்பட்டை காயப்படும்போது அதிலிருந்து இது ஊறுகிறது. இது மருந்துக்குரிய தன்மைகளை உடையதாகக் கூறப்படுகிறது, இது ஆராயப்பட வேண்டியதாகும். நாரானது மட்டைகளின் அடிப்பாகத்திலிருந்தும் விதைகளிலிருநதும் பெறக் கூடியதாக உள்ளது.

### ஆய்வு

பலவிதமான பனையின் உற்பத்திப் பொருட்கள் உப உற்பத்திப் பொருட்கள் பற்றி அண்மைக்காலத்தில் தமிழக அரசு பனை உற்பத்திப் பொருள் கூட்டுறவுச் சமாஜத்தாலும் இலங்கைக் கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி நிலயத்தாலும் அதிக ஆராய்ச்சிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. முக்கியமாக திருவாளர்கள் சிவராமலிங்கம், இரத்தினசிங்கம், ஜெயராஜ் ஆகியோராலும் கண்டியில் சரவணபகவானுலும் ஆய்வுகள் நடாத்தப்பட்டன குருத்தோலையை நிறமூட்டல், நார் ஊறவைத்தல் சர்க்கரை பற்றிய பாகுபாடு பனஞ்சாற்றின் கூட்டுப் பொருட்கள் காய்ந்த பழங்களின் சாரம், மற்றும் நாட்காட்டி உருளிகள், உலைகள் சுத்திகரிப்பு கள் போன்ற இயந்திரங்களுக்கு டிசைனிடல் ஆகிய பலவிதமான அம்சங்களில் உள்நாட்டு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உற்பத்திகளில் மேலும் திருப்திகரமான ஆராய்ச்சிகள் உள்நாட்டு ரீதியில் மேற்கொள்ளப்படலாம்.

மரங்கள் வளர்த்தல் தெரிவு செய்தல், பயிர்களின் மேற்பார்வை செய்தல் சீவுதற்குரிய கூலிகள் சம்பந்தமாக சில ஆராய்ச்சிகள் தென்இந்தியாவில் மேற்கொளளப்பட்டு வருகின்றன! ஆனல் இன்னும் அதிகமாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

பனையுடன் தொடர்பான கைத்தொழில்கள் அநேகருக்கு தொழில் வசதியைக் கொடுக்கும். தமிழ்நாட்டில் 2 லட்சத்திற்கு மேற்பட்டோர் இதில் ஈடுபட்டுள்ளனர். இது கிட்டத்தட்ட 40மில்லியன் மரங்களாகும்.

வருடமொத்த உற்பத்தியும் விற்பனையும் சுமார்ரூ 71.7 மில்லியன்கள் ஆகும். இதில் ரூ 60மில்லியன்சர்க்கரையாயும் 10 மில்லியன் நாராகவும்1 மில்லியன் கருப்பநீர் ஆகவும் உள்ளன.

தமிழக அரசு பனை உற்பத்தி பொருள் கூட்டுறவு சமாஜம் 1958-ல் ஆரம்பிக்கப்பட்டது. கட்டப்பட்ட கூட்டு மூலதனமாக ரூ 1.5 மில்லியனை உடையது.

அங்கு 1503 ஆரம்பக் கூட்டுறவுகள் 2.13 லட்ச அங்கத்தினர்களையும் 2.7 மில்லியன் கட்டப்பட்ட மூலதனத்தையும் கொண்டு விளங்குகின்றன. ஏழு மாவட்ட கூட்டுறவுகள் கட்டப்பட்ட பங்கு மூலதனமாக ரூ 9லட்சம் உடையன.

இலங்கையிலும் கூட்டுறவு சமாஜத்தின் கீழ் கிராம, மாவட்டக் கூட்டுறவு முறைகளை மேற்கொள்ளலாம்.

முற்காலத்தில் மக்கள் வாழ்க்கையில் பனை வகித்த முக்கியத்துவத்தை நோக்கும்போது அண்மைக்காலத்தில் இக்கைத்தொழில் அழிவு நிலைக்கு வந்து இருப்பது துக்கப்பட வேண்டியதாகும்.

புனருத்தாரணமும், திரும்பவும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதும் அவசரமும் அத்தியாவசியமுமாகும். தமிழ் செய்யுட்கள் பனை உள்ள நாட்டில் பஞ்சம் இல்லை என்றும் 'பனை இன்றி வாழ்வு இல்லை' என்றும் கூறுகின்றன.

### இறக்குமதிக்கு ஈடாக்குதல்

இலங்கை3மில்லியன்தொன் சீனியை 71 மில்லியன் ரூபாவுக்கு இறக்குமதி செய்கிறது. இதில்47,000 தொன்களும் ரூ. 1.3 மில்லியனும் சர்க்கரைக்காகும்.





கைநிறை சுவையின்பம்

இன்சுவை பானங்கள் இவை, உங்கள் வழி பல முறை வருகின்றன. விருந்துகளின் பின், சுற்றுப்பயணம், வேலை முடிந்ததும், விளையாட்டின் பின்னும் பலமுறை சுவைத்திருக்கிறீர்கள். பன்னிரண்டு சுவைகள்...... குடும்பத்தின் விருப்பு உணர்ந்து மனநிறைவூட்டும் பானம்.

தாகத்தீர்ப்பை மகிழ்ச் செய்கையாக்க எலிபன்ட் ஹவுஸின் பின்வரும் யானை மார்க் பானங்களிலிருந்து தெரிந்திடுக. ஒரேஞ் பார்லி, நெக்டோ, ஜிஞ்ஞர் பியர், ஜிஞ்ஞர் ஏல், டொனிக், லங்கா லைம், லெமனேட், கிறீம் சோடா, பிட்டர் லெமன், சிலிம் லைம், லங்கா ஒரேஞ், லைம் சக சோடா.

எலிபன்ட் ஹவுஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிமோனியா .

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

சோர்வு ஆகியவையேற்படும் இந்நோயின் ஆரம்பத்தில் ஒரு மாறுபட்ட, இன்ன நோயென அனுமானிக்கமுடியாத ஓர் இலட்சணமும் ஏற்படும். அதாவது ஊசியால் குத்துவதுபோன்ற நோவு வயிற்றில் அல்லது தோள்பட்டையில் ஏற்பலாம். இதன் காரணமாக சுவாச உறை தாக்கப்பட்டால் அதைச் சார்ந்தநரம்புக்கூட்டங்களின் சிதறல் மேற்படி இரண்டு உறுப்புகளையும் சென்றடைவதால் சுவாச உறையில் ஏற்பட்ட நோவும் சிதறிக்காணப்படும். இருமல் ஆரம்பத்தில் வரட்சியாயும் நோவுடன் கூடியதாயும், இலேசாகவும் அடிக்கடியும் இருக்கும். பிற்பகுதியில் சளியுடன் கூடிய இருமல் ஏற்படுவதோடு இரத்தக்கலப்பால் கறள்நிறமாய்ச் சளிவெளியாகும். உடம்பு வரட்சியாயும், சொண்டுகள்வெடித்துஅசறு கட்டியும், முகம் அதைத்தும் காணப்படும். சலம் குறைந்த அளவாயும் அதிக நிறமுடையதாயும் வெளியேறும் சிலருக்கு குலைப்பன் ஏற்பட்டு அதையடுத்துக் குருதிச் சுற்ரேட்டச் சோர்வும் ஏற்படும்.

இந்நோயைச் சரியான முறையில் நிதானிக்கப் பல்வேறுபட்ட பரிசோதனைகளை நடத்தவேண்டியுள்ளது. இரத்தப் பரிசோதனையில் வெண் அணுவை அதிகரித்துக் காணும்.

எக்ஸ்-றே மூலம் பல உண்மைகளை அறியலாம். அடுத்து 'ஸ்டெதஸ் கோப்' மூலம் சுவாசச் சத்தத்தின்நிலைகளையும், நெஞ்சு முதுகு ஆகிய சுவாசப் பிரதேசங்களில் முறைப்படி தட்டிப்பார்த்து அதன் நிலையையும் அறிந்துகொள்ளலாம். அடுத்து உடல் வெப்பமானிகொண்டு சுர நிலைகுறிப்பதன்மூலம் ஒரளவு கணித்துக்கொள்ளலாம், படிக்கட்டால்ஏறுவது போன்றும் இறங்குவது போன்றும் சுர நிரல்படம் காட்டும் சளிப்பரிசோதனையும் நன்மை பயக்கும்.

**சிகிச்சை**

இக்காலத்தில் இந்நோயின் சிகிச்சை மிகவும் இலேசாகிவிட்டது. ஆயினும் வைத்திய வசதி குறைந்த பிரதேசங்களில் வாழும் மக்களால் உரிய நேரத்தில் தகுந்த சிகிச்சையைப் பெற முடியாத காரணத்தால் மரணத்தையோ அல்லது நீடித்த தன்மையையோ அல்லது வேறு விகற்ப ரோகங்களையோ தழுவிக்கொள்ளாமலும் இல்லை. நோய் நிதானம் பிழைபட்டால் நிலைமை மோசமடையலாம். சில நோயாளிகளிடம் சிகிச்சை செய்யும் காலங்களில் போலிச் சுகநிலையேற்படுவதும் உண்டு. இப்படிப்பட்டவர்களின் சுவாசவிகிதமும் சுரபாகையும் சேர்ந்து குறைந்துள்ளதா என அறிந்துகொள்வது அவசியம். சரியான நிதானமும் சிறந்த சிகிச்சையும் பொருந்திக்கொண்டால் இரண்டு வரத்தில் பூரண சுகம் ஏற்படும்.

வயது சென்றவர்களுக்கும் பலவீனர்களுக்கும் சிகிச்சை பொருந்துவது துர்லபம். இப்படிப்பட்டவர்கள் ஈற்றில் பல்வேறு நோய்களையேற்படுத்துவதையும் காணக்கூடியதாயிருக்கிறது. சுவாசப்பையைப்பொறுத்த அளவில் நோயின் வேக்காடு இருபக்கமும் பரவிக்கொள்ளலாம் அல்லது சுவாசப்பைப் புண் ஏற்படலாம். சுவாச உறைக்குள் நீரேறல் அல்லது சீழ் ஏறல் ஆகிய உபத்திரவங்கள்ஏற்படலாம்

இருதயத்தைப் பொறுத்த அளவில் உள்வெளிப் பகுதிகள் தாபிதமடையலாம். மேலும் குருதிச்சுற்ரேட்டச் சோர்வு இரத்தக்குழாய்களின் அந்தங்களில் ஏற்படும். கால்களில் உள்ள நாளங்களில் இரத்தக்கட்டிகள் ஏற்படலாம். உக்கிர நிலையில் மூளைக்கவச தாபிதமும் ஏற்படலாம். எனவே இந்நோயைச் சரிவரச் சிகிச்சிக்கப் பொதுமக்கள் ஆதரவாயிருக்கவேண்டும். அரைகுறை வைத்தியம் பேராபத்தை விளைவிக்கும். இந்நோய் தொற்றுந் தன்மை வாய்ந்ததாகையால் குறிப்பாக நோயாளியின் கழிவுப் பொருட்களை பவுத்திரமாய் ஒன்று சேர்த்துத் தீயிடுதல் சமூகத்திற்குச் செய்யும் தொண்டாகும்.

# தலைவன் தாள்

(12-ம்பக்கத் தொடர்ச்சி)

கங்: எது தவறு, கர்ப்ப காலந்தொட்டு உங்களையே கருத்தில் வைத்துக்காத்து வந்தேனே அது தவறு...

ஆழி: நான் தவறென்று கூறவில்லை ... என் கருத்துக்குரியதைக் காணுமல் புறப்பட்டதுதான் பேதமையைக் காட்டுகிறது.

கங்: பேதமையென்பது பெண்களுக்கே உரியது தானே.

ஆழி: உண்மை... அதற்காக மற்றவர்களையும் பேதமையுள் ஆழ்த்துவது...

கங்: தவறென்கிறீரா? உமது பொன்னுன உடலைத் தொட்டுப் புனிதமடையவந்தேன் என்னைப்புறக்கணிக்க வேண்டாம். அது பாவமாகும். கங்கையின் சாபம் கடிதானது

ஆழி: என்ன? (சிரிப்பு) சாபம் இடப்போகின்ருயா... எங்கே பார்க்கலாம்.

கங்: பதியைப் பழிக்கும் பழிகாரி நானல்ல. ஆனுல்... என்னை நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

ஆழி: கங்கா காலாதிகாலமாக யான் செய்துவரும் கடமை... உன்தொடர்பால் பிழைத்துவிடும்? ... உலகில் என்னையும் உன்னையும் படைத்த ஒருவனே உயர்ந்தவன். அவனது ஒப்பற்ற நாமத்தை உச்சரிப்பதைத் தவிர வேறொன்றையும் யான் செய்கறியேன். அதுவே இலட்சியம்.

கங்: உங்கள் உயரியஇலட்சியத்துக்கு என்றும் குந்தகம் விளைக்கமாட்டேன். உங்கள் கருத்துக் காணுகின்ற இன்பமே என்னின்பம். நாதனின் நன்னோக்கை நாடி அவனுக்கத்துக்கருந்துணையாவதொன்றே அரிவையர் கடன்.

ஆழி: கங்கா ... உன் கடமையுள்ளத்தைப் புரிந்துகொண்டேன். எல்லாம் வல்ல இறைவன் நாமத்தை இதய சுத்தியோடு நீயும் உச்சரித்துவா.

கங்: அப்படியே...

இருவரும்: ஓம் ஓம் ஓம்
நமசிவாய...
ஓம் ஓம் ஓம்
நமசிவாய...
ஓங்கார ரூபனே வா வா!
உண்மை யென்ற
ஒருவனே வா வா
பாழ் கான பரமனே வா வா
பக்தர்களின் நாதனே
வா வா
தலைவ உன்றன் தாளினைத்
தந்துகாத்தே அருளுவாய்
நிலைமை பெற்ற முத்தியே
நேர நம்மைப் பேணு
வாய்

ஓம் நமசிவாய-
ஓம் நமசிவாய
ஓம் நமசிவாய-
ஓம் நமசிவாய
ஓம் ஓம் ஓம்

(முற்றும்)

# கவிக்குயிலும்

(11- ம்பக்கத் தொடர்ச்சி)

ஆழ்ந்து யோசிக்கலானுர். பொன்னுன கருத்துக்கள்; கேட்டுப் பழக்கப்பட்ட வாக்கியம். யார் சொல்லியிருப்பார்கள். காந்தியடிகளுக்கு யார் சொன்னதென்று நினைவு வரவில்லை. சரோஜினிதேவி எழுந்தார். பள்ளி ஆசிரியைபோல் விரலை ஆட்டிக்கொண்டு 'பெரியவரே நீங்கள்தான் சொன்னீர்கள்!' என்ருர். காந்தியடிகள் கலகலவென்று மனம் விட்டுச் சிரித்தார்

காந்தியடிகளுக்கு சரோஜினிதேவி பத்து வயது இளையவர் எனினும் காந்தியடிகள் கவியரசியார்மீது வைத்திருந்த அன்பும் மதிப்பும் போற்றுதலுக்குரியது. காந்தியடிகள் கொலையுண்ட உடனேயே ஐக்கியமாகாண கவர்னராயிருந்த சரோஜினிதேவியார் மனமுடைந்து விட்டார்; எனினும் தம் மீது சுமத்தப்பட்டிருந்த பொறுப்பை உறுதியுடனும் கடமையுணர்வுடனும் ஆற்றிவந்தார். அடிகள் மறைந்த மறு ஆண்டிலேயே (1949-ல்) கவிக்குயிலும் நம்மைவிட்டுப் பறந்து விட்டது. கடைசியாகக் கவியரசியார் எழுதி வெளியானது ஒரு முகவுரையாகும். பிரபல பிரிட்டிஷ் அறிஞர்கள் காந்தியடிகளின் வாழ்க்கை பற்றி எழுதிய நூல் ஒன்றுக்கு சரோஜினிதேவியார் அளித்துள்ள அந்த முகவுரையில் காந்தியடிகளை 'தெய்வ மனிதன்' என்று குறிப்பிட்டுள்ளார். இந்த இருவர் நட்பும் அறிஞர் உலகுக்கு ஓர் எடுத்துக்காட்டாக என்றென்றும் விளங்கி வரும்.

# பரதமும் . .

7-ம் பக்கத் தொடர்ச்சியில் குறிப்பிடத்தக்கவர்கள் யார்?

ப- ஈழத்தைப் பொறுத்தளவில் மிராண்டோ ஹேமலதா, ஆனந்தவல்லி சச்சிதானந்தம். சிவகுமாரி இராசையா, பவானி பாலசுப்பிரமணியம், துவாரகா ஆகியோரையும் தமிழகத்தைப பொறுத்தவரையில் டி. வி. எஸ் குடும்பத்தினர் அனிதா பிரிதா ரத்தினம் சகோதரிகள் ஜெயஸ்ரீ ஆகியோரைக் குறிப்பிடலாம்.

கே- கலைஞர்களிடம் எது இருக்கவேண்டும்? எது இருக்கக் கூடாது?

ப- கலைஞர்களிடம் போட்டி இருக்கவேண்டும். அது பொருமை காரணமாக இருக்கக்கூடாது. பரதநாட்டியத்தைப் பொறுத்த அளவில் பாட்டு. தாளம். இவற்றில் ஒரளவு ஞானத்துடன் உடல் வலுவும் இருக்க வேண்டும்.

கே- ஈழத்தில் பரதநாட்டியக் கலையின் வளர்ச்சி பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப- ஈழத்தில் பரதநாட்டியம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியடைந்துள்ளது. இக்கலையின் வளர்ச்சி திருமதி கமலா யோண்பிள்ளை, நீலா சத்தியலிங்கம், ஆனந்தவல்லி சச்சிதானந்தம், சாந்தரமணி மகேந்திரா, திலகவதி கனகசபை போன்றவர்களின் ஆர்வத்தைக் குறிப்பிடலாம்.

கே- ஈழத்து கலாரசிகர் பற்றி உங்கள் கருத்தென்ன?

ப- இக்கலையை தெய்வீகக் கலையாக மதிக்கும் இவர்கள் இக் கலையில் ஆர்வமுடையவர்களாகவும் நல்ல ரசிகத்தன்மை உடையவர்களாகவும் காணப்படுகிருர்கள்.

கே- குச்சிப்பிடி, பரதம். கதகளி, மோகினி ஆட்டம் இவைபற்றி என்ன [illegible] நினைக்கிறீர்கள்? [illegible]

ப- குச்சுப்பிடி நடனத்தில் பாவம் நாட்டியத்திற்கு எடுப்பாக இருக்கும். இந்நடனத்தை பரத நாட்டியத்துடன் கலக்கக்கூடாது. கதகளி, மோகினி, ஆட்டம் இவற்றையும் தனித்தனியே செய்துவரவேண்டும். ஒன்றுடன் ஒன்று கலக்காது இருந்தால் ஒவ்வொன்றினதும் தனித்தன்மை சிதைவுபடாதிருக்கும்

கே: கலைஞர்கள் அரசியலில் ஈடுபடுவது கலையைப் பாதிக்குமா? அரசியலைப் பாதிக்குமா?

ப' கலைஞர்கள் அரசியலில் ஈடுபடுவதால் கலைபாதிக்கப்படுவது என்பதும், அரசியல் பாதிக்கப்படுமென்பதும், தவருன கருத்தாகும்; கலைஞனுக்கு அரசியலில் ஏற்படும்சோர்வு கலையின் ஈடுபாட்டினுல் நீங்கப்பெற்று தனது ஓய்வு நேரத்தை மகிழ்ச்சியாகக் கழிக்க முடிகிறது.

கே: இறுதியாக பரதநாட்டியம் பயில விரும்புபவர்களுக்கு நீங்கள் கூறுவதென்ன?

ப: பரதநாட்டியம் மிகவும் குறுகியகாலத்தில் பயிலக்கூடியதொன்றல்ல சங்கீதம். தாளம் ஆகியவற்றில் ஞானம் உள்ளவர்கள் இளம் வயசிலிருந்தே தமது சக்தியைப் பிரயோகித்து விடா முயற்சியுடன் தொடர்ச்சியாக ஆர்வத்துடன் பயில முற்படவேண்டும். பயிற்சி முடிந்தபின் மற்றவர்களுக்கும் இக்கலையைச் சொல்லிக்கொடுத்து வளர்க்கவேண்டும்.

# சோவியத் . . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தினத்தை இன்று கொண்டாடுகையில் தொழிலாளர் வகுப்பினரும், விவசாயிகளும், சோவியத் அறிஞர்களும் ஒன்றுசேர்ந்து கம்யூனிஸ்ட் கட்சியுடன் மேலும் நெருக்கமாக இணைகிருர்கள். இவ்வாறு சகமக்களும் இணைந்து கம்யூனிசத்தின் வளர்ச்சிக்கு மேலும் தங்கள் ஒத்துழைப்பைநல்கிருர்கள்.

இலங்கைக்கும் சோவியத் யூனியனுக்கும் முதல்முதலாக ராஜதந்திர உறவையும் மற்றும் தொடர்புகளையும் ஏற்படுத்திய காலஞ்சென்ற பிரதமர் திரு எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவை சோவியத்மக்கள் என்றென்றும் மறக்கமாட்டார்கள். இவரது நினைவு எமதுமக்களின்மனதில் எக்காலத்தும் நிலைத்து நிற்கும். காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்காவே இலங்கை-சோவியத் யூனியன் நட்புறவை ஸ்திரப்படுத்த உதவியவராவர். தனது கணவரின் கொள்கைகளை அனுசரித்து திருமதி பண்டாரநாயக்கா எடுக்கும் நடவடிக்கைகளால் இவ்விரு நாடுகளிடையேயுள்ள உறவுகள் மேலும் பலப்படுத்தப்படும்.

சோவியத்- இலங்கை பொருளாதார, கலாச்சார தொடர்பு மேலும் விஸ்தார்க்கப்பட்டு. ஸ்திரப்படுத்தப்பட்டுவருவதையிட்டு சோவியத் மக்கள் திருப்தியும் மகிழ்ச்சியும்அடைகிருர்கள். இலங்கையின் தொழில்வளர்ச்சிக்கு சோவியத் நிபுணர்கள் உதவியுள்ளார்கள். உதவிபுரிந்தும்வருகிருர்கள். உருக்கு. டயர் தொழிற்சாலைகள், மாவரைக்கும் ஆலை ஆகியவற்றை நிர்மாணிப்பதில் சோவியத் நிபுணர்கள் பெரிதும் உதவி புரிந்துள்ளார்கள். எமது பிரதிநிதிகள் இலங்கையரோடு சேர்ந்து நெற்செய்கை பருத்திச் செய்கைக்காக இலங்கைக் காடுகள் பலவற்றை அழித்துக்கொடுத்துள்ளார்கள். சமீபத்தில் இரு நாடுகளும் பரஸ்பர வர்த்தக ஒப்பந்தம் ஒன்றையும் கைச்சாத்திட்டுள்ளன. பல புத்தகங்களும் கட்டுரைகளும் பிரசுரிக்கப்படுகின்றன சோவியத் யூனியனில் இலங்கை பற்றி றேடியோ, டெலிவிஷன் நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றன.

லங்கா-சோவியத் நட்புறவுச் சங்கத்திலுள்ள எமது இரு நாட்டு மக்களிடையே பரஸ்பர நல்லெண்ணத்தையும் உறவையும் ஏற்படுத்த பெருந்தொகையான பணம் செலவழிக்கப்படுகிறது. லங்கா- சோவியத் நட்புறவு மாதம் தற்போது இலங்கையெங்கும் கொண்டாடப்படுகிறது. இது எமது இரு நாடுகளிடையேயும் என்றென்றும் வளர்ச்சியடைந்துவரும் நட்புறவைக் காட்ட ஒரு சிறந்த உதாரணமாகும்.




**வாழ்க்கையின் சோதனை:**
(உண்மை வரலாறு)
கிடைக்குமிடம்: ஆர். செல்லையா, சன்லைற்டையேர்ஸ் அன் றைக்கிளீனேர்ஸ், பெரியகடை, யாழ்ப்பாணம்

மனிதன் பிறக்கிருன்; இறக்கின்ருன். இந்த இருமுனைக்கிடையேயும் அவன் படுகின்ற இன்பதுன்பங்களே வாழ்க்கையென்பது.

ஒரு சிலருக்கு வாழ்க்கை முள்ளாகவும் வேறுசிலருக்கு பஞ்சணையாகவும் இருப்பதுமுண்டு.

இருநிலையிலும் ஒட்டிக்கொள்ளாமல் எங்கோ இருந்து வந்தோம். எங்கோ ஒருநாள் செல்லுவோம் என்ற கருத்துடையவர்கள் சிலர்தான் உள்ளனர்,

இந்த நிலைக்குச் செல்லாமல் தான் வாழுகின்ற வாழ்க்கையிலிருந்துகொண்டே எதிர்காலச்சந்ததிக்கு வாழ்வின்பயன்காணச் செய்வதும் மனிதனுக்குரிய கடனுகும்.

இந்த உண்மைக்கு இலக்காக எம்மிடையே வாழ்ந்துகொண்டிருக்கும் ஒருவரே செல்லையா

நேரடியாகக் கண்டு பேசி உறவாடுகின்ற ஒரு மனிதனுடைய ஜீவியத்தில் இத்தனை நிகழ்ச்சியா? இவ்வாறு நம்மை நாம் மறந்து மூக்கில் விரலை வைத்துவியக்கும்படியாக அமைந்துள்ளது 'வாழ்க்கையின் சோதனை' என்ற நூல்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணப்பிராந்தியத்தில் ஊடுருவிப்போன சாதி வெறிக்கு இலக்காகிய ஒருதனிமனிதன் தனிக்கொடி பிடித்துத்தானே வகுத்துக்கொண்ட இலட்சியப் பாதையிற் செல்லுகிருன்.

எத்தனை சோதனைகள்! எத்தனை துன்பங்கள் அத்தனைக்கும் ஊடே அவன் அவதிப்பட்டாலும் குறிக்கோள் என்னவென்பதை மறந்துவிடவில்லை. மெதுவாகத் தனது இலட்சியத்தை அணுகுகிருன்... இதுவே வாழ்க்கையின் சோதனை கொண்டுள்ள தத்துவம்.

(15- பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REGAL
Jaffna
Daily 4-45, 7 &9-45
Poya days 4 shows
Anouk Aimee
in
A MAN AND A WOMAN
(Eastman color

MANOHARA
Jaffna
Daily 4-45, 7 &9-45 p.m
Poya days 10-30 a. m.
Cornel Wilde
in
BEACH RED
(Color by Delux)

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன்-புஷ்பலதா
சோ—மனோரமா
நடித்த
செல்லப்பெண்

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர்—லட்சுமி
ஜெயலலிதா—அசோகன்
நடித்த
மாட்டுக்கார வேலன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 10-00
போயா நாட்கள் 10-30 மெற்னி
கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணி
நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 125-வது
உயர்ந்த சித்திரம்




சிவாஜிகணேசன் - சௌகார்ஜானகி
அசோகன், வாணிஸ்ரீ, சிவகுமார், பாரதி
வி. நாகையா — ஜி. சகுந்தலா
மற்றும் பலர் நடித்த
உயர்ந்த மனிதன்
கதை வசனம்: ஜாவர் சீதாராமன். பாடல்: வாலி
இசை: எம். எஸ். விஸ்வநாதன்.

# அக்டோபர் புரட்...

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

சோவியத் யூனியன் பொருளாதார உதவியையும் யந்திர உதவியையும் அளித்து வருகிறது. சோவியத் யந்திரங்களும் உபகரணங்களும் வாங்குவதற்கு சுலபமான முறையில் திருப்பிக் கட்டக்கூடிய கடன்களையும் சோவியத் யூனியன் வழங்குகிறது.

இலங்கை உட்பட 35 அபிவிருத்தியடையும் நாடுகளில் சோவியத் உதவியுடன் 220 பெரும் கைத்தொழில் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முதலாளித்துவ நாடுகளைவிட இந் நாடுகளோடு தான் சோவியத் வர்த்தகம் அதிகரித்து வந்துள்ளது.

இதுகாறும் ஏகாதிபத்திய நாடுகள் வைத்திருந்த வர்த்தகத் தனி ஆட்சி இதனால் அற்றுப் போகிறதைக் காண்கிறோம்.

கல்வி நிலையங்கள், மருத்துவ நிலையங்கள், விஞ்ஞான ஆராய்ச்சி நிலையங்கள் இந் நாடுகளில் சோவியத் உதவியுடன் நிறுவப்படுகின்றன. ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகளையும் நிபுணர்களையும் சோவியத் யூனியன் உருவாக்கி வருகிறது.

அக்டோபர் புரட்சியின் தத்துவங்கள் சோஷலிச நாடுகளுக்கும் அபிவிருத்தியடைந்து வரும் சிறிய நாடுகளுக்கும் இடையில் முன்னிருந்ததைவிடக் கூடுதலான ஒத்துழைப்பை ஏற்படுத்தியுள்ளது. சிறியநாடுகள் பின்பற்றிவரும் சமாதான சகவாழ்வு கொள்கையும் கூட்டுச் சேராக் கொள்கையும் அந்நாடுகளை சோஷலிச நாடுகளுடன் மேலும் இறுகப் பிணைக்கின்றன.

இன்று ஆசியாவில் தொடங்கிய தேசிய விடுதலை இயக்கங்களும் ஆபிரிக்காவிலும் தென் அமெரிக்காவிலும் தோன்றியுள்ள சுதந்திரப் புரட்சிகளும் சோஷலிச நாடுகளுடனும் பாட்டாளி மக்கள் இயக்கங்களுடனும் இணைந்து ஒருபெரும் சண்டமாருதம்போல ஏகாதிபத்தியத்தையும் முதலாளித்துவத்தையும் இடித்து நொருக்குகின்றன.

ஏகாதிபத்திய சூழ்ச்சிக்காரரும் பிற்போக்காளரும் இந்தப்பெரும் இயக்கத்தை தடுக்க முயன்றபோதிலும் அக்டோபர் புரட்சி ஆரம்பித்த உலகப்பிரளயம் சகலவிதமான கொடுமைகளையும் அநீதிகளையும் தகர்த்து உலகில் சுபீட்சத்தையும் சமாதானத்தையும் நிரந்தரமாக உருவாக்க வழிவகுத்து வருகிறது.

## நமது நூல் . .

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தத்துவத்தின் உருவமாக வாழ்க்கையின் சோதனையில் செல்லையா தென்படுகின்றார்.

உழைப்பும் நேர்மையும் அவரை முன்னுக்குக் கொண்டுவருகின்றன. ஆயினும் வந்தபாதையைமறந்துவிடக்கூடாதென்பதை உயர்ந்துவிட்ட நிலையிலும் செல்லையா நிரூபிக்கிறார்.

யாழ்ப்பாணத்தின் சூழல் மக்களின் சாதிப்பாகுபாடுகளுடன் யாழ்ப்பாணம் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னிருந்த நிலை, இந்தியாவின் சிலஇடங்கள், துன்பக்காட்சிகள். என்பன நூலில் படம் பிடிக்கப்பட்டுள்ளன

அத்துடன் ஒரு நல்ல கணவனையும் மனைவியையும் உண்மையான தொழிலாளியையும் -புதுமையான முதலாளியையும் நூலில் நாம் காணமுடிகிறது.

வாழ்க்கையின் சோதனை என்கின்ற இந்த நூலின் உள்ளடக்கம் மாத்திரமல்லாது உருவமும் நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

நூலுக்கு விலை குறிக்கப்படவில்லை.

— சுரும்பு

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 2-00 6-00, 9-30
எம். ஜி. ஆர், பானுமதி
நடித்த
மலைக்கள்ளன்

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா ,பிரீபோயா 2-30
சிவாஜி - பத்மினி
நடித்த
உத்தம புத்திரன்
(புதிய கொப்பி)

## வேலைத்தலம்

முசலி. வியாழன்

மன்னார் பெரும்பாக மராமத்து பொறியியலாளரின் கீழ் முருங்கன் என்னும் இடத்தில் ஒரு வேலைத்தலம் முதல்முதலாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வளவுகாலமும் இப்படியான வேலைத்தலங்கள் ஒப்பந்தத்தின்கீழ் செய்யப்பட்டுவந்தன. தற்போது தொழிலிணைப்பு காரியாலயங்கள்மூலம் மராமத்து இலாகவின் கீழுள்ள ஒரு பொறுப்பதிகாரியின் கீழ் இவை இயங்கிவரும்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் — நல்லூரில் பெரியவளவும் புதிய வீடும் விற்பனைக்கு, அல்லது குத்தகைக்குக் கிடைக்கும். தொழிற்சாலைகள் - பண்ணைகளுக்கு தகுதியானது எழுதுங்கள். வெஸ்டன்றேட்ஸ், தபால் பெட்டி 54, யாழ்ப்பாணம். 2356

வீடுகள்

திருநெல்வேலி சிவன் கோவில் ரோட்டில் இரண்டு வீடுகள் விற்பனைக்குண்டு. இல. 36, 36A வீட்டில் விசாரிக்கவும். 2378

இரண்டு மாத நல்ல சாதி கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு இருக்கின்றன. விபரம்: S மகாதேவா, 112, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7211. 2396

### தேவை

நீர் இறைக்கும் இயந்திரங்கள் திருத்துவதற்கு அனுபவம் வாய்ந்த ஒரு மெக்கானிக் தேவை. பைப் பூட்டுதல், மின்சார வயறிங் வேலை மோட்டார் சைக்கிள் ஓடத் தெரிந்தால் நல்லது. போதிய நற்சாட்சிப் பத்திரங்களுடன் உடனே விண்ணப்பிக்கவும். 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2394

### வகுப்புக்கள்

சங்கீதம்:

வாய்ப்பாட்டு, வீணை, ஜலதரங்கம் ஆகியவற்றில் சங்கீத வித்துவான் செல்வி செளபாக்கியலக்ஷ்மி மார்க்கத்தினால் பின்வரும் விலாசமுடைய இடங்களில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. 1. 11, பொன்னப்பா ஒழுங்கை, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். 2. மூளாய், மானிப்பாய். வடஇலங்கை சங்கீத சபைப் பரீட்சைகளுக்கு மாணவர்கள் பயிற்றப்படுவார்கள். தொடர்பு கொள்பவர்கள் 11, பொன்னப்பா ஒழுங்கை, வண்ணார்பண்ணை என்ற விலாசத்தில் வந்து நேரில் சந்திக்கலாம்.

2386

### அறிவித்தல்

வாடிக்கையாளர்களுக்கு வங்கியில் போட்டபணம் திருப்பி எடுப்பதற்கு வேண்டிய வருமான வரி வேலை இலவசம்
திருஞானாஸ் அன் கோ.,
(ஓடிற்றேஸ்) 7081
ராணித்தியேட்டருக்கு அருகாமையில்,
யாழ்ப்பாணம்.
2541

இன்று முதல்
யாழ்-வின்ஸர் திரையில்
தினசரி 4 காட்சிகள்
★ ஜெமினி கணேசன்
★ சரோஜாதேவி
சுந்தரராஜன் - சோ - மனோரமா
நடித்த
ஐந்து லட்சம்

உயர்தர
உருளைக்கிழங்கு உரம்
உங்கள் பயிரின்
பெருமளவு சாகுபடியைப் பெற
எங்களது
உருளைக்கிழங்கு உரக் கலவையை
உபயோகியுங்கள்.
யாழ்மாவட்டத்தில் உபயோகிக்க உகந்தது.
பகுப்புகளுக்கு
உத்தரவாதம்
கொழும்பு கொம்மேஷல் கொம்பனி லிமிட்.
தபால் பெட்டி எண்: 433, கொழும்பு - 2
2539

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிமொழிகள்



இன்பம் எப்போதும் நமது உள்ளத்தில் இருக்கிறது. எனவே மனதை அடக்கிய மனிதன் ஒருவனே உண்மையான மகிழ்ச்சியடைதல் கூடும். மற்றவர்கள் அடையமுடியாது.

0 0 0

உன்னை நீவெற்றி கொண்டிருந்தாலன்றி உனக்குள் நீ இன்பமுறும் சக்தி பெற்றிருந்தாலன்றி உண்மை மகிழ்ச்சியடையமுடியாது.

0 0 0

சாந்தம், சன்மார்க்கம், இன்பம், அன்பு இவற்றை நாம் நம்மிடையே வளர்க்கவேண்டும்.

0 0 0

நமது முன்னேற்றப் பாதையில் பல அபாயங்களைச் சந்திக்க நேரிடும். அச்சமில்லாமல் அவைகளைத்தாண்டினால் நமது இலட்சியத்தை அடையலாம்.

— விவேகானந்தர்

## முக்கிய அறிவித்தல்

1970 நடப்பு வருடத்திற்கு எமது விளம்பரம், உபகாரநிதி, மற்றும் பரிசுகளுக்கு எம்மால் ஒதுக்கப்பட்ட நிதி முடிவடைந்துவிட்டபடியால் மேற்கொண்டு விளம்பரம் எதுகாரணம் முன்னிட்டும் எவருக்கும் கொடுபடமாட்டாது என்பதை அன்புடன் அறியத் தருகிறோம்.

ஆர். வி. ஜி. பீடி

'உற்பத்தியாளர்'

47, பீச்றோட், யாழ்ப்பாணம்.

# மோசடி மூலம் பணம் மாற்றிய மூவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்

## மூவரில் ஒருவர் வங்கிக் காசாளர்!

காலி, வியாழன்

பழைய 100, 50 ரூபா நோட்டுக்களை மோசடி செய்து மாற்ற முயன்றார்கள் என்றதன் பேரில் மூவரை விளக்கமறியலில் வைக்குமாறு காலி மாஜிஸ்திரேட் திரு. ஜே. சேனாதிராசா இன்று உத்தரவிட்டார்.

இப்பழைய நோட்டுக்களை முதல் நாளில் மாற்றும் பொழுது, கூப்பன் புத்தகத்தில் முத்திரையிடாமல் பெரும்பகுதிப் பணத்தை மாற்றிக் கொடுத்தார் எனச் சொல்லப்படும் அம்பலாங்கொடை இலங்கை வங்கிக் கிளையின் காசாளர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதுசம்பந்தமாக இன்ஸ்பெக்டர் டி ஓ செனிவரத்ன தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி வீடொன்றைச் சோதனையிட்டதில் ரூபா 22000 பெறுமதியான புதிய 100, 50 ரூபா நோட்டுக்களைக் கைப்பற்றினர். இதுசம்பந்தமாக வங்கிக் காசாளரும், ஒரு பெண் உட்பட மேலும் இருவரும் இம்மாதம் 14-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## கழுத்து வெட்டப்பட்டு ஒருவர் படுகொலை

காலி, வியா.

திருமணமாகாத ஒருவர் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் தனது வீட்டில் இறந்து கிடக்கக்காணப்பட்டார்.

41 வயதுடைய குலசிறி பந்துவந்துடா என்னும் இவர் சென்ற செவ்வாய்க்கிழமை புத்தளம் பொலிஸ் பகுதியிலுள்ள பந்துவஸ்துடா என்னும் இடத்தில் உள்ள அவரது இல்லத்தில் இறந்துகிடந்தார்.

இவரது பணத்தைக் கொள்ளையிடுவதற்காகவே இக்கொலை நடந்திருக்கலாமெனப் பொலிசார் சந்தேகப்படுகின்றனர்.


இக்கொலை சம்பந்தமாகத் துப்புத்துலக்குவதற்கு பொலிஸ்நாய் வரவழைக்கப்பட்டது. புத்தளப்பொலிஸ் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் சி. நவரத்தினம். சார்ஜன் மெண்டிஸ் ஆகியோர் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

அளவெட்டி கும்பழாவளைப்பிள்ளையார் ஆலயத்தில் ஐப்பசிவெள்ளித் திருவிழாவான இன்றுமாலை காஞ்சிபுரம் மெய்கண்டராதீன தேவாரமணி பி. ஏ. எஸ். இராஜசேகரன் பக்கவாத்தியசகிதம் பண்ணிசைக் கச்சேரி நிகழ்த்துவார்.

## 'ஈழநாடு' ரமழான் சூரலொலி



பக்கத்துறைவான் பசியோடிருக்க தான்மட்டும் பசிபோக்கி வாழ்பவன் நிறை விசுவாசி (முஃமின்) ஆகான் (அல்ஹதீஸ்: கூறுபவர்: இம்னு அப்பாஸ்: ஆதாரம்: பைஹகி)

பக்கத்து வீட்டான் பசித்திருக்கத் தாணுண்ணும்- பொக்குற்றுன் மூமினலன். [மௌலானா உமர் ஹஸரத்]

அண்டையகத்தான் அயர்ந்து பசித்திருக்க-உண்டிகொள்வோன் மூமின் அலன். (மதுரை காதிர் முஹிய்யித்தீன் மரைக்காயர்)

வழங்குபவர்: மௌலவி ஏ. எம், ஏ. ஹசன் [கபூரி]

தொழுகை நேரங்கள்:–

| சுபஹு | உதயம் | ளுஹர் | அஸர் | மஃரிப் |
|---|---|---|---|---|
| 4-39 | 5-59 | 12-20 | 3-18 | 5-51 |

| இஷா | சஹர்முடிவு |
|---|---|
| 7-11 | 4-24 |

ஈழநாடு

சாதாரணவருடம் ஐப்பசி மாதம் 20-ந் திகதி [6-11-70]

## அருளும் பொருளும்

பழைய நூறு, ஐம்பதுரூபாய் நோட்டுகளை, புதிய நோட்டுக்களாக மாற்றுவதற்காக சென்றவாரம் வங்கிகள் முன்னால் மக்களின் நீண்ட வரிசை மணிக் கணக்கில் காத்துக் கிடந்தது. கொழும்பிலே ஒரு வங்கிமுன் நின்ற 'கியூ' வரிசையில் 'ஸ்வீப் டிக்கெட்' எனும் அதிர்ஷ்டலாபச்சீட்டை ஒருவர் விற்க முற்பட்டபோது, அங்கு யாரும் ஒரு சீட்டாயினும் வாங்கவில்லை! ஏன்?

கையிலிருக்கும் பணமே தொல்லையளிக்கிறது. இன்னும் அதிக பணம் கிடைத்தால் எவ்வளவு தொல்லை வருமோ என்ற கவலைதான்! அதிக பணத்தால் அதிக சங்கடம்தான் வருகிறதென்பதை, சென்ற சில நாட்களில் இலங்கையிலே பலரும் கண்டோம். பணம், பணம், அதிக பணம் சம்பாதிக்கவேண்டுமென்று பேயாய் அலைபவர்களை, இங்கு நிதிஅமைச்சரின் நடவடிக்கை சிந்தனைசெய்யவும் மனமாற்றமடையவும் வெகுவாகச் செய்துவிட்டது.

பொருள் அவசியந்தான். தீயவழியில் சேர்த்த பொருளுக்குத்தான் ஆபத்து வருமென்று, பொருள்நெறி இயக்கத் தலைவர் கூறுகிறார். பொருளை அருளாகவும் மாற்றலாமென்று மதுரை குருமகாசந்நிதானம் அவர்கள் கூறுவார்கள். பொருளால் மனஅமைதி ஏற்படாதென்றும், பக்தியே மனஅமைதிக்கு வழியென்றும் தமிழக உயர்நீதிமன்ற தலைமை நீதியரசர் திரு வீராஸ்வாமி சரியாக அறிவுறுத்துகிறார். பக்தி வழியிலே பொருளைச் செலவழிப்பின், அருள்கிடைத்து அதன்மூலம் அமைதியும் பேரின்பமும் கிடைக்கக்கூடியதாக இருக்கும்.

இவ்வுலகில் நமக்குப் பொருள்மட்டுமன்றி அருளும் தேவைதான். பொருளைஈட்ட ஒருசிலருக்குத்தான் முடிகிறது. அவர்கள் தாங்கள் ஈட்டியபொருளை, மற்றவர்களுக்கும் உதவுவதால், அவர்களுக்கு அருள் கிடைப்பதுடன் நாட்டுக்கும் நன்மை ஏற்படுகிறது. சம்பாதித்த பொருளை தாமாகப் பிறருக்கு அளிக்க நமக்கு மனம் எளிதில்வராது. அரசாங்கம் இப்பொழுது அக்காரியத்தைச் செய்து, நமக்கு அருளையும் இன்பத்தையும்தர முன்வந்துள்ளதென்று உணர்ந்தால், செல்வந்தர்களும் இப்போது கவலைப்படுவதற்கு மாறாக மகிழ்ச்சியுடன் நிதி அமைச்சருக்கு நன்றி தெரிவிக்கக் கா[illegible]டல்லவா?

## தமிழ் காங்கிரஸ் பெயர் மாற்றம்: காரியதரிசி கருத்து

யாழ்ப்பாணம், வெள்ளி

'அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்' என்ற பெயரை நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்திற்கேற்ப 'அகில இலங்கை தமிழ் சோஷலிஸகாங்கிரஸ்' என்று மாற்றவேண்டுமென தமிழ்க் காங்கிரஸின் வட்டுக்கோட்டை ஆட்சிமன்ற உறுப்பினரான ஆ. தியாகராசா தெரிவித்துள்ள யோசனை பற்றித் தமிழ்க் காங்கிரஸ் ஆராயவிருக்கிறது.

ஆயினும் தமிழ்க்காங்கிரஸின் கடந்த தேர்தல் விஞ்ஞாபனம் சோஷலிஸக் கொள்கையையே வெளியிட்டிருப்பதால் இந்த இலட்சியத்தைக் கொண்டிருக்கும் தமிழ்க் காங்கிரஸின் பெயரை மாற்றவேண்டிய அவசியம் இருப்பதாகத் தெரியவில்லையென்றும் காங்கிரஸ் நிர்வாகக் காரியதரிசி திரு த சங்கரப்பிள்ளை தெரிவித்தார்.

## தாமதம் ஏன்? எம். பி. கவனிப்பாரா?

துணுக்காய், வியா.

இவ்வருடம் மார்ச் மாதமளவில் கரச்சி, துணுக்காய் பகுதிகளில் உள்ள குடியேற்றக் காணிகளின் வெற்றிடங்களை நிரப்பவும், அத்துமீறிக் குடியேறியவர்களைத் தடுக்கவும் நடைபெற்ற காணிக்கச்சேரி முடிவுகள் இதுவரை வெளிவராததுபற்றி இப்பகுதி விவசாயிகள் கிளிநொச்சி எம். பி. யிடம் முறையிட்டுள்ளனர்.

தங்கள் காணிப்பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்வதற்காக கிளிநொச்சியில் திறக்கப்பட்ட இக்காணி அலுவலகம் துரிதமாகச் செயல்படாததுபற்றி இப்பகுதி ஏழை விவசாயிகள் குறை தெரிவிக்கின்றனர்.

## எவ்வாறு பணம் வந்தது? விளக்கம் தேவை

கோட்டை, வியாழன்

பழைய நாணய நோட்டுக்களை வங்கியில் வைப்புப்பணமாக வைத்துள்ள 2000பேர்களை பணம்பற்றிய விளக்கம் தரும்படி இறைவரித்திணைக்களம்கேட்டுள்ளது.

இன்று பத்து இலட்சத்துக்கு அதிகமான பணத்தைப் பதுக்கிவைத்த ஐவர் பணத்தைத் தெரியப்படுத்தியுள்ளனர்.

## யாருடைய சூ கேஸ்?

யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் 4 11-70 சாயந்தரம் 7 மணியளவில் தீவுப்பகுதி பஸ்தரிப்பில் கண்டு எடுக்கப்பட்ட சிறிய சூட்கேஸ் அ. வல்லிபுரநாதன் என்பவரால் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது உரியவர்கள் தகுந்த அத்தாட்சி காட்டி காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

புதுடில்லி, நவ. 5

உலகப் பிரசித்தி பெற்ற இசை மேதை திரு. ஜெகுதீ மெனுவீனுக்கு சர்வதேச இசைமேதைக்கான நேருவிருது கிடைத்துள்ளது

## அந்தியேட்டி

வட்டுக்கோட்டை சிந்துபுரத்தைச் சேர்ந்த, மூத்தார் அடியிற்றோன்றிய திருமதி மாணிக்கம் இராமசாமி அவர்களின் அந்தியேட்டி இன்று (6-11-70) அவரது இல்லத்தில் நடைபெறும்.

மூத்தார் வழிவந்த மூதாட்டி மாணிக்கம், ஆத்தாளின் றீசனடியாள் செந்தூர் அடியடியாய் வந்துதித்த சீமான்கள், கந்தா வென்றோதுங் கவிமணிகள்- சிந்துபுரச் சிங்கங்கள் சந்நிதியிற் றேர்நாளிற் சாறெடுக்கும், அங்கங்கள் மூத்தார் அடி. வட்டூர் வரகவி தர்மலிங்கம். 2416

இப் பத்திரிகை 'ஈழநாடு லிமிடெட்' ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970ம் [illegible] வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org